OFFICE OF THE REGISTRAR
27 SEP 1949
MADRAS

ஸ்ரீ

# 17 இரகஸ்யங்களின்
# சாரசங்கரகம்.

ஆசிரியர்,

N. பெருமாள் ராமானுஜதாஸர்,

மிராஸ்தார், செவந்தாம்பட்டி,

ஸ்ரீ நடராஜா பிரஸ், துறையூர்.

1949.

விலை] [அணா 0—8—0

R
N49
105979

OFFICE OF THE ... 1949

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமத் வேதாந்ததேசிகன்
திருவாய் மலர்ந்தருளிய
(17) ரகஸ்யங்களின்

# சாரசங்கரகம்.

இஃது

திருவஹீந்தரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்
விஷயம் பண்டித பூஷணம் தேசிகதர்சனுசார்ய
ஸ்ரீ. உப. வே. மஹாமஹோபாத்தியாய
நரஸிம்மாசார்யஸ்வாமியின் திருவடி சம்பந்தம்பெற்ற

செவந்தாம்பட்டி நல்லப்ப ரெட்டியார் குமாரர்
**பெருமாள் ராமானுஜதாஸரால்**
ஷை சுவாமிகளின் நியமனத்தின் பேரில்
இயற்றப்பட்டு

துறையூர்
ஸ்ரீ நடராஜா அச்சுக்கூடம்.
1949.

ஸ்ரீ:

ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகாய நம:

105979

# முகவுரை.

## ஓர் விண்ணப்பம்!

இச்சார சங்கிரகமானது, மாம்பழம் வாங்குகிறவனுக்கு ஒருதுண்டத்தைக் கொடுத்து பழத்தை வாங்க ஆசையுண்டுபண்ணுவது போல ஸ்ரீமத்ரகஸ்யத்ரயசாரம் முதலிய ரகஸ்ய கிரந்தங்களில் ஆசையுண்டாக வேணுமென்று, இச்சங்கரகத்தை எழுதப்பட்டது. இதைப்படிப்பதோடு நிற்காமல் ஒரு நல்ல ஆசிரியனிடம் முறைப்படி (நன்னூல் விதிப்படி) போய் பக்தியுடன் ரகஸ்யார்த்தங்களைக் கேட்டு தெரிந்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் தான் விஷயங்கள் மனதில் நன்ருய் பட்டு க்ஷேமமுண்டாகும். இச்சங்கரகத்திலுள்ள விஷயங்கள் நன்ருய் மனதிற்குத் தெளிவுற்ருலும், சதாசாரியனிடம் ஆசிரியித்து அவனருளும் உபதேசமும் பெருவிட்டால் நல்ல சங்கதிகள் படாது, பட்டாலும் உபயோகப்படாது என்பது அறநூலின் துணிவு!

ஸ்ரீய: பதியான சர்வேச்வரனல் ஸ்ருஷ்ட்டிக்கப்பட்ட ஜீவராசிகள் நான்குவகைப்படும். அவையாவன! தேவர், மக்கள், திர்யக், தாவரம், என்பவை. இவற்றுள் தேவர்கள் என்பது நித்யர்களைத் தவிற மற்றவர்களைக் குறிக்கும். மக்கள் இப்பூவுலகில் வாழ்பவர்களைக் குறிக்கும். திரியக், விலங்கு, பக்ஷி, ஈ, எறும்பு, புழு, முதலாகிய ஜந்துக்களைக்

குறிக்கும் தாவரம், மரம், செடி, கொடி முதலியவை களைக் குறிக்கும். இவற்றுள் தாவரமாகிய மரம், செடி, கொடி முதலியவைகள் ஸ்பரிசமாகிய ஓரறிவுடையவைகள், நகர்வனவாகிய சங்கு முதலியவைகள் உணர்ச்சியோடு நாவினுல் சுவை யறியும் அறிவைக்கொண்டு ஈரறிவுடை யன. எறும்பு முதலியன மேற் கூறிய ஈரறிவோடு மூக்கி னுல் வாசனையறியும் அறிவோடு மூவறிவாயின! வண்டு முதலியன மேற் கூறிய மூவறிவோடு கண்ணுல் பார்க்கக் கூடிய அறிவோடு நான்கறிவுடையவையாயின. விலங்கு பறவை முதலியன காதினுல் ஓசையை யறியும் அறிவொடு ஐயறிவாகும். தேவர் மக்கள் முதலியவர்கள் ஐம்பொறி களால் நுகரும் சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம், என்னும் ஐம்புலன்களோடு மனத்தினுலறிந்து அறியும் அறிவு ஆறறி வாகும். இது தேவர் மக்கட்கு பகுத்தறிவெனப்படும். இப்பகுத்தறிவு மற்றய ஜீவ ஜெந்துக்களுக்குக்கிடையா! "புல்லுமரனும் ஓரறிவினவே, நந்தும்முரளும் ஈரறி வென்ப, சிதலும் எறும்பும் மூவறிவென்ப, நண்டுந் தும்பியும் நான்கறிவெனவே, மாவும் புள்ளும் ஐயறி வினவே, மக்கள்தாமே ஆரறிவுயிரே" என்பது தொல் காப்பியம். இதனுல் மக்கட்கே ஆறறிவென்பது பெறப்பட் டது. இப்பகுத்தறிவாவது, மக்கள் நன்மை தீமைகளை பகுத்தறிந்து சத்வகுண விருத்தியை யுடையவர்களுக்கே உரியது. மற்றதாமதகுண விருத்தியுடையவர்களுக்கறிதற்கு எளிதன்று. ஆனதால் மற்ற மிருகாதிகளும் தாமதகுண விருத்தியை யுடையதால் பகுத்தறிவையறிவதற்கு எட்டா. இது நிற்க, தேவர்களைப்பற்றி ஆராய்வோம். தேவர் களுக்கு சத்கர்மத்தால் வந்த சரீரம். சத்கர்மம் நசித்த

வுடனே ப்ராரப்த கர்ம வசத்தராய் திரும்புகிருர்கள் கர்ம பலத்தைச் செய்வதற்கு பூவுலகத்தில் பரத கண்டமே சிறந்தது. ஆனதால் மற்ற தேவலோகத்திலுள்ளவர்களுக்கு செய்த பலத்தை அனுபவிப்பதற்குத்தான் அதிகாரம் உண்டேயொழிய செய்வதற்கு அங்கு அதிகாரமில்லே. ஆனதால் எல்லா உலகினேப் பார்க்கிலும் இப்பூவுலகமே சிறந்தது. ஏனெனில் கர்ம, க்ஞான, பக்தி, யோகங்களே அனுஷ்டித்தே வீடுபேற்றை யடையவேண்டுமென்று கீதாசாரியன் உபதேசித்தார். ஆனதால் வீடு பேற்றுக்கு முதற் காரணம் கர்மம் என்றேற்படுகிறது பொதுவாக கர்ம பலம் மோக்ஷமடைவதற்கும், சுவர்க்கமடைவதற்கும் நரக மடைவதற்கும் சாதகமாக இருக்கும். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் பகுத்தறிவால்தீயவைகளேஒழித்து சத்கர்மங்களேச் செய்து, அத்தால் வரும் பலனே பகவத்ர்ப்பணம் செய்து பகவத் ப்ராப்தியை யடையவேண்டும். இது கீதாசாரியன் திருவுள்ளம். இச்சத்கர்மங்கள் ஞான யோக, பக்தி யோகங்களுக்கு காரணமாகும். பக்தி யோகம் சக்தியற்றவனுக்கும், காலவிளம்பம்பொருதவனுக்கும் பக்தியோகம் முடிவுபொராது இவைகளே அர்ஜ்ஜுனன் கீதாசார்யனுல் உபதேசிக்கப்பட்டு இது அனுஷ்டிக்க நம்மால் முடியாதென்று மனதில் கிலேசமுற்று கண்ணபிரானேச் சரணமடைந்து நான் உமக்குச் சிஷ்யன், எத்தால் நான் மோக்ஷமடைவேனே அதனேயே உபதேசித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, கண்ணபிரான் கருணையால் அர்ஜ்ஜுனனேப் பார்த்து நீ யெனக்கு நண்பனும், சிஷ்யனுயு மிருப்பதால் இது ரகஸ்யங்களுக்கெல்லாம் மஹா ரகசியமாயும், ஒரே தடவையிலனுஷ்டிக்கக் கூடியதாயும்,

எல்லோராலும் லகுவாய் அனுஷ்டிக்கக் கூடியது என்று சரமசுலோகத்தை உபதேசித்தான். இதனை சரணாகதி யென்றும், ப்ரபத்தி யென்றும் சொல்வதுண்டு. முமுக்ஷு வானவன் சுவர்க்காதி போகங்களெல்லாம் தேன் கலந்த விஷம் போல துன்பம் கலந்த இன்பமாயிருக்குமென்பதை யுணர்ந்து பேரின்பமாகிய மோக்ஷ வீட்டையே அடைய விரும்புவன். இவனே மனிதரில் சிறந்தோன். மற்றவர்கள் நெல்லினுள் பிறந்த பதர்போல மனிதரில் பிறந்து கெட்டானவன்.

மோக்ஷத்திலிச்சையுடைய, முமுக்ஷுவானவன் தெரிந்துக்கொள்ளவேண்டியது தத்வம், இதம், புருஷார்த்தம். இதில் முன்னம் தெரிந்துகொள்ளவேண்டியது, தத்வம், இதை அனுசரித்தே, நிகமாந்த மஹாதேசிகன்

"முத்திக்கருள்சூடமூன்றைத்தெளி மூன்னம்,
இத்திக்காலேற்குமிதம்"

என்று அருளிச்செய்தார். மூன்றுதத்துவங்களாகிய, சித்து, அசித்து, ஈஸ்வரன் என்பவைகளை முன்னம் அறிந்து. அவ்வீஸ்வரனையடைவதற்கு இதமாகிய உபாயத்தை யறியவேண்டும். புருஷார்த்தமாவது, புருஷன் அர்த்திக்கும் (ஆசைப்படுவது) புருஷார்த்தம் எனப்படும். ஆனால் புருஷர்கள், ஆசைப்படுவதெல்லாம் புருஷார்த்தமானால் புருஷன் தனாதிகளையும் சொர்க்காதி போகங்களையும் அனுபவிக்க ஆசைப்படுகிறானேயென்னில், மோக்ஷத்தைத் தவிற மற்றவை புருஷார்த்தமாகா, என்பதைக் கீழ்க்குறிப்பிட்டிருக்கிறோம். அதாவது மோக்ஷத்திலிச்சையுடைய

வனே, புருஷன். அவனுல் அர்த்திக்கப்படுவது புருஷார்த்தம். தத்துவஇத புருஷார்த்தங்களை இதத்துவத்ரய சங்கரகங்களில் விரிவாய்க் காண்க.

இந்த தத்துவ, இத, புருஷார்த்தங்களையடைவதற்கு, சாஸ்த்ரார்த்தங்களை நன்ருய் ஓதியுணர்ந்து ஞானனுஷ்டானங்களை அனுஷ்டித்துப் போருகிற சதாசாரியனிடமேயிருந்து அறியவேண்டும். என்று சாஸ்த்ர ப்ரமாணங்கள் கூறுகின்றன. தேசிகனும், ஆரம்பத்தில் "ப்ரசாதாத் தேசிகேந்தராணும்" என்று அருளிச்செய்தார். ஆனதால் ஆசார்யானுக்ரகமூலமாக, தத்துவ இதங்களையறிந்து புருஷார்த்தத்தையடைய வேண்டுமென்பது பெறப்பட்டது. தான்ரேன்றியாய் ஏடு பார்த்து கற்ற ஞானமெல்லாம், கனவிற்கண்ட பொருளாகும், என்பதில் ஐயமில்லை. ஆகையால் தத்துவ இத புருஷார்த்தங்களையறிவதர்க்கு வழிகாட்டியாயிருப்பதால் ஆசிரியன் ப்ரதான ப்ரயோஜனம்.

## ஆசார்ய லக்ஷணம்.

மருளற்ற தேசிகர் வானுகப்பாலிந்தவையமெல்லாம், இருளற் றிறையவனிணையடி பூண்டுய வெண்ணுதலால், தெருளற்ற செந்தொழிற் செல்வம் பெருகிச் சிறந்தவர்பால், அருளுற்ற சிந்தையினுல் அழியா விளக்கேற்றினரே.

என்கிறபடி இவ்வாறு. க்யாதி பூஜாலாபாதிகளைக் கருதாமல், தன் கன்றுக்கிறங்கிப் பால்சொரியும் தாய்பசு எத்தகைய பலனைக் கருதுகின்றன. அங்ஙனமே சிஷ்யன் உஜ்ஜீவிக்கவேண்டுமென்ற ஓர் எண்ணமே ஆசார்ய

னுடைய ப்ரதான கருணையாகும். இத்தகைய பெருங் குணம் வாய்ந்த பூஜ்ஜியர்களே சதாசார்யராவார்கள்.

## 9 சிஷ்ய லக்ஷணம்.

"ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை இருளனைத்தும், மாற்றினவர்க் கொருகைம்மாறு மாயனும் காணகில்லான், போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ், சாற்றிவளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே"

என்கிறபடி ஆசாரியனையே பரமமான தெய்வமாகக் கருதவேண்டும்.

இங்கு மாணுக்கனுடைய லக்ஷணத்தை நந்நூல் விதிப் படி சற்றுராய்வோம். (சூத்ரம்)

அன்னம் ஆவே மண்ணொடுகிளியே
இல்லிக்குட மாடெருமை நெய்யரி
அன்னவர் தலையிடைகடை மாணுக்கர்.

இதில் அன்னமும், ஆ: பசுவும் முதன் மாணுக்கருக்கு உவமை, மண்ணும் கிளியும் இடை மாணுக்கருக்கு உவமை, இல்லிக்குடம், வெள்ளாடு, எருமை, நெய்யரி (பன்னுடை) இது கடைமாணுக்கர் லக்ஷணம். இதின் அர்த்தங்களை உய்த்துணர்ந்துகொள்க.

(நூல் கற்றலின் வரலாறு)

கோடன் மரபே கூறுங்காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்

குணத்தொடு பழகியவன் குறிப்பிற்சார்ந்
திருவெனயிருந்து சொல்லெனச்சொல்லிப்
பருகுவனன்ன ஆர்வத்தனுகிச்
சித்திரப்பாவையினத்தக வடங்கி
செவிவாயாக நெஞ்சுகளனுகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்துப்
போவெனப்போதல் என்மனர் புலவர்.

இத்தகைய பெருங்குணம் வாய்ந்தவனே மாணுக்கரிற் சிறந்தவனுகும்.

ஒரு குறிகேட் போனிருகாற் கேட்பிற்
பெருகநூலிற் பிழைபாடிலனே
முக்காற்கேட்பின் முறைதெரிந்துரைக்கும்
ஆசானுரைத்த தமைவரக்கொளினும்
காற்கூறல்லது பற்றலனுகும்.

இதன் பொருள், ஆசிரியனிடத்து மாணுக்கன், ஒருமுறை கேட்பதுபோல இரண்டுமுறை கேட்டால் கற்றநூலில் பிழையின்றியறிவன். மும்முறை கேட்டால் சொல்லும் முறைப்படி தெரிந்துவுரைப்பன். ஆசிரியனுரைத்தது சரிவர கேட்பினும் நாலிலொருபாகமே மனதிற்குவரும், இது நந்நூலின் மாணுக்க லக்ஷணத்தின் சுருக்கம். இந்நூலின் விதிப்படியன்றி நாம் இப்போது ஆசாரியனிடத்து கேட்கும் காலக்ஷேபமெல்லாம் இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரியாகவே முடிகின்றன. இத்தகைய கடைமாணுக்க லக்ஷணத்திற்சாராமல் உத்தம சிஷ்யனுகவேண்டும் நோக்கத்தால் இதனை மேற்கோளாகக் காட்டப்பட்டது.

**இனி நாம் ஆசாரியனிடம் நடந்துகொள்ளவேண்டிய விஷயம்**

ஆசாரியனை பரமதெய்வமாய்க் கொள்வதும் தவிர அவன் உபதேசித்த தத்வரகஸ்யார்த்தங்களை மனதிற் கொண்டு சிந்தனை செய்து அனுஷ்டானபரனாய், ஆசாரியனுக்கு நாம் என்னேனை கைமாறு செய்வதென்று கருதி, அவன்பால் நன்றி பாராட்டவேண்டும். அவன் செய்த உபதேசத்தை விபரீதமான ஒழுக்கத்தால் வீணாக்காமல்: "குரும்பரகாஸயேத்திமான் மந்தரயேத்தேந கோபயத்:" என்கிறபடி ஆசாரியனை கண்ட விடத்தும் காணாத விடத்தும் அவனுடைய ஞானனுஷ்டான குணாதிசயங்களை வெளியிட்டும் அவனால் உபதேசிக்கப்பட்ட மந்திரத்தை எவ்விதத்திலும் மறைக்கவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் அவனால் உபதேசிக்கப்பட்ட மந்திரார்த்தங்களும், ஞானமும் நசித்துவிடும் என்பது. ஆகையால் அவனது புகழை வெளியிடுவதும் பூஜிப்பதும் அவனது திருநக்ஷத்ராதி உத்சவங்களைக் கொண்டாடுவதும், ஆகிய வனைத்தும் அவனிடத்து நாம் பெற்ற மஹோபகாரத்திற்கு சிறிதும் ஈடாகாவென்பதையுணர்ந்து "குருந்நாராயணோ பவேத்:" என்று எம்பெருமானே ஆசார்யனது வடிவு கொண்டு தன்னை வாழ்விக்க வந்த தெய்வமாகக் கொள்ள வேண்டும். இன்னொருவிஷயம்.

இச்சிஷ்யர்களுடைய குறைவுபாடுகளையும் எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை.

"நாச்சாதயதிகௌபீநம் நதம்ஸமஸ்காபஹம், சுந: புச்சமிவாநர்த்தம் பாண்டித்யம் தர்மவர்ஜ்ஜிதம்"

இதின் தாத்பர்யம். பொதுவாக மிருகாதிகளுக்கு வாலிருப்பது, பிரஷ்டபாகத்தை மறைப்பதற்கும்,

ஈ, கொசுக்களை யோட்டுவதற்குமே யுண்டாயின். நாய்க்கு வாலிருப்பது ஈ கொசுகளை யோட்டுவதற்கும். பிரஷ்ட பாகத்தை மறைப்பதற்கும் உதவா என்பது.

இதனல் நாம் தெரிந்து கொண்ட விஷயம் ஒருவனுக்குக் கல்வி ஞானமட்டுமிருந்தால் போதாது. ஞானத்துக்குதக்க அனுஷ்டானமு மிருக்கவேண்டும். அனுஷ்டான மில்லாத ஞானம் பிரயோஜனப்பாடாவென்பது. ஆனதால் பிரபன்னனுக்கு ஞானத்திற்குத் தக்க அனுஷ்டானமும், வைராக்கியமுமில்லாவிட்டால் சம்சாரமென்கிற கடலினின்றும் கரையேருன் என்பது திண்ணம்.

இது நிற்க,

நமது வேதாந்த தேசிகனைப் பற்றி சிறிதாராய்வோம். நாடுகள் சிறப்புற்றோங்குவது மறைகளாலேயே என்பது அனைவரும் அறிந்ததே. மறைவகுத்த வழிகளிற் சென்று தேசத்தின் நற்பெயரை நிலைநாட்டுவதே ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாகும். அம்மறைப்பொருளைச் செவ்வனே மாந்தர்க்குணர்த்த இறைவன் கொண்ட அவதாரங்களில் முக்கியமும் சாரதமமானது தேசிகாவதாரம். தூப்புல்த்தோன்றிய அத்தேசிகப் பெருமான் நானிலமும் நல்வாழ்வு வாழ எல்லாத்துறைகளிலும் வகுத்தளித்த வழியைப் பின்பற்றுவதே பிறவிப்பயனகும். அத்தகைய தூப்புல்மாலின் இனிய சிறந்த இன்றியமையாத பற்பல உபதேச மொழிகளை நிதியாகக்கொண்டு அவ்வாறு நடந்து அனைவரும் மகிழ்ந்து வாழவேண்டுமென்று, அடியேன் இத்துறையிலிறங்கினேன். அவருடைய உபதேசமொழிகளைப்பற்றி ஆராய்வோம்.

நமது குரு ரத்னமாகிய வேதாந்த தேசிகன் பரோபகாரமாக திருவாய்மலர்ந்தருளிய ரகஸ்ய கிரந்தங்கள் பல.

அவற்றுள் பண்டிதர்களும் அடியேனைப்போன்ற மந்த மதிகளும் எளிதில் அறியுமாறு அவரவர்களுக்குத் தக்கபடி மணிப்ரவாள நடையில் பாலபாடமாக தத்துவபதவி முத லிய ரகஸ்யக்கிரந்தங்களும் அதிக பாண்டித்தியமுள்ளவர் களுக்குத் தக்கபடி ரகஸ்யத்ரயசார முதலிய கிரந்தங்களை யருளிச்செய்து, 'அதின் சாரார்த்தங்களை தமிழர்களாகிய பாகவதர்களுக்காகவே தமிழில் எளிய நடையில் பாட்டு களாக வருளிச்செய்தும், திருமந்தரம் துவயம் சரமசுலோ கத்திற்கு பத்து பத்துப் பாட்டுகளால், திருமந்தரச் சுருக்கு துவயச்சுருக்கு சரமசுலோகச் சுருக்கென்றும் அருளிச் செய்தும், வைஷ்ணவதினசரி முதலானவைகளையும் சரணு கதி நிஷ்டையாகிய அடைக்கலப்பத்து அபயப்ரதான சாரம் முதலியவைகளும் அருளிச்செய்தும். பரமதநிரஸன மாக பரமதபங்கம் சததூஷணி முதலிய கி ர ந் த ங் க ளை செய்து பரமதங்களைக் கண்டித்தும், ஸ்வமதஸ்தாபனமாக எம்பெருமானுர் செய்தருளிய ஸ்ரீபாஷ்யம் கீதாபஷ்யத் திற்கு, கீதார்த்த சங்கரக முதலிய கிரந்தங்களை யருளிச் செய்தும் இதர மதாந்தரஸ்த்தர்களால் ராமானுஜ சித்தாந் தத்திற்கு யாதொறு இடையூறு வராமல் ர க்ஷி க் கு ம் பொருட்டு சச்சரித்திரரக்ஷை முதலிய கிரந்தங்களைச்செய்து ரக்ஷித்தும், இன்னும் இச்சித்தாந்தத்தின் பொருட்டு அவர் செய்த உபகாரங்கள் பலவாகும். இத்தகைய பெருமை வாய்ந்த நமது வேதாந்த குரு ரத்னத்திற்கு நாம் என்னே கைமாறு செய்வது. நமது உடல் பொருள் ஆவி மூன்றை யும் சமர்ப்பணம் பண்ணுவதைத் தவிர வேறுவழியில்லை. இதற்கு முன்னிட்ட பரமாசார்யர்களாகிய நாதமுனிகள் முதலானவர்கள் தமிழர்களுக்காக ஒரு கிரந்தம் ஒரு பாட்டு களாவது அருளிச்செய்யவில்லை. இன்னுமொரு விசேஷ

ஷம். நமது தேசிகதர்ஸனத்திற்குச் சிறிதபிப்ராய பேத முடைய தென்னுசார்ய சம்பரதாயத்திலீடுபட்ட ஸ்ரீமத் தொட்டையாசார்யசுவாமி, விசிஷ்ட்டாத்வை சித்தாந் தத்தை வாதுசெய்து குறை கூறுபவரை வாதில் வென்று அவர்களுடைய தலையில் எனது இடதுகாலை வைப்பே னென்று பிருது கூறிக்கொண்டிருந்தார்.

ஒருசமயம் அத்துவிதமதவாதிகள் வந்து இவரை வாதுக்கழைக்க, இவரும் அவர்களோடு ஏழுநாள் வாதம் செய்து ஒரு நாள் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பயன் சொல்லத்தோன்ருமல் தயங்கி நாளை சொல்வோம் என்று பதிலளித்துவிட்டு அன்றைய ராத்திரி மனேவியாகூலராய்த் திருவேங்கட முடையானைத் தியானித்துக் கொண்டிருக்க திருவேங்கடமுடையானும் கனவில் வந்து நம் வேதாந்த தேசிகன் அருளிச் செய்த பரமதபங்கத்தை பராமர்சித்தீ ரில்லை. அதைப்பாரும் என்று ப்ரசாதிக்க, உடனே தொட் டையாச்சாரியார் கண்விழித்து பரபரப்புடனே யெழுந்து பரமதபங்கத்தை சோதித்துப் பார்க்கையில் வாதிகள் கேட்ட கேள்விக்குச் சரியான பதில் தோன்றினமையால், ஆச்சர்யப்பட்டு அவருக்குண்டான ஆனந்த சந்தோஷத் திற்கு அளவேயில்லை. மறுநாள் அதிக குதூகலத்தோடு வாதிகளிடம் சென்று அவர்கள் கேட்ட கேள்விக்கு உத் தரம் சொல்லி வாதத்தில் ஜயித்து தன்னுடைய பிருதை நிலைநாட்டிக்கொண்டார். இதனை மனதில் யெண்ணி யெண்ணி நாம் இதுவரையில் தேசிகதர்ஸனத்தில் ப்ரவர்த் திக்காமல் கல்விச்செறுக்கால் வீணே விருதுகூறித் திரிந் தோம் என்று தன்னை யிகழ்ந்து இச்சந்தர்ப்பத்தில் நமக்கு

நிகமாந்த மஹாதேசிகன் செய்த மஹோபகாரத்திற்கு நாம் என்ன கைமாறு செய்வதென்று மனங்கசிந்து நமது பிராணனை அவற்கு அர்ப்பணஞ் செய்வது அல்லது அவருடைய புகழைப்பாடித் திரிவது தவிர அவருடைய அனுக்ரகத்தைப் பெற வழியில்லையென்று கருதி ஸ்ரீ தேசிகனுடைய வைபவத்தை ஒரு கிரந்த ரூபமாகச் செய்து அதற்கு தேசிகவைபவ ப்ரகாசிகையென்று பெயரிட்டு உலகெங்கும் பரவும்படிச் செய்தார். முடிவில் இதை ஒரு சுலோக ரூபமாகவும் வெளியிட்டார்.

"தேசிகோ நிகமாந்தார்ய தத்பக்த்தே
சாத்விகோஜநகா, தத்ச்சூக்த்தே
ப்ரபந்தாச்சா, அந்யத் நாஸ்த்தி
நாஸ்த்திமஹீதலே"

என்றருளிச்செய்து தேசிகருடைய கிருபைக்குப் பாத்திரரானார். இதின் தாத்பர்யம்.

உலகில் தேசிகர் என்றால் நிகமாந்த தேசிகரேயாவர், சாத்வீகர்கள் என்றால், தேசிக பக்த்தர்களேயாவர், பிரபந்தங்களென்றால் தேசிகனருளிச்செய்த கிரந்தங்களே ப்ரபந்தமாகும் மற்றவைகள் இருந்தும் ப்ரயோஜனப்படாவென்பதை யுணர்ந்து நாஸ்த்தியென்று இரட்டித்துச் சொன்னார் என்பதை யுணர்க. ஸ்ரீதேசிகனுடைய பெருமையும் கருணையும் அவருடைய ஸ்ரீசூத்திகளில் பரிசயமுடையவர்களே யறிவர். இவருடைய வைபவத்தில் தொட்டையாசரியர் ஈடுபட்டது பெரிதன்று. இவருடைய கவி வல்லமையையறிந்த மதாந்தரஸ்த்தர்களில் ஒருவராகிய

பண்டிதர் அப்பயதீக்ஷிதர் என்பவர் தேசிகருடைய கவி ரஸத்திலீடுபட்டு இவர் செய்த யாதவாப்யுதத்திற்கு தாமே வியாக்யானம் செய்வதாக பலபெரியோர்களைக் கேட்டு அவர்களனுமதியின் பேரில் வியாக்யானம் செய்தருளினர்.

இப்படி தேசிகனுடைய ரகஸ்யங்களிலும் கவிகளிலும் வைபவங்களிலும் ஈடுபட்டு அனுபவியாதாரில்லை. இவருடைய குணதிசயங்களும் அருமை பெருமைகளும் எட்டிலடங்கா வென்பதை யுணர்ந்து, கடலைக்காண்போருக்குக் கடலை கையிட்டு காண்பிப்பார்போல அடியேனது சிற்றறிவிற்கேற்றவாறு குறிப்பிடப்பட்டன.

அடியேனுக்கு ரகஸ்யார்த்தங்களை உபதேசித்து க்ருதக்கிர்த்தியனாகும்படி செய்த ஆசார்யர்களின் மஹோபகாரத்தை இவ்விடத்தில் குறிப்பிடாமலிருந்தால் செய் நன்றி கொன்றவனாவேன் என்பதை உணர்ந்து இதில் குறிப்பிடத் துணிந்தேன்.

ப்ரதமத்தில், "அறியாக்காலத்து அறியாதன அறிவித்த" என்கிறபடி அடியேனது காலக்ஷேப ப்ரதமாசார்ய சுவாமியாகிய, ஸ்ரீரங்கம் எழு திருமாளிகை, அய்யா வேங்கடதாதாசார்ய சுவாமிகளின் திருவடிகளில் சுமார் 30 வருடங்களுக்குமுன் ஆச்சிரியித்து முதன் முதலாக சில்லரை ரகஸ்யங்களைக் கேட்க வாரம்பித்தேன். அப்போது அடியேனுடைய மந்த மதியால் யாதொரு அர்த்தமும் புரியாமல் கண் கட்டி காட்டில்விட்டதைப்போல விருந்ததும்தவிர வடமொழி பாஷையில் யாதொரு பரிசயமுமில்லாதவனுக்கு, எழுத்துக்களையும் பதச்சேதங்கள் செய்து

அதற்கு அர்த்தங்களேயும் கற்பித்து சில்லரை ரகஸ்யங்களே பலதடவை வுபதேசித்து அதின் சாரார்த்தங்களே ஒரு நோட்டு புக்கில் எழுதிக்கொடுத்தும் தத்வத்ரயங்களின் லக்ஷணங்களே லக்ஷண சமன் வயத்துடன் அருளிச்செய்து இன்னும் பல உபதேசங்களே யுபதேசித்து திரிமத சித்தாந்தங்களே சுருக்கமாக அருளிச்செய்த மஹோபகாரத்தை மறக்கற்பாலதன்று. அவருடைய அனுக்கிரகத்தால் மேலுள்ள ரகஸ்யத்ரயசாரம் முதலிய சிரந்தங்களே காலக்ஷேபம் கேட்கத்துணிந்து சுவாமிகளேத்தண்டம் சமர்ப்பித்துசுவாமிக்கு திருமேனியில் ஒருவித காஸநோய் போலக்கண்டு திருமேனி மெலிந்தும் தளர்ந்திருப்பதைக் கண்டு துக்கமேலிட்டு கண்களில் நீர்பெருக நின்றேன். அதைக்கண்டு ஏன் ஒருவித கவலேயுடையவராயிருப்பதாகத் தோன்றுகிறது என்று கேட்க, அடியேன் தண்டம் சமர்ப்பித்து சுவாமிகளின் திருமேனி நோய்வாய்ப்பட்டு தளர்ந்திருப்பதைக் கண்டு இனியார் அடியேனுக்கும் மற்றவர்களுக்கும் யார் தத்துவார்த்தங்களேயுபதேசித்து அதிர்ஷ்டம் (ப்ரபத்தி) செய்து வைப்பார்கள் என்று தயங்குகின்றேன் என்று விண்ணப்பஞ் செய்தேன்.

சுவாமி, நீர் ஒன்றுக்கும் கவலேப்படவேண்டாம் என்று அருட்கண்ணல் கடாக்ஷித்து, கண்டாம்ஸபூதரான வேங்கடநாதரே திருவஹிந்தரபுரத்தில், சேட்லூர் நரசிம்மாசார்ய சுவாமிகளாக வந்தவரித்துள்ளார். அந்த சுவாமி தான் எனக்கு ஸ்ரீபாஷ்ய முதலான எல்லா சாஸ்த்ரார்த்தங்களேயும் உபதேசித்த ப்ரதமாசார்யரும் பரமாசார்யருமாவார். நீர் அவரிடம் சென்று நான் சொன்னதாகப்

போய் ப்ரார்த்தித்தால் உமக்கு வேண்டிய ரகஸ்யார்த்தங் களை உபதேசித்து அதிர்ஷ்டமும் செய்து வைப்பர் என்றும் அவருடைய சௌலப்ய குணங்களும் தேசிக பக்தியும் சாஸ்த்ரார்த்தத்தில் மஹா பண்டிதருமாகிய அவருடைய குணாதிசயங்களையும் எடுத்துக்காட்டி அவரிடம் ஆச்சிரியிக் கும்படி நியமித்தார். அவ்வருடைய நியமனத்தை சிரசாக வகித்து தண்டம் சமர்ப்பித்து விடைகொண்டு ஊர் வந்து சேர்ந்தேன். மறுபடி சுவாமி அதே காலத்தில் திருநாடலங் கரித்தார்....அதனின்றும் அடியேன் மனச்சோர்வடைந்து ஒன்றுந் தோன்றமல் சம்ஸாரச் சேற்றிலழிந்துவிட்டேன்.

அதில் வெகுநாள் வீணே காலங்களிந்தது. ஆசார்ய ரனுக்ரகத்தால் சிரிது சத்வகுணம் மேலிட்டு, திருவஹீந்தர புரம் சென்று சேட்லூர் சுவாமிகளின் திருவடிகளில் அநேகாவர்த்தி தண்டம் சமர்ப்பித்து, ஸ்ரீரங்கம் சுவாமி களின் நியமனத்தை விண்ணப்பஞ் செய்தேன். சுவாமி இதைக்கேட்டவுடன் ஆ! அப்படியாவென்று சுவாமிக்கு உண்டான ஆனந்தத்திற்களவேயில்லை. உடனே அருள் நோக்கால் கடாக்ஷித்து அப்படியே யாகட்டுமென்று நிய மிக்க, அந்த நியமனத்தின் பேரில் அங்கு யாரும் அறிமுக மில்லாத தேசத்தில் ஒருவனே தனியாக விருந்து ஒருவருஷ காலம் காலக்ஷேபம் கேட்கத் துடங்கினேன்.

ஷை சுவாமிகளின் குணாதிசயங்களை, சுருக்கமாக சிறிது விவரிப்போம். தேசிகதர்ஸனத்தில் ஈடுபட்டவர் களில் முதன்மை பெற்றவர். இவருக்கு மைசூர் பரகால மடத்து சுவாமிகளால் பகவத்விஷயம் பண்டிதபூஷணம் என்று மெடல் பெற்றவர். கவர்மெண்டாரால் சமஸ்கிருத

மஹா மஹோபாத்தியாயபட்டம் பெற்றவர். இன்னும் பல விருதுகளைப் பெற்றவர். தேசிகன் அயக்ரீவவுபாசனை யினல் சகல சாஸ்த்ரார்தங்களையும் நேரிலறிந்ததைப்போல இந்த சுவாமியும் தேசிகருடைய திவ்யஸ்வரூபத்திலீடு பட்டு உபாசித்து அவரருளைப்பெற்று ஸ்ரீ தேசிகன் திரு வுள்ளக்கருத்தை உள்ளபடியறிந்தவராகையால் ஸ்ரீதேசி கன் வடமொழியிலருளிச்செய்த ஸ்ரீசூக்த்திகளை எல்லோரும் எளிதிலறியுமாறு எளிய மணிப்ரவாழ நடையில் அருளிச் செய்த சில்லரை ரகஸ்யம், ரகஸ்யத்ரயசாரம் முதலிய கிரந் தங்களுக்கு தமிழில் ஓர் உரை, வசனரூபமாக எழுதி வெளி யிட்டவரும், இவரே. கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகை யின் மொழிபெயர்ப்பும் ஸ்ரீசதுஸ்லோகி, ஸ்தோத்ர ரத்னத் தின் மொழிபெயர்ப்பும், ஸ்ரீசங்கல்ப சூரியோதயத்திற்கு மொழிபெயர்ப்பும் வெளிப்படுத்தின சுவாமியும் இவரே. பெரிய திருமொழி இரண்டாம் பத்துக்கு பெரிய பரகால சுவாமி வியாக்யானத்துடன் அதற்கு வியரக்யானமாக பரகாலயிருதயத்துடனும் வெளியிட்டவரும் இந்த சுவா மியே. பாகவத தனிச்சுலோகி, ஆழ்வார் வைபவம் ஸ்ரீபரமபத சோபான வியாக்யானம், ஸ்ரீஸச்சரித்திரரக்ஷை மொழிபெயர்ப்பு இவைகளை வெளியிட்டவரும் இந்த சுவாமியே. இந்த சுவாமி வேதாந்ததீபிகையில், பல அரிய பெரிய வியாசங்களையும் வெளியிட்டு சென்னை முதலான விடங்களிற்சென்று நாஸ்த்திக வாதத்திலீடுபட்டவர்களைத் திருத்தி ஆஸ்திக தர்மமாகிய விசிஷ்டாத்துவித சித்தாந்தத் திலீடுபடுத்தியவரும் இந்த சுவாமியே. ஸ்ரீவிசிஷ்டாத்து விதமத சங்கரகமாக ஸ்ரீபாஷ்யத்தின் முகவுரை இவர் எழுதியிருப்பதைப்படித்து, அனுமோதனம் செய்யாத

பெரியோர்களில்லை இவருடைய அரிய பெரிய உபந்நியாசங்களை கேட்டு கேட்போர்களின் மனதை யுருக்கி கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகி மயிர்க்கூச்செரிவதை கவனித்தால் I ரோமஹர்ஷ்ணருடைய கவனம் ஞாபகத்திற்கு வருகிறது. இந்த சுவாமி நம் சித்தாந்தத்திற்கு பாடுபட்டுச் செய்த உபகாரங்கள் மிகவும் பல பலவாகும்.

இவருடைய பெருமைகளும் அரிய குணங்களும் எழுபதாவது திருநக்ஷத்திர வைபவத்தில் ஏற்பட்ட ஞாபகச் சின்னத்தில் விரிவாய்க்காணலாம்.

இத்தகைய பெருமைவாய்ந்த சுவாமியினுடைய அநுக்ரகம், ஸ்ரீராமதரிஸனம் கிடைத்த குகனைப்போல அடியேன் காலக்ஷேபம் கேட்குங்காலத்து சுவாமி செய்த விசேஷகடாக்ஷங்கள்.

அடியேன் சுவாமியிடம் ஆச்சிரியித்த காலம் சுவாமியின் அறுபதாவது ஆண்டுவிழாவிற்குப் பிறகுதான். அதற்கு முன்னம் பரிசய மாத்ரமுண்டு. காலக்ஷேபம் சொல்வதாயிருந்தால் பலபேர்களைக் கூட்டி வைத்தே சொல்வது ஆசார்யர்களின் வழ்க்கம். அடியேன் காலக்ஷேபம் கேட்கும்பொழுது பாகவதர்கள் ஒருவரும் சேரவேயில்லை. நாம் மட்டும் எப்படி தனித்துக் கேட்பது சுவாமிக்கோ திருமேனி தளர்ச்சியடைந்தகாலம் என்று தயங்கினேன்.

---

I ரோமஹர்ஷ்ணரென்பவர் பகவத் பக்தியிலீடுபட்ட ஒரு பெரிய மகாத்மா, அவருடைய உபந்நியாசம் கேட்டவர்கள் மனதை யுருக்கி மயிர்க்கூச்செறியும்படி பண்ணும். ஆனதால் அவருக்கு ரோமஹர்ஷ்ணர் என்று பெயர்.

சுவாமி அதையறிந்து யோசிக்கவேண்டாம் உமக்குத் தனித்தே காலக்ஷேபம் சாதிக்கிறேன் என்று அடியேனை உற்சாகப்படுத்தி அடியேன் ஒருவனுக்கே ஏகதேசத்தில் சாதித்தது முதல் கடாக்ஷம். காலக்ஷேம சுவாமிகள் காலக்ஷேபம் சொல்லும்பொழுது பல சிஷ்யர்களின் முன்னிலையில் ஒரேதடவைதான் சாதிப்பார்கள். மறுநாள் வேறு ரகஸ்யங்களின் அர்த்தத்தை உபதேசிப்பார்கள். சுவாமியோ, மறுநாள் சந்தேகமான விஷயங்களைக்கேட்டு அதற்கு சரியான அர்த்தங்களை திர்ஷ்டாந்தத்தோடு சாதித்து, மேல் விஷயங்களை நடத்துவர். மறுபடியும் புலப்படாவிட்டால் அன்று காலக்ஷேபத்தை நிறுத்தி, தேசிகன் சந்நிதிக்குப் போய் அநேக தண்டம் சமர்ப்பித்து ப்ரார்த்தித்துக்கொண்டு சிந்தனை செய்து வாரும், என்று சொல்வது வழக்கம். இது இரண்டாவது கடாக்ஷம். இப்படியே இரண்டு மூன்று தடவை நடந்தது அதன் பிறகு மனதிற்குத் தெளிவாகும் பரிகரவிபாகாதிகாரம் நடக்கையில், அதில் சங்காபஞ்சக மென்று ஐந்துவித சங்கைகளும் அதற்கு பரிகாரமாக சங்காபஞ்சக நிவாரண மென்று ஐந்துவித சங்கைகளுக்குப் பரிகாரமும் சொல்லி வருகிற கட்டத்தில், அடியேனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. காலக்ஷேபம் கேட்டவுடனே விடுதிக்குப்போய் கேட்ட விஷயங்களை சிந்தனைசெய்வது வழக்கம் ஒரு முறைக்கு மும்முறை சிந்தனை செய்தும் ஒன்றும் புலப்படவில்லை. புலப்படாத விஷயங்களை விடியற்காலையில் சிந்தனை செய்து மனதிற்குப் படாதவிஷயங்களை நோட்டுபுக்கில் குறித்துக்கொள்வது வழக்கம். புலப்படாததால் நோட்டில் குறிக்கவில்லை. சங்காபஞ்சகம் சங்கையாகவே நின்றுவிட்டது. மறுநாள் காலக்ஷேபத்திற்குப் போகவேயில்லை. போகாமல் தேசிகன் சந்நிதிக்குப் போய்

பலமுறை சேவித்து இச்சங்கைகளைச் சொல்லி சரணாகதி பண்ணி ப்ரார்த்தித்தேன். தேசிகன் தீர்த்தப்ரசாதங்களை ப்ரசாதித்து கடாக்ஷித்தார். உடனே சுவாமி திருமாளிகைக்குச் சென்று சுவாமிகளை நேரில் சேவிக்காமல் வெளியில் நின்று சேவித்துவிட்டு ஜாகைக்குப்போய் முதல்யாமத்தில் சுவாமிதனியனை ஒரு முறைக்கு பல தடவை சேவித்து கிரந்தத்தை யெடுத்துப்பார்த்ததில் ஒருவாறு மனதிற்குப் புலப்பட்டது. மறுபடி மூன்றுநாள் வழக்கம்போல் மாலை 3 மணிக்கு காலக்ஷேபத்திற்குப் போய் சுவாமியைச் சேவித்து நின்றேன். என் நேற்றையதினம் வரவில்லையென்று விரைந்து கேட்டார். அடியேன் அச்சத்தால் மெதுவாக நடந்த விஷயங்களை விண்ணப்பித்தேன். சுவாமிக்கு அளவற்ற சந்தோஷமுண்டாய் இப்படியாருக்கும் இந்த யிடத்தில் சந்தேகம் வருவது வழக்கந்தான். ஆனால் உமக்கு தேசிகன் கிருபை பூரணமாயிருக்கிறது. உமக்கு தேசிகன் கிருபை செய்வார். நீர் தென்னாட்டிலுள்ள பாகவதர்க்குள் ஒரு சித்தாந்தப் பரவர்த்தகராவீர் என்று அருள்வாக்கினால் ஆசீர்வதித்து ஷடி சங்காபஞ்சகங்களை ஒரு முறைக்கு இருமுறையாக உபதேசித்து சந்தேக நிவர்த்தி செய்து அடியேனை உத்சாகப்படுத்தினார். இது மூன்றுவது கடாக்ஷம்.

இப்படி அடியேனை யொரு பொருட்டாகக் கருதி பலவிடங்களில் வந்த சங்கைகளுக்குப் பரிகாரம் அருளிச் செய்து கிருதார்த்தனாக்கிய அருள்க் கடலாகிய சுவாமிக்கு உடல் பொருளாவியைத் தவிர என்னே கைமாறு செய்வது. பின்பு ரகஸ்யத்ரய சாரகிரந்தத்தைப் பூர்த்திசெய்து

இன்னும் சித்தாந்தத்தில் தெரிந்துகொள்ள வேண்டிய பல விஷயங்களைப் போதித்து, தேவநாதன் சந்நிதியில் பரந்நியாசமும் செய்துவைத்தார். பின்பு காலக்ஷேபம் பூர்த்தியாகி சாற்றுமுறை செய்யுங்காலத்தில் தண்டம் சமர்ப்பித்து சம்பாவனை செய்யும் சமயத்தில் சுவாமி நீர் இந்த சம்பாவனை செய்வதில் பிரயோஜனமில்லை. நான் உமக்கு சொல்லிவைத்த விசேஷார்த்தங்களை யெல்லாம் பல பேர்க்குச் சொல்லி தேசிகதர்ஸனத்தை விர்த்திசெய்வதுதான் நீர் எனக்குச் செய்யும் சம்பாவனை யென்றருளிச்செய்து இதுதான் பூர்வாசார்யர்களுடையத் திருவுள்ளக் கருத்தென்று சாதித்தருளினார். அடியேன் அப்பொழுதே தண்டஞ் சமர்ப்பித்து, சமயம் வாய்த்த பொழுதே சில அபிப்ராயங்களைக் கேட்கக் கருதி, மணிப்ரவாள நடையில் பயிற்சியில்லாதவர்களுக்கு என்ன செய்வதென்று விண்ணப்பஞ்செய்ய, சுவாமி உமக்கு எப்படி சௌகர்யமோ அப்படித் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லும்படி நியமித்தார். அந்த நியமனத்தின் பேரில்தான் ஸ்ரீதேசிகன் திருவாய் மலர்ந்தருளிய (17) ரகஸ்யங்களின் சாரசங்கரகத்தை தமிழில் எழுதி வெளியிடத் துணிந்தேன். வேறு க்யாதி லாபாபூஜாதிகளைக் கருதியன்று:

இதை யெழுதுவதற்கு, பிரமத்தில் ஸ்ரீமத் வேங்கடதாத தேசிகன் திருவருள் முதற்காரணம் அதாவது சமஸ்கிருத எழுத்துச் சொற்றொடர் முதலிய பதங்களுக்கு அர்த்தங்களை கற்பித்தும் சங்கரகமாக சித்தாந்த விஷயங்களைப்போதித்தும் சில்லரை ரகஸ்யங்களைக் கசடற உபதேசித்ததும் இதனுடைய விசேஷார்த்தங்களும் மற்றுள்ள ரகஸ்யார்த்தங்களையும்

அருட்கடலாகிய ஸ்ரீமத் சேட்லூர் சுவாமிகளால் மணதிற்குத் தெழிவுறும்படி உபதேசித்ததும், ஸ்ரீமத் அகோபில மடத்திற்கு ஆஸ்தான பண்டிதரும், ஸ்ரீபாஷ்ய பண்டிதருமாகிய புத்தங்கோட்டகம் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸாசார்ய சுவாமிகளின் திருவடி பலத்தால் கீழ்க்கண்ட விசேஷார்த்தங்களெல்லாம் உறுதிப்படுத்தப்பட்டன. இவ்வுபகாரத்தை மறப்பனேயாகில் செய்நன்றி கொன்றவனுவேன்.

மேலும் இவ்விடத்திலுள்ள பாகவதர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கியும் சுவாமியின் நியமனத்தின் பேரிலும் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது.

## விஷய சூசிகை.

தத்துவ பதவி முதலாக தத்துவத்ரய சுலகம் வரையிலுள்ள, ப்ரகிருதி, விகுருதியின், உற்பத்திகளும், அண்டாவரணங்களின் விஸ்த்தீரணமும், கால தத்துவத்தின் விபாகங்களும், யுகாதிகளின் கால அளவும், பிரமனது ஆயுள் காலமும், சுத்த சத்துவத்தின் நிரூபணமும், அதிலுள்ள விசேஷ வைபவங்களையும் நிரூபித்து, ஆத்ம வர்க்கங்களின் பிரிவுகளையும், ஆத்ம தத்வம் இல்லை யென்று வாதிக்கும் வாதிகளுக்கு சமாதானமும், தர்ம பூதஜ்ஞானத்திற்குள்ள விசேஷங்களும் ஈஸ்வர நிரூபணமும், திருமந்தரம், துவயம் சரம சுலோகம் முதலிய விசேஷார்த்தங்களும் இதில் எழுதப்பட்டுள்ளன.

இது ஆசாரியன் நியமனத்தாலும், தேசிகன் திருவருளை முன்னிட்டு, மறைப்பென்னும் கள்வன் வாரிக் கொண்டதொழிய நெஞ்சென்னுந்துணைவன் நிறுத்தி வைத்

தின்வற்றை மீண்டு பதித்தனம். இதனைப் பதிப்பதற்கு உதவி செய்தது எமது பரம குருவாகிய சேட்டலூர் சுவாமியினலெழுதப்பட்ட சில்லரை ரகஸ்யங்களின் தமிழ் வியாக்கியானமே பேருதவியளித்தது.

ஸ்ரீமத் ரகஸ்யத்ரய சாரத்தில், குருபரம்பராசார முதல் அர்த்த பஞ்சகா அதிகாரம் வரையில் 5, அதிகாரங்கள் தமிழில் பொழிப்புரையாக எழுதப் பட்டிருக்கின்றன. மேலுள்ள அதிகாரங்களும் எழுத உத்தேசித்திருக்கிறேன். அதற்கு ஆஸ்திக கனதனவான்கள் பொருளுதவி புரிந்தால் கூடிய சீக்கிரம் வெளியாகும்.

## முடிவுரை.

இத்தத்துவ ரகஸ்யத்ரய சாரசங்கரகத்தை கண்ணுறும் பாகவதர்களும், ஞானஸ்திகமுடைய கனதனவான்களும், அம்ஸ பக்ஷிபோல, குற்றங் களைந்து குணத்தைக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். இதிலுள்ள குற்றங்களையும், தவறுகளையும் கரவழுக்களையும், எடுத்துக்காட்டுபவர்க்கு அவர்களுடைய நன்றியறிதலை பாராட்டுவதுமன்றி அவர்களாலெடுத்துக்காட்டும் விஷயங்களை மறு பதிப்பில் ப்ரசுரிக்கப்படும்.

இங்ஙனம்,

பாகவத ஸ்ரீ பாததூளி,

**ந. பெருமாள் ராமானுஜ தாஸன்.**

ஸ்ரீ

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகாய நம:

## விசிஷ்ட்டாத்வைத சித்தாந்தம்.

விசிஷ்டஞ்ச, விசிஷ்டஞ்ச, விசிஷ்டேதயோ: அத்வைதம், விசிஷ்டாத்வைதம், விசிஷ்டமாவது இரண்டு வஸ்த்துக்கள் ஒன்ருய்க்கூடுவது. இரண்டு வஸ்த்துக்களாவது, (சித்து, அசித்துக்கள்) அதாவது ஜீவர்களும் ப்ரகிருதியும், இவையிரண்டோடும் கூடியிருக்கப்பட்ட பிர்மம் ஒன்று. இதனல் இதற்கு விசிஷ்டாத்வைதமென்று பெயராயிற்று.

## இதின் விவரணம்.

ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமானல் மூன்று காரணங்கள் வேண்டும். அவையாவன உபாதான காரணம், சககாரி காரணம். (ஒத்தாசை) நிமித்த காரணம். இந்த மூன்று காரணங்களில்லாமல் ஒரு காரியமும் கைகூடாது. (உதாரணம்) ஒரு குயவன், பாண்டம் செய்யவேண்டுமானல் இந்த மூன்று காரணங்களும் இருந்தே தீரவேண்டும். இதில் உபாதான காரணம் (மண்) சககாரி காரணம் (காலம், தண்ட சக்கராதிகள்) நிமித்த காரணம் (குயவன்.) ஆக இந்த மூன்று காரணங்களுமிருந்தே குயவன் பாண்டம் செய்யவேண்டும். இதைப்போல சர்வேஸ்வரன் ஜகத்ச் சிருஷ்டியாதிகள் செய்வதற்கும் இந்த மூன்று காரணங்களும் வேண்டும்.

அதாவது, விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தில், காலாதி விசிஷ்ட்ட பிர்மம் (சககாரி காரணம்) அதாவது உடன்

காரணம், சங்கல்பாதி விசிஷ்ட்ட பிர்மம் நிமித்த காரணம் சூட்சம சித சித் விசிஷ்ட்ட பிர்மம் உபாதான காரணம். இதை சமவாதி காரணமென்றும் சொல்வதுண்டு. இந்த மூன்று வித காரணங்களுக்கும் பிர்மமே ஆதாரம். ஆகையால் இதிலிருந்துண்டான ஸ்தூல சித சித் விசிஷ்ட்ட பிர்மம் காரியம்—என்று சித்தாந்தமாதலால், ஸ்தூல சித சித் விசிஷ்ட்ட பிர்மத்துக்கும், சூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்ட பிர்மத்துக்கும், அத்வைதம் வருவதால், விசிஷ்டாத்வைதமென்று பெயராயிற்று. (இதன் கருத்து) ஒரே பிர்மம், சூக்ஷ்ம சிதசித் விசிஷ்டமாயும் ஸ்தூல சிதசித் விசிஷ்டமாயும் கூடியிருப்பதால் சகல ஜகத் சிருஷ்டியாதிகளுக்கும் பிர்மமே காரணமாயிற்று என்பதையறிக.

இதை ப்ரகாரி அத்வைதமென்றும் சொல்வதுண்டு. அதாவது ப்ரகாரியொன்று என்பது. "பிரகாரியாவது" விசேஷ்யம், ப்ரகாரமாவது விசேஷணம். நீலோத்கடக: அதாவது குடம் கருப்பு ரூபமுடையது என்று அர்த்தம். இந்த யிடத்தில் குடம் விசேஷ்யம், கருப்பு ரூபமுடையதென்பது விசேஷணம்.

இந்தயிடத்தில் சூக்ஷ்மசித சித்விசிஷ்டத்வம் ப்ரகாரம், பிர்மம் ப்ரகாரி, அப்படியே ஸ்தூல சிதசித் விசிஷ்டத்வம் ப்ரகாரம், பிர்மம் பிரகாரி, ஆகையால் அங்கும் இங்கும் பிரகாரியான பிர்மம் ஒன்ருனபடியாலே இதைப்ரகாரி அத்வைதமென்றும் சொல்வதுண்டு

சமஸ்தமுமான இந்த ஜகத்தும் பிர்மம். இந்த சமஸ்தமும் புருஷ சப்தவாச்சியனான நாராயணன் தான் என்று சாந்தோக்ய புருஷ சூக்த்தங்களில் சொல்லியிருப்பதால் அந்த ஜகத்து பிர்மத்துடன் ஸாமாநாதிகரண்யத்தாலே அத்

வைதத்தை யுடைத்தாயிருக்கிறது—ஸாமான்யாதி கரண மாவது இவைகளுக்கு ஆஸ்ரயமானவஸ்து ஒன்ருயிருப்பது. அதாவது ஒரு அதிகரணத்திலிருப்பதென்று சித்திக்கிறது. இவ்விடத்தில் பிர்மத்தைத் தவிற வேறு ஒன்றுமில்லை யென்று சுருதிகள் சொல்லியிருக்கிறபடியால், அது ஸ்வரூப அபேதத்தைச் சொல்லுகிறதே யொழிய சாமாஞதிகரண்யத்தைச் சொல்லவில்லையே என்ற ஆக்ஷேபத்திற்கு சமாதானம். இந்த சுருதிவிசிஷ்டாத்வைத சித்தாந்தத்திற்கு பாதகமில்லை. (திருஷ்டாந்தம) சோழமண்டலத்தில் அதிசிரேஷ்டஞன ஒரு அரசனிருக்கிருனென்று சொன்னல், இதில் அதிசிரேஷ்டன் என்றபதத்திற்கு அர்த்தம், அவனுக்குச் சமானமான மற்ருெரு அரசன் கிடையாதென்று சொல்லிற்றே யொழிய, அவனுக்கு மனைவி பிள்ளை வேலைக்காரர்கள் முதலியவை கிடையாதென்று சொல்லவில்லை. அப்படிப்போல இங்கு அந்த சுருதியானது அந்த பிர்மத்துக்குச் சரியான மற்ருெரு வஸ்து கிடையாதென்று சொல்லிற்றே யொழிய, வேறு ஜகத் கிடையாதென்று சொல்லவில்லை என்றறியவும்.

விசிஷ்டாத்வைதமாகிய நம்மசித்தாந்தத்தில் அபேதத்தைச்சொல்லுகிற சுருதிக்கு வேறு பிர்மம் கிடையாதென்றறியவும். அல்லது சரீர சரீரிபாவத்தையாவது சொல்லுகிறது. பேதப்ரதிபாதக சுருதியானது, சரீர சரீரிகளுக்கு ஸ்வத: சித்தமான பேதத்தைச் சொல்லுகிறதென்று பேதாபேதத்தைச்சொல்லுகிற சுருதியினுடையபலத்தால் ஒத்துக்கொள்ளுகிருேம் என்பது; விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் ரகஸ்யம்.

ஒரு பிர்மமே உள்ளது. அதைக்காட்டிலும் வேருன ஜீவர்கள் கிடையாதென்று சொல்லும் பக்ஷத்தில், நித்ய

மாணவர்களுள் நித்யனும் சேதனர்களுள் சேதனனுயு மிருக்கிற ஒருவன் பகுபேர்களான சேதனர்களின் காமத்தை யுண்டுபண்ணுகிறான் என்கிற சுருதியில் அநேக ஜீவாத்மாக்களென்றும், அவர்களைக் காட்டிலும் வேறான ஈஸ்வரன் ஒருவனென்றும் அவனுடைய சல்கல்ப்பத்தால் ஜீவர்களுக்கு இச்சை முதலியவைகள் உண்டாகின்றன வென்னும் சுருதிக்கு விரோதம் வரும். இப்படி அநேக சுருதிகளுண்டு. ஆதலால் இவைகளுக்கு விரோதம் வருகிற படியால், ஜீவர்களுக்குள் ஒருவருக்கொருவர் ஐக்கியமும் ஜீவேஸ்வர ஐக்கியமும் சரிப்படமாட்டதென்றிக.

ஜீவர்களுக்குள் ஒருவருக்கொருவர் வேறு என்பதற்கும் அவர்களுடைய கர்மங்கள் அநேகம் என்பதற்கும் லௌகிக திர்ஷ்டாந்தமுண்டு.

அதாவது ஒருமனிதன் பல்லக்கிலேறியிருக்கிறான்; மற்றொருவன் அவனைத்தூக்குகிறான். ஒருவன் சந்தன மிழைக்கிறான். மற்றொருவன் மலந்திரட்டுகிறான்; ஒருவன் புஷ்பந்தொடுத்து விற்கிறான். மற்றொருவன் மாம்ஸம் விற்று ஜீவிக்கிறான். இப்படி அவனவன் செய்த பாப புண்ய கர்மங்களுக்கீடாக அனுபவிக்கிறான். இது ப்ரத்தியக்ஷ சித்தமாதலால், ததாஸ்ரியனான ஜீவர்கள் அநேகர்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. இதனால் ஜீவேஸ்வர ஐக்யம் சரிப்படமாட்டாது. ஆகையால் விசிஷ்டாத்வைத சித்தாந்தமே சுருதி, யுக்தி, அனுபவத்திற்கும் பொருத்தமுடையதென்பதறியவும்.

தாஸன்,

ந. பெ.

ஸ்ரீ

# நியாய சப்தார்த்த விவரணம்.

| | |
|---|---|
| கைமுதிக ந்யாயம் | சிறியவனே ஒரு காரியத்தை செய்யக்கூடும் என்றால் பெரியவன் அதைச்செய்யமுடியும், என்பதை கூறவும் வேண்டுமோ என்று சொல்லும் நியாயம். |
| கோபலிவர்த்த ந்யாயம். | மாடுகளையெல்லாம் பிடித்துக்கட்டு அந்த காளைமாட்டையும் பிடித்துக்கட்டு என்னும் நியாயம். |
| காகதாளி ந்யாயம் | காக்கையேறிற்று பனம்பழம் வீழ்ந்தது என்னும் நியாயம். |
| ஸ்தாலிபுலாலக ந்யாயம் | ஒருபானை சோற்றுக்கு ஒரு அரிசி பதம் பார்த்தால் போதும் என்னும்நியாயம் |
| சிம்மவனகுப்த ந்யாயம் | சிம்மம் வனத்தை ரக்ஷிக்கிறது வனம் சிம்மத்தை ரக்ஷிக்கிறது. அதாவது சிம்மம் இல்லாவிட்டால் வனம் அழிந்துவிடும். வனமில்லாவிட்டால் சிம்மமிருக்க இடமில்லை என்னும் நியாயம். |
| கோமுகத்வீபி ந்யாயம் | பசுத்தோலைப் போர்த்து புலிப்பாய்ச்சல் பாய்வது என்னும் நியாயம் |
| பங்கோரு பரி கங்காநிபதித ந்யாயம் | முடவனுக்கு தற்செயலாக கங்கை தலையில் வீழ்ந்ததென்னும் நியாயம். |
| தாழபலாச தாடங்க ந்யாயம் | பனையின் மடலுக்கு பனை ஓலை யென்று பெயர் அதைச்சுருளாகச் சுற்றிகாதிலணிந்தால் அதுகாதோலை யென்னும் நியாயம். |
| குணாக்ஷர நியாயம் | சங்கு முதலியவைகள் ஊர்ந்து செல்லும் பொழுது அக்ஷரரூபமாய்விழும் கீற்றுகளுக்கு குணாக்ஷரமெனப்படும். |

ஸ்ரீ

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஸ்ரீமத் வேதாந்த பரம குரவேநம:

# ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் திருவாய் மலர்ந்தருளிய (17) ரகஸ்யங்களின்

# சாரசங்கரகம்.

## தத்வபதவி—ரகஸ்யபதவி

ஸ்ரீமாந் வேங்கடநாதார் யகவிதார்கிககேஸரி
வேதாந்தாசார்யவர் யோமேசந்நிதத்தாம் ஸதாஹ்ருதி:

சீரொன்று தூப்புற் திருவேங் கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியு—ளோரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவு வாழ்வு.

ப்ரஸாதாத் தேசிகேந்ராணும் பராவரவிபாகவித்
ப்ரபந்ந: பரமாத்மாநம் ப்ராப்நோதி பரமம்பதம்.

சதாசார்ய ப்ரசாதத்தாலே பராவரதத்வஜ்ஞானம் பிறந்து சர்வேஸ்வரன் திருவடிகளை உபாயோ பேயங்களாகப் பற்றி உஜ்ஜீவிக்கவேண்டும் என்பது இதின் பொருள்.

# தத்துவ பதவி.

## தத்துவங்களின் சுருக்கம்.

இது அசேதநம், சேதநம், ஈஸ்வரன் என்ற வரிசையில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் தாத்பர்யம் மேல் வருமிடங்களில் காண்க.

அசேதன நிரூபணம் — அசேதனமாவது அறிவில்லாதவஸ்து இதை அசித்தென்றும் சொல்வதுண்டு. இது ப்ரகிருதி யென்றும் காலமென்றும், சுத்த சத்துவ மென்றும், தர்ம பூதஜ்ஞான மென்றும் நான்கு வகைப் படும். ப்ரகிருதியாவது எல்லா தத்துவங்களுக்கும் காரண மாயிருப்பதால் இதை மூலப்ரகிருதியென்றும், சத்வாதி குணங்களுக் காசிரியமாயிருப்பதால், திரிகுணமென்றும் சொல்வதுண்டு. திரிகுணமாவது சத்துவகுணம், ரஜோ குணம் தமோகுணம் ஆக மூன்று குணங்கள்.

மூலப்ரகிருதியிலிருந்து மகத்து முதலாகிய (24) தத்து வங்கள் பிறக்கும்.

---

## அவைவருமாறு

ப்ரகிருதியிலிருந்து மகான் பிறக்கும் மகத்திலிருந்து —அஹங்காரம் பிறக்கும் ஆக 3. இந்த அஹங்காரத் திலிருந்து—சாத்வீகம், ராஜஸ, தாமஸ என் அஹங்காரம் மூன்று வகைப்படும்.

சாத்வீக அஹங்காரத்திலிருந்து 11 இந்திரியங்கள் பிறக்கும். அவைவருமாறு தாமஸாஹங்காரத்திலிருந்து தன்மாத்ரங்களும் பஞ்சபூதங்களும் பிறக்கும்.

மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆக 5ம் ஞானேந்திரியம் எனப்படும். வாக்கு, பாணி, பாதம், குதம், உபஸ்தம், ஆக 5ம் கர்மேந்திரியம் எனப்படும், இது பேசுதல், கை, கால், மலம். ஜலம் கழித்தல், இது ஆண்குறி, பெண்குறி, மனம் 1. ஆக இந்திரியம் 11.

தன்மாத்ரமாவது சப்த, ஸ்பரிஸ, ரூப, ரஸகெந்தம், ஆக 5. இந்த தன் மாத்ரையை ஆதாரமாகக்கொண்டு பஞ்சபூதங்கள் பிறக்கும். அவையாவன. பிருதிவி, அப்பு தேயு, வாயு, ஆகாசம் ஆக 5. இதுமண், ஜலம், அக்னி. காற்று, ஆகாயம் என வழங்கப்படும்.

ராஜஸ அஹங்காரம்.

இது கீழ்ச்சொன்ன சத்துவ, தாமஸ அஹங்காரத்திற்கு காரணமாயிருக்கும், அதாவது ஒத்தாசையாயிருக்கும். ஆக தத்துவங்கள் 24. இது அசேதனமாகிய அறிவில்லாத வஸ்துவினின்றும், பகவத் சங்கல்ப்பத்தால் உண்டானவை என்றறியவும்.

காலமாவது

இது விநாடி, நாழிகை, முகூர்த்தம், நாள், பக்ஷம், ருது, அயனம், வருஷம் என்கிற கணக்கிற்கு ஆதாரமாயிருக்கும்.

சுத்த சத்துவமாவது.

ரஜோகுண, தமோகுணங்கள் கலவாத சத்துவகுணசிரியமான திரவ்வியம். இது பரமபதமென்று பேர் பெற்றிருக்கும்.

தர்மபூதஜ் ஞானமாவது

மனிதனுடைய அறிவு மனிதனுக்கு பிற பிறவஸ்த்துக்களை அறிவதற்கு ஒத்தாசையாக இருக்கும். இது ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் பொதுவாயிருக்கும். இது மேலே ஜீவவர்க்க விசாரத்தில் விரிவாய் காணலாம். (சேதன நிரூபணம்)

சேதனமாவது

அறிவுடையவஸ்து இதைச் சித், என்றும், ஆத்மாவென்றும் விவகரிப்பதுண்டு. இது அணுபரிணாமமுடையது. அதாவது அளவிடக்கூடிய வஸ்து.

இது நான் என்னும் சப்தத்துக்குரியதாய் தனக்குத் தானே தோன்றக் கூடியதாயிருக்கும்.

சேதனம் மூன்றுவகை யாயிருக்கும்

இது பத்தர், முத்தர், நித்ய என மூன்று வகையாயிருக்கும், பத்தராவார். பந்தத்தில் கட்டுப்பட்டவர்கள், முக்தராவார் பந்தத்தினின்றும் விடுபட்டவர்கள் நித்யராவார். ஒருகாலத்திலும் பந்தத்தில் கட்டுப்படாதவர்கள். (ஈஸ்வரநிரூபணம்)

ஈஸ்வர நிரூபணமாவது

இவன், எல்லாவஸ்துக்களுக்கும் மேம்பட்டவனுகையால், இவனே சர்வேஸ்வரனென்றும் பரமாத்மாவென்றும் சொல்வதுண்டு இவனுடைய ஸ்வரூபம், விபு அதாவது எங்கும் நிறைந்தவஸ்து சேதனு சேதனவஸ்துக்களுக்கு ஆதார பூதனுய் நியாமகனுய் (நியமிக்கக்கூடியவனுய்) சேஷியாய், (எஜமானனுய்) இருப்பது, இவன் எல்லா விஷயங்களையும், அறியக்கூடிய சர்வஜ்ஞனுய், எல்லாவஸ்துக்களையும் தாங்கக்கூடிய சர்வ சக்தியாய், கருணையுடையவனுய் லக்ஷிமிபதி

யாய் நாராயண வாசுதேவ, விஷ்ணுவாச்சிய சப்தங்களு க்கு உரியவனாய், பரமபதத்தில் நித்ய வாசனாய் இருப்பவன்

☞ இத்தத்துவ சங்கரகத்தினுடைய விரிவுகளை மேலே சொல்லப்பபட்டிருக்கிறது. அங்கு விபரமாய் காண்க.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகாய நம:

# தத்துவ சங்கரகத்தின் (விருத்தி)

## உபோத்காதம் (ஆரம்பம்)

தத்துவமாவது—எப்பொழுதும், உண்மைப் பொருளாய், அழியாத நித்ய வஸ்த்துக்கள். இது, சித்து, அசித்து, ஈஸ்வரன், என்றக்ரமத்திலிருந்த போதிலும், இங்கு அசித்து சித்து ஈஸ்வரன், என்றக்ரமத்தில் எழுதப்பட்டது. இதற்குக் காரணம், சர்வேஸ்வரனுடைய திருவடிகளை உபாயமாகவும் உபேயமாகவும் பற்றுமவனுக்கு முற்படப்ரகிருதியாத்மப்ரமங்கள் கழியும்படி தத்துவத்ரயத்தை யறியவேண்டும். ஆனதால் பிரத்தியக்ஷம் அனுமானம் சப்தம் என்றக்ரமத்தில் முதலில் பிரத்தியக்ஷத்தில் தோன்றக்கூடிய பஞ்சபூதாதிகளும் அவைகளினாலுண்டாகிய, பாஞ்சபௌதிக தேகாதிகளும் முற்பட அறியவேண்டும். ஏனெனில் பிரத்தியக்ஷத்தையேப்ரமாணமாகக்கொண்ட சார்வாகாதி மதங்களையே நம்பி உலகம் பெரும்பாலும் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு காரணம் யாதெனில் இந்த அசேதன வஸ்துக்கள், ப்ரத்யக்ஷத்தில் கண்கூடாக தோன்றுகிறது. மற்ற ஜீவ பரமாத்மாக்களை அனுமானம் சப்தத்தாலே அறிய வேண்டி

யிருக்கிறது. இதுகள் ப்ரத்யக்ஷத்தில் தோன்ருததால், சிலர்க்கு உண்டோ யில்லேயோ என்கிற சந்தேகத்திற்குக் காரணமாயிருக்கிறது.

இது ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தில், தத்துவம் (26) இதில் அசேதனம்(24) தத்துவம் ஜீவன்(25) வது தத்துவம், ஈஸ்வரன் (26) வது தத்துவம், ஆனதால் அசேதனமாகிய (24) தத்துவங்களே முற்பட அறிந்தால்தான் (25-26) வது தத்துவங்களாகிய ஜிவேஸ்வரர்களே அறிவதற்கு ஏதுவாகும். இந்த வரிசைக்கிரமம், பூர்வாசார்யர்களாலும் ஸ்ரீமத் வேதாந்தாசார்யராலும் உபநிஷித்துக் களிலிருந்து எடுத்து ஆதரித்து வந்திருக்கிருர்கள்.—அதாவது பாலிலிருந்து அமிர்தம் எடுப்பதுபோல உபநிஷித்தென்னும் க்ஷீரசமுத்திரத்திலிருந்து பூர்வாசார்யர்களுடைய மனதென்னும் மத்தினுல் கடைந்து அமிர்தமாகிய தத்துவங்களே யெடுத்தார்கள்.

இது பூத: என்னும் பகுதியிலிருந்து, பூதாதிகளும் தேகம் இந்திரியம் முதலியவைகளாகப் பரிணமித்திருக்கும். அசேதன வஸ்துகளேச் சொல்லி அதை ஆதாரமாக உடைய ஜிவாத்மாவைச் சொல்லப்படுகிறது. அதன் பிறகு விஞ்ஞான சக்தியினுல், சித்து அசித்துக்களாகிய ஒவ்வொரு வஸ்துக்களிலும் மறைந்து வஸிக்கும் அந்தர்யாமியாகிய பரமாத்மாவை நிரூபிக்கப்படுகிறது. ஆனதால் அசேதன திரவியங்களே முற்பட ஆரம்பிக்கப்பட்டது. உபோத்காதம் முற்றிற்று.

## அசேதன நிரூபணதிகாரம்

அசேதனமாவது அறிவில்லாத வஸ்து. இதற்கு ப்ரவிர்த்தியுண்டேயாகிலும் நாம் ப்ரவிர்த்திக்கிறோம் என்கிற கர்த்துத் வாதிகள் இல்லையாதலால் இதுகளை அசேதனமென்றது. இந்த அசேதன திரவியம்; திரிகுண மென்றும் காலமென்றும் சுத்தசத்துவமென்றும் மூன்றுவகைப்படும்; தர்மபூதஜ்ஞானத்தையும் சேர்த்து நான்கு வகைப்படும் என்று சொல்வதுண்டு தர்பூஜ்ஞானம் அசேதனமாயிருந்தாலும் ஞானஸ்வரூபமுடையது அது சேதனனுக்கு விஷேஷணமாகையால் அதைச் சேதனநிரூபணத்தில் பூர்வாசார்யர்களால் நிரூபிக்கப்பட்டது. அங்கு கண்டு கொள்க.

## திரிகுண நிரூபணம்.

திரிகுணமாவது, சத்வ ரஜஸ் தமோகுணங்களோடு கலந்திருப்பது இது மகான் முதலிய வஸ்துக்கள் உற்பத்திக்குக் காரணமாயிருக்கும். ஆனதால் இந்ததிரிகுணத்தை மூலப்ரகிருதியென்றும் சொல்வதுண்டு.

இது கேவலப்ரகிருதியென்றும் ப்ரகிருதி விகுரிதியென்றும் கேவலவிகுருதி யென்றும் மூன்று வகைப்படும். விகுருதியாவது, ப்ரகிருதியினின்றும் மாறுபடக்கூடிய வஸ்துக்கள். அதாவது அதினின்றும் வெளிப்படக் கூடிய வஸ்துக்கள். கேவலப்ரகிருதியாவது, ஒன்றிலிருந்து உண்டாக்கப்படாததாயும் ஒன்றிற்குக் காரணமாயும் இருப்பது. இது மூலப்ரகிருதி ஒன்று. ப்ரகிருதிவிகுருதியாவது, ஒன்றிலிருந்து உண்டாக்கப்பட்டு மற்றொன்றுக்குக் காரணமாயும்

இருப்பது. அவைகள் மகத்து, அஹங்காரம், ஐந்துதன் மாத்ரை, ஆக ஏழு. கேவல விகுருதியாவது. தான் ஒன்றுக்கும் காரணமாயில்லாமல் தான் மற்ற சிலகாரணமாகியத்ரவ்யங்களிலிருந்து உண்டாகியவைகள். அவைகள் பஞ்சபூதங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனது ஒன்று ஆக பதினாறு. ஆக தத்துவம் 24. இந்த தத்துவத்தின் உற்பத்திக்ரமங்களை மேல்வருமிடத்து காண்க.

இந்தப்ரகிருதியினின்றும் மகான் பிறக்கும். இது ஆத்மாவிற்கு அத்யவசாயத்தை யுண்டாக்கும் பொழுது துணையாக விருக்கும், ஆனதால் இந்த மகானை புத்திலக்ஷணமென்றும் சொல்லப்படும். இம்மகானிலிருந்து, அஹங்காரமுண்டாகிறது. இது சாத்வீகாதி குணங்களின் பேராலே சாத்வீகாஹங்காரம், தாமசாஹங்காரம், ராஜஸாஹங்காரம் என மூன்று வகைப்பட்டிருக்கும்.

குணங்களின் விசேஷணங்கள் அவை வருமாறு சத்வகுணம், ஞானம் முதலிய சுகாதிகளுக்கு ஏதுவாய் சிலருக்கு அத்யந்தாதி சயிதமாய் மோக்ஷோபாயத்திற்கு உபயுக்தமாயிருக்கும். ரஜோகுணம் ஆசை மேன்மேலும் விருத்தியாவதற்கும், அது முடிவுபெருவிட்டால், துக்கத்திற்கு ஏதுவாய் அந்யதாஜ்ஞானத்திற்கும், அதாவது ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாக நினைப்பது முதலியவைகளுக்குக் காரணமாயிருக்கும். தமோகுணம், அஜாக்கிரதை, சோம்பல், நித்ரை முதலியவற்றிற்கும், விபரீதஜஞானத்திற்கும் காரணமாயிருக்கும்.

இந்த மூன்று குணங்களும் சமங்களானபோது மகாப்ரளயம். எதுபோலவெனில் ஒரு சரீரத்தில் வாத,

பித்த கபங்களைப்போல. ஒரு சரீரத்தில் வாத, பித்த கபங்கள் சமமானால் சரீரம் நசித்துவிடும். வாதம், பித்தம் தூக்கி நின்றால் சரீரம் நிலைத்திருக்கும். அதைப்போல, ப்ரகிருதியினின்றும் உண்டாகிய ஒரு குணம் தூக்கிநின்றால், மகதாதி விகாரங்களுண்டாம். இந்த அகங்காரம் மகத்திலும், மகத்துப்ரகிருதியிலும் அடங்கும்போது அவ்யக்தம் என்றும், இது பிர்மத்தில் லயிக்கும்போது தமசு என்றும், அக்ஷரமென்றும் சொல்லப்படும்.

## இந்திரிய உற்பத்தி

ராஜஸாஹங்காரத்தை யிடையிட்டுக் கொண்டு (காரணமாகக் கொண்டு) சாத்வீகா ஹங்காரத்தினின்றும் பதினொறு இந்திரியங்கள் பிறந்தன. இவை ஆந்தரமென்றும், பாக்கியமென்றும் இரண்டுவகைப்படும். ஆந்தரமாவது சரீரத்திற்குள் வியாபரித்திருக்கும் இந்திரியம். இது மனம் என்று பேர் பெற்றிருக்கும். இந்த மனோயிந்திரியம் சங்கல்பஸ்மிருதிகளுக்குக் காரணமாயிருக்கும். சங்கல்பமாவது ஒன்றைச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறது. ஸ்மிருதியாவது முன்பு பார்த்ததை நினைத்துக்கொண்டு மறுபடியும் பார்க்கவேணுமென்று எண்ணுகிறது. இது ஆத்மாவிற்கு அத்யவசாயத்தை யுண்டாக்குவதற்கு அதாவது ஒரு விஷயத்தை நிச்சயப்படுத்துவதற்குச் சாதகமாயிருக்கும்.

இந்த மனோயிந்திரியம் சப்தாதி விஷயங்களில் ப்ரவிர்த்தித்தால் பந்தகாரணமாகும். அதாவது சம்ஸாரத்திற்குக் காரணமாகும். இந்த மனதை அறிவைக்கொண்டு நல்வழிப் படுத்தினால் மோக்ஷ ஏதுவாகும். எல்லா விஷயங்களுக்கும்

மூலகாரணமாயிருப்பதால் மனோ இந்திரியம் எல்லா இந்திரியங்களுக்கும் மேம்பட்டது. ஆனதால் இதனை மகானென்றும் சொல்வதுண்டு.

பகிர் இந்திரியமாவது சரீரத்திற்கு வெளியிலிருக்கும் பத்து இந்திரியங்கள். இது கர்மேந்திரியம் (5) ஞானேந்திரியம் (5) ஆகப்பத்து. இதில் கர்மேந்திரியமாவது; வாக், பாணி, பாத, பாயுரு, உபஸ்தம், அதாவது (ஆண்குறி பெண்குறி) இது செய்கைகளுக்குக் காரணமாயிருப்பதால் கர்மேந்திரிய மெனபேர் பெற்றிருக்கும்.

ஞானேந்திரியமாவது துவக், ஜிஹ்வா, சக்ஷுஸ் ஆக்ராணம், ஸ்ரோத்ரம், ஆக (5) இது முறையே, சரீரம், நாக்கு, கண், மூக்கு, செவி, என, வழங்கப்படும். இது ஸ்பரிஸ, ரஜ, ரூப, கந்தம், சப்தம், இவைகளைக்ரகிக்கும். இந்த இந்திரியங்கள் ஒன்றை யறியக்கூடிய சக்தியையுடையது. ஆனதால் இதற்கு ஞானேந்திரியமென பெயராயிற்று.

இந்த ஞான, கர்மேந்திரியங்கள், மனோ இந்திரியத்திற்கு அனுபவ கருவிகளாகவிருக்கும்.

## பஞ்சபூத உற்பத்தி.

தன்மாத்ரத்தின் சில விவரணம். தாமசாஹங்காரத்தினின்றும், சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்று ஐந்து தன்மாத்ரம் பிறக்கும். தன்மாத்ரமாவது, பாலுக்கும் தயிருக்கும் நடுவிலுள்ள பரிணாமாவஸ்த்தை அதாவது சூக்ஷமாவஸ்த்தை. இது சூக்ஷம பூதமெனப்படும் இந்த தன்மாத்ரைகளும் குணங்களும் வேருயிருக்க சிலவிடங்களில்

குணங்களின் பேராலேயே தன்மாத்ரத்தைச் சொல்லி யிருக்கிறது. தன்மாத்ரமானது பஞ்சபூதங்களின் உற்பத்திக்குக் காரணமாகிய நாமரூபமில்லாத சூக்ஷ்மாவஸ்த்தையையுடைய பதார்த்தமானதால், அதனின்றும் உற்பத்தியாகிய, சப்தஸ்பரிச, ரூப, ரஜ, கந்தங்களின் பேராலேயே விவகரிக்க வேண்டியிருக்கிறது. ஆனதால் அதன் காரணமென்னவெனில், சூட்சம தசையிலுள்ள வஸ்த்துக்களே தூலதசைக்கு வருகிறபடியால், உபசாரமாகச் சொன்னதே யொழிய குணமாகாது எது போல வெனில் (தாள பலாச தாடங்கந்நியாயம்) போல அதாவது நீளமாக விருக்கும் பனையோலையை ராவி சுருளாகச் சுற்றி காதிலணிந்தால் அதைக்கா தோலையென்று விவகரிப்பதைப் போலவும், பஞ்சிலிருந்து நூற்றதற்கு நூல் என்று பெயராயிற்று நூலை தரியிற்பூட்டி நெய்தால் அதற்கு துணியென்று பெயருற்று. இப்படி வெவ்வேறு பெயர்கள் அமைந்தாலும் காரணமாகிய பஞ்சிலிருந்தே காரியமாகிய நூல் துணியென்று விவகரிக்கப்படுகிறது. காரணமாகிய பனையோலையிலிருந்தே காரியமாகிய காதணியென்று பெயராயிற்று. இப்படி வேவ்வேறு அவஸ்தா பத்தியேயுள்ளதே தவிர வஸ்துவேறல்ல. இதைப்போல சூட்சமா வஸ்தையில் தன்மாத்ரையென்னும் பேராலே விவகரித்து தூலா வஸ்த்தையில் குணங்களின் பேராலே அதாவது சப்தாதி முதலிய குணங்களின் பேராலே விவகரித்த போதிலும், காரணமாகிய தன் மாத்ரையைவிட காரியமாகிய குணங்கள் வேறல்ல வென்று நிச்சயிக்கப்பட்டது. (இதில் ஒரு ஆட்சேபம்)அப்படியானல் ப்ரகிருதியென்கிற தத்துவம் ஒன்றே யென்று செல்லவேண்டும் இருபத்துநாலு என்று சொல்லுவானே யெனில், ப்ரகிருதியை விடாதே தொடர்ந்து வருகிற அவஸ்தைகள் வெவ்வெரு யிருப்பதால், இருபத்தி

ளுலென்று சொல்வதில் விரோதமில்லை. இத்தன்மாத்ரையை யிடையிட்டுக்கொண்டு அதாவது (காரணமாகக் கொண்டு) பஞ்சபூதங்கள் பிறக்கும் அதாவது, பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், ஆகபூதம் (5) இது (பூமி ஜலம், அக்னி, வாயுவு, அல்லது காற்று, ஆகாயம்) என்று விவரிக்கப்படும்.

## பஞ்ச பூதங்களின் உற்பத்திக்ரமம்

சப்ததன்மாத்திரையிலிருந்து ஆகாசமும், அதினின்றும் ஸ்பரிசதன்மாத்ரையைக் கொண்டு வாயுவும், அதினின்றும் ரூபதன்மாத்ரையைக் கொண்டு, தேஜசும், அதனின்றும் ரஜதன்மாத்ரையைக் கொண்டு அப்புவும். அதினின்றும் கந்ததன்மாத்ரையைக் கொண்டு பிரிதிவும் உண்டாயின. ஆக தத்துவங்கள் (24)

இதுகளின் விபரம் மூலப்ரகிருதி மகத்து அஹங்காரம் (3) இந்திரியம் (11) தன்மாத்ரம் (5) பூதங்கள் (5) ஆக (24).

இந்த பஞ்ச பூதங்களில் வாயுவைப்பற்றிய சில விவரங்கள் அதாவது இந்த வாயுவின் உட்பிரிவுகள் பத்துவகை.

1. **பிராணன்:**—தேகத்திலிருந்து ஞானேந்திரியங்கள் மூலமாய் சில பாகம் போவதும் வருவதுமாயிருப்பது.

2. **அபானன்:**—அபானத்தின் வழியாய் போவதும் வருவதுமாயிருப்பது.

3. **வியானன்:**—சரீரமெல்லாம் பரவிக்கொண்டிருப்பது. இந்த வாயுவுதான் ரத்தத்தை தேகமுழுவதும் பரவச் செய்வது.

4. **உதானன்:**—நாபியிலிருந்து கபாலம் வரையிற் போய் வந்து கொண்டிருப்பது.

5. **சமானன்:**—அன்னாதிகளைச் சீரணஞ் செய்து அவற்றின் சத்தைச்சேர்க்க வேண்டிய இடத்திற் சேர்த்து அசத்தை மல, ஜல ரூபமாய் வெளிப்படுத்துவது.

6. **நாகன்:**—வாந்தி செய்விப்பது.

7. **கூர்மன்:**—கண்களை மலரச்செய்வது.

8. **கிருகரன்:**—தும்மலுண்டாக்குதல்.

9. **தேவதத்தன்:**—கொட்டாவியை யுண்டாக்குதல்.

10. **தநஞ்சயன்:**—பிராணன் போனபின்பும் தேகத்தி லிருப்பது. ஆக வாயுக்கள் (10)

## ஜீவர்களின் சரீர விவரணம்.

ஜீவர்களின் பூர்வகர்ம சேஷங்களுக்குத் தக்கபடி பஞ்சபூதங்களின் செயற்கையால் வந்த சரீரம். இது பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் வந்ததால் பஞ்சபௌதிகசரீரமென்று பெயராயிற்று. இதை பஞ்சீகரணத்தால் வந்த சரீர மென்றும் சொல்வதுண்டு.

## பஞ்சீகரண விவரணம்.

பஞ்சீகரணமாவது, பிரிதிவு, அப்பு, தேயு, வாயு ஆகாசம், ஆக ஐந்து பூதங்களில் ஒவ்வொரு பூதத்தின் பேர் பாதியை வைத்துக்கொண்டு, மற்ற பேர்பாதியை நான்காகப் பிரித்து ஒரு பூதத்தின் பாதியில் மற்ற நான்கு பூதங்களின் எட்டில் ஒரு பாகத்தை அதாவது அரைக்கால் பாகத்தைச் சேர்த்தால் முழுபாகமாகிறது. இதற்கு பஞ்சீ

கரணமென்று பெயர். இதன் விபரங்களை தத்துவசாஸ்த ரங்களில் காண்க.

ஐம்பூதம் பத்தாக்கி அவைபாதி நன்நான்காக்கி நாலொடு நாலைக்கூட்ட வந்தது தூலபூதம். என்னும் செய் யுள்படி பார்க்க

## அண்ட ஆவரணங்களின் விவரணம்.

இந்த அண்ட ஆவரணங்களும் பஞ்சீகரணத்தால் தான் விருத்தியடையப்படுகிறது. ஒவ்வொரு பூதங்களி லும் மற்றை நான்கு பூதங்களின், அரைக்கால் பாகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி கலக்காவிடில் விர்த்தியா வதற்குக் காரணமில்லை. தன்மாத்ரை மட்டும் தான்கலப் பில்லாத சூட்சம பூதங்கள். மற்றவைகள் ஒன்ருே டொன்று கலக்கப்பட்டேயிருக்கும்.

## ஜம்புத்தீவின் விபரம்.

இந்த ஜம்புத்தீவு லக்ஷயோஜனை விஸ்தீரணமுள்ளது. இதனைச்சுற்றிலும் உப்புக்கடல் சூழ்ந்திருக்கும். இதின் விஸ்தீரணம் இரண்டு லக்ஷம் யோஜனையுள்ளது. இதனைச் சுற்றிலும் பிலக்ஷத்தீவு சூழ்ந்திருக்கும் இதின் விஸ்தீரணம் இரண்டு லக்ஷம் யோஜனை. இதைச்சுற்றிலும் கருப்பஞ் சாற்றுக்கடல் சூழ்ந்திருக்கும். இதின் விஸ்தீரணம் நாலு லக்ஷம் யோஜனை. இதைச்சுற்றிலும் ஜான்மலித்தீவு சூழ்ந் திருக்கும். இதின் விஸ்தீரணம் நாலு லக்ஷம் யோஜனை. இதனைச் சுற்றிலும் மதுக்கடல் சூழ்ந்திருக்கும். இதின் விஸ்தீரணம் எட்டு லக்ஷம் யோஜனை இதைச்சுற்றிலும் நெய்க்கடல் சூழ்ந்திருக்கும். இதின் அளவு பதினறு லக்ஷம் யோஜனை. இதைச்சுற்றிலும் கிரவுஞ்சத்தீவு சூழ்ந்

திருக்கும் இதின் அளவு பதினறு லக்ஷம் யோஜனே. இதைச் சூழ்ந்திருக்கும் பாற்கடல். இதின் அளவு முப்பத்திரண்டு லக்ஷம் யோஜனே. இதைச்சுற்றிலும் சாகத்தீவு சூழ்ந் திருக்கும். இதின் விஸ்தீரணம், முப்பத்துரெண்டு லக்ஷம் யோஜனே. இதைச்சுற்றிலும் தயிர்க்கடல் சூழ்ந்திருக்கும். இதின் விஸ்தீரணம் அறுபத்துநாலு லக்ஷம் யோஜனே. இதைச் சுற்றிலும் புஷ்கரத்தீவு சூழ்ந்திருக்கும். இதின் விஸ்தீரணம் அவ்வளவே, இதைச்சுற்றினும், பொன்மய மான பூமி சூழ்ந்திருக்கும். இதின் விஸ்தீரணம் பத்து கோடி யோஜனே. இதைச்சுற்றிலும் லோகாலோகமலே சூழ்ந்திருக்கும். இதின் மேற்பரப்பு பஞ்சாசதகோடி யோஜனே விஸ்தீரணம். இந்த மலேயின் பிரகாசத்தால் சூரிய சந்திரர்களின் பிரகாச மில்லாமலே பிரகாசிக்கக் கூடிய உலகமென்பர். இதைச்சுற்றிலும் சக்ரவாளகிரி சூழ்ந்திருக்கும். அதற்கப்புறம் இருள் சூழ்ந்த பெரும் புறக்கடல் சூழ்ந்திருக்கும். அதற்கப்புறம் அந்தகாரம் (இருட்டுலகம்) அதற்கப்புறம் அண்டப்பொத்திச்சுவர் சூழ்ந்திருக்கும். அதற்குப் பதின் மடங்கு அளவுடைத் தாய் ஜலத்தால் சூழப்பெற்றிருக்கும். அதற் குப் பதின் மடங்காய் அக்நி சூழ்ந்திருக்கும். அதற்குப் பதின் மடங் காய் வாய்வு சூழ்ந்திருக்கும். அதற்குப் பதின்மடங்காய் அஹங்காரம் சூழ்ந்திருக்கும். அதற்குப் பதின்மடங்காய் மகான் சூழ்ந்திருக்கும். அதன் பிறகு அளவு கடந்ததாய் ப்ரகிருதியால் சூழப்பட்டிருக்கும். இதில் அநேக அண் டங்களும் ஆவரணங்களும் உற்பத்தியாயிருக்கும்.

மலரின் மணம்போல திருமால் தன்னுடைய ஸ்வரூப சக்தியால் எங்கும் வியாபித்திருக்கும் இப்ரகிருதி விகுருதி யின் உற்பத்திகளும் அண்டாவரணங்களின் விரிவுகளேயும், தேவர், மக்கள், நரகர் வசிக்கும் லோகங்களேயும் பாகவத

முதலிய புராணங்களில் விரிவாய் காண்க. விரிவஞ்சி விடுத்தனம்.

ப்ரகிருதி, விக்ருதி நிரூபணம் முற்றிற்று.

---

## காலதத்துவ நிரூபணம்.

காலமாவது சத்வாதி குணங்களுக்கு வேறுபட்டதாய் எதிர்கால, நிகழ்கால, செல்காலம் என விவகரிப்பதற்கு விசேஷ ஏதுவாயிருக்கும் இது ரூபமில்லாதது. எங்கும் வியாபித்திருக்கும். சத்வாதி குணங்களுக்கு வேறுபட்ட தாயிருக்கும். சத்வாதி குணங்களுக்கு வேறுபட்டதா யிருந்தாலும் சீதகாலம், உஷ்ணகாலம் என்னுமாப்போலே சத்துவகாலம், தாமசகாலம், ராஜஸகாலம் என்று, சத்வாதி குணங்களுக் காசிரியமாய் குணங்களின் பேராலேயே விவகரிக்கப்படும்.

## கால அளவின் விபரம்.

கண்ணிமைப் பொழுது (15) கொண்டது ஒரு காஷ்டை. காஷ்டை (30) கொண்டது ஓர்கலை. கலை (30) கொண்டது ஒரு முகூர்த்தம். முகூர்த்தம் (30) கொண்டது இராப்பகலுள்ள ஒரு நாள். நாள் (15) கொண்டது ஒரு பக்ஷம். பக்ஷம் (2) கொண்டது ஒரு மாதம். மாதம் (2) கொண்டது ஒரு இருது. இருது (3) கொண்டது ஒரு அயனம். அயனம் (2) கொண்டது ஒரு வருஷம் இது மனித வருஷம்.

இந்த மனித வருஷம் ஒரு தேவநாள். இந்த தேவ நாள் (360) கொண்டது ஒரு தேவ வருஷம்.

(யுகக்கணக்கு.)

| | தேவ வருஷம் | மனிதவருஷம் |
|---|---|---|
| கிருதயுகத்திற்கு | 4800 க்கு | 1728000 |
| திரேதாயுகத்திற்கு | 3600 க்கு | 1296000 |
| துவாபரயுகத்திற்கு | 2400 க்கு | 864000 |
| கலியுகத்திற்கு | 1200 க்கு | 432000 |
| ஆகயுகம் 4 க்கு வருஷம் | 12000 | 4320000 |

## பிரமனது ஆயுள் கணக்கு.

இப்படி ஆயிரம் சதுர்யுகம் பிரமனுக்கு ஒரு பகல். இந்தப் பகல் ஒவ்வொன்றும் (71) சதுர்யுகங்கொண்ட மநுவந்திரங்கள் (14) ஆகின்றன. பிரமனது இரவுக்கும் அவ்வாறே சதுர்யுகம் ஆயிரம். இரண்டாயிரம் சதுர்யுகம் பிரமனுக்கு ஒரு நாள். இவ்வித நாள் (360) கொண்டது. அவருக்கு ஒரு வருஷம். இவ்வித வருஷம் (100) கொண்டது பிரமனது ஆயுள். இந்த ஆயுள்காலம் பரா என்று பெயர். ஒரு பராவுக்கு மனித வருஷம் மூன்றுகோடியே பதினொரு லக்ஷத்து நான்காயிரங்கோடி மனுஷ்ய வருஷங்கள்.

பிரமனது பகற்காலத்தில் சூட்சமப்ரகிருதியிலிருந்து, தூலங்களாகிய பிரபஞ்சம் உண்டாகின்றன. இதைச் சிருஷ்டி காலமென்று சொல்லப்படும். இரவு வரும்பொழுது சூட்சமமாகிய மூலப்ரகிருதியிலடங்குகின்றன. இதை ப்ரளயகாலம் என்று சொல்லப்படும். ஆனால் இதை அவாந்தரப்ரளயமென்றும் பிரமனது ஆயுள்காலத்தில் உண்டாகும் பிரளயத்திற்கு மகாப்ரளயமென்று சொல்லப்படும்.

பிரமனது பகலிரவிற்கு காலச்சக்ரம் எனப்படும். இந்த காலத்தின் படியைக் கண்டால் (பழுதே பலபகலும் போயினவே) யென்று சிந்தித்து காலத்தால் கலங்காத ஸ்தானத்தை யடைவதற்குக் காரணமாயிருக்கும்.

இந்த லீலாவிபூதியில் அதாவது ப்ரகிருதியால் விருத்தி யடையப்பட்ட பிரபஞ்சத்தில் ஈஸ்வரன் காலத்தை யெதிர் பார்த்து நடத்துகிறான். ஏனெனில் இன்ன காலத்தில் இன்னது நடக்கவேண்டுமென்று சங்கல்ப்பித்திருக்கிறான். அவன் சத்ய சங்கல்பனாகையால். அதற்கு விருத்தமாக நடப்பதில்லை நித்ய விபூதியிலோ, காலம். ஈஸ்வரனை எதிர் பார்த்து நடக்கிறது. (இது கால நிருபண விஷேஷணம்.

## சுத்தசத்துவ நிருபணம்.

சுத்த சத்துவமாவது. ரஜோகுண தமோகுணங்கள் கலவாமலும், ப்ராகிருத சத்வத்திற்கு வேறுபட்டதாய், சுத்த சத்துவகுணத்திற்கு ஆஸ்ரயமாயிருப்பதொரு திரவியம். இந்த சுத்த சத்துவத்திற்கும், ப்ராகிருத சத்துவத் திற்கும் சில வேறுபாடுகளுண்டு. அதாவது, சத்துவ, ராஜஸ, தமோகுணங்களில் ஒவ்வொரு குணத்திலும், மூன்று குணங்களும் கலந்தேயிருக்கும். எப்படியெனில், சத்துவத்தில், ராஜஸ, தாமதமும், ராஜஸத்தில் சத்துவ தாம தமும். தாமஸத்தில், சத்துவ, ராஜஸமும். இதைப் பிரிக்க முடியாமலிருக்கும். எதுபோலவெனில், வெளுப்பு, சிகப்பு, கருப்பு நூல் கலந்த முப்பிரி கயிறு போல ஒன்றை விட்டு ஒன்று பிரியாமலேயிருக்கும்

சுத்தசத்துவமானது, இப்படி ஒன்றுக்கொன்று கலவாமல் ஒரே சத்துவமயமாய், சுயம் பிரகாசமாயிருக்கும்

அதுவிரஜையென்னும் நதியால் சூழப்பட்டும், சோமசவன மென்னும், அசுவத்தவிருக்ஷ முதலான ஜோதிர்விருக்ஷங் களும், ஐரம், மதீயமென்னும் தடாகங்களால் சூழப்பட்டு மிருக்கிறது. தேஜோமயங்களாயிருக்கி இதன் படியைக் கண்டால் பிர்மாதி லோகங்களெல்லாம், நரகமாய்த்தோன் றும்படி அத்யந்தாதிசய போக்யமாயிருக்கையாலே, இத்தை பரமபதமென்றும் எப்பொழுதும் அனுகூல சுபாவ மாயிருப்பதால் ஆநந்தமயமென்றும், ஞானபலம், ஐஸ் வர்யம், விரியம், சக்தி, தேஜஸ், ஆக இந்த ஆறுகுணங்க ளுக்கும், உபயுக்தமாயிருப்பதால், சாட்குண்ய மயமென் றும், பஞ்சோபநிஷத் மந்தரங்களால் சொல்லப்படுகிற படியால், பஞ்சோப நிஷத்மயமென்றும். அப்ராகிருத பஞ்சபூதாத்மக மாகையாலே பஞ்ச சக்திமயமென்றும், நித்யங்களான பூதங்களும், விக்ரக, பூஷண, ஆயுத, மண் டப கோபுராதிகளுமாக ப்ரவிர்த்தித் திருக்கிறபடியால், இதை நித்யவிபூதியென்றும் சொல்லப்படும். இது ஈஸ்வர னுக்கும், நித்யருக்கும், முக்த்தர்களுக்கும் வேண்டும்போது சரீராதி பரிரகங்களுக்குக் காரணமாயுமிருக்கும்.

கீழ்ச்சொன்ன திரிகுணம். சம்சாரி ஜீவர்களுக்கு பந்தஸ்தானமாய் கீழெங்கும் அநந்தமாயிருக்குமாப் போலே, சுத்த சத்துவமும், நித்ய, முக்தர்களுக்கு, மோக்ஷ ஸ்தானமாய் மெலெங்கும் அநந்தமாயிருக்கும். சத்வ, ரஜோ தமோகுணங்களுக்காசிரியமான தெய்வங்கள் விஷ்ணு, பிரமன், ருத்திரன் என்று சொல்லப்படும். விஷ்ணு சத்துவகுணசிரியராய் நிவர்த்திதர்மத்திற்கு ஏதுவா கிய சாந்தசம,தமாதிகுணங்களுக்கும் தத்வக் ஞானத்திற்கு

காரணமாயும், ரக்ஷகத் தொழிலுக்கு ஏதுவாயிருக்கும். ரஜோகுணம் ப்ரவிர்த்திக்கேதுவாய் ஆசை சுகதுக்காதிகளுக்குக் காரணமாயும், பிர்மாவுக்கு சிருஷ்டிக்கு உபயுக்தமாயிருக்கும். தமோகுணம் சோம்பல் நித்திரைக்கு ஏதுவாய், நித்ரைக்கு பங்கமானல் கோபமும் உண்டாகும். இது சம்மார கர்த்தாவான, ருத்திரனுடைய தொழிலுக்கு ஏதுவாயிருக்கும்.

நித்ய விபூதியில் இப்படிக்கொத்த குணாதி தோஷங்களில்லாமல், சுத்தசத்துவமயமாய், பரவாசுதேவ முகூர்த்தமாய், நித்ய முக்தர்களோடு ஆநந்தானுபவமாய் அனுபவித்துக் கொண்டிருப்பது. இது சுத்த சத்துவமயம்.

சுத்தசத்துவ நிரூபணம், முற்றிற்று.

**அசித்ப்ரகரணநிருபணாதிகாரம் சம்பூர்ணம்**

---

## ஜீவப்ரகரண நிருபணா திகாரம்.

### ஜீவஸ்வரூபலக்ஷணம்.

ஜீவனாவான் அணுபரிணாமமுடைய சேதனன். அணுவாவது ஓர் அளவு கருவியாகச் சொல்லப்படும். அளவாவது சூரிய கிரணம் சாளரத்தின் வழியாகப் பிரவேசித்து அதன் காந்தியில் இடையில் பறக்கும் துகள் என்றும், ஓர் மயிரினை இரண்டாக வகுத்து அதில் நூற்றிலொரு பாகமென்றும் சொல்லப்படுகிறது. ஆனதால், அணுத்வேஸதி சேதனத்துவம், ஜீவஸ்யலக்ஷணம், என்று லக்ஷணசமன் வயம் சொல்லப்பட்டது. இதன் விரிவுகளை, மேலே ஈஸ்வரஸ்வரூப லக்ஷணங்களில் விரிவாய்க் காணலாம். அங்கு கண்டுகொள்க.

சேதனமாவது அறிவுடையவஸ்து, அதாவது ஞானஸ்வரூபனென்று சொல்லப்படும். இச்சேதனன், அணுவானபடியால், விபுவாகிய ஈஸ்வரனைக் காட்டிலும் வேறுபட்டவன். இவன் ஈஸ்வரனுக்கு(ச்சேஷபூதன்) உளப்பட்டவன். இவன் (ஸொஸ்மைபாசமானன்) அதாவது தனக்குத்தானே தோன்றக்கூடியவன். இவனது ஸ்வரூபம், ஞானத்துவம், ஆநந்தத்துவம், அமலத்துவம், சத்யத்வம், அணுத்வம், என்று சொல்லப்படும். ஞானமாவது தனக்குத்தானே தோன்றுகையும், பிறவஸ்துக்களை தர்மபூதஜ் ஞானத்தைக் கொண்டு அறிகையும். (தர்மபூத ஞானத்தைப் பற்றி இதின் முடிவில் சொல்லுவோம்.) ஆனந்தமாவது எப்பொழுதும் துக்கமில்லாமல் ஆநந்தமாயிருப்பவன். இவனுக்கு துக்கம் உண்டாகிறதே யென்னில் இந்திரிய சம்மந்தத்தால் வந்ததே யொழிய சுபாவமன்று. அமலத்துவமாவது (மலரகிதன்) அஞ்ஞான மில்லாதவன். அதாவது பரிசுத்தமுடையவன். சத்யத்வமாவது எப்போதும், பெருத்தல், சுருங்குதல் முதலிய விஹாரங்களற்றவனாய், அழியாத நித்யவஸ்துவாயிருப்பவன். இவன் நிரவயவத்துவ, சேதன, தகன, க்லேசன, சோஷண ரகிதன்.

அதாவது அவவயமில்லாதவன். வெட்டத்தக்கவனல்லன், எரிக்கத்தக்கவனல்லன், நனைக்கத்தக்கவனல்லன், உலர்த்ததக்கவனல்லன் என்பது. (அணுத்துவம் முன்பே சொல்லப்பட்டது. அங்கு காண்க.)

தர்மபூதஜ் ஞானத்தைப்பற்றிய சில விபரங்கள். தர்மபூதஜ்ஞானமென்பது. மனிதனுடைய அறிவு இதை பராக்

கென்றும் சொல்வதுண்டு. அதாவது தனக்குத் தோன்ருமல் பரர்களுக்கேத்தோன்றுவது, எதுபோலவெனில் ஒரு தீபத்தை வீட்டில் ஏற்றினல் வீடெங்கும் பிரகாசித்து அவ்வீட்டிலுள்ள வஸ்துக்களையும் காட்டிக் கொண்டு தன்னையும் காட்டிக்கொண்டிருக்கிறது. இப்படி தன்னையும் காட்டிக்கொண்டு, பிறவஸ்துக்களையும் காட்டினபோதிலும் வீட்டிலுள்ள தீபம், பிறவஸ்துக்களை காட்டின போதிலும், இந்த வஸ்துக்கள் நம்மால் காட்டப்படுகிறதென்று தன்னைத்தான் அறிகிறதில்லை. அதைப்போல இந்தத்தர்ம பூதஜ்ஞானமாகிய அறிவு ஆத்மாக்களுக்கு, பிறவஸ்துக்களைக் காட்டினபோதிலும் பிறவஸ்துக்கள் நம்மால்தான் ஆத்மாக்களுக்குக் காட்டப்படுகிறதென்று தன்னைத்தான் அறிய சக்தியில்லை. ஆனதால் பரர்களுக்கே பிரயோஜனமாகையால் இதை பராக்கென சொல்வதுண்டு.

(இதில் ஒரு ஆக்ஷேபணையுண்டு. அதாவது மனிதனுடைய ஆத்மாவே, ஞானஸ்வரூப மென்று சொல்லப்பட்டிருக்க அதற்கு வேறேயொரு அறிவுஎதற்காக வேண்டும் எனில், ஆத்மஜ்ஞானம் தன்னைத் தானே யறியக்கூடியதே தவிற. பிரவஸ்துக்களை யறிவதற்கு யோக்யதையில்லை. ஆனதால் ஆத்ம ஞானத்தை, ப்ரத்யக்கென்றும், அதாவது தனக்குத்தானே தோன்றக்கூடிய தென்றும், சொல்வது தர்மபூதஜ்ஞானம். பரருக்கே தோன்றுவதால் பராக்கென்றும் சொல்வது. இந்த தர்மபூதஜ்ஞானம் ஈஸ்வரனுக்கும் உண்டு. அவனுடைய தர்ம பூதஜ்ஞானம் விபுவாயிருக்கும். ஜீவர்களுடைய ஜ்ஞானம் அவரவர்கள் பூர்வகர்மத்துக்கு தக்கபடி விரிந்தும், சுருங்கியுமிருக்கும்.

## இது தர்மபூதஜ்ஞானத்தின் ஸ்வரூப லக்ஷணம்.

(ஜீவாத்மாவைப்பற்றிய சில விவாதங்கள்) ஜீவனுகிய ஆத்மஸ்வரூபத்தை, பிர்மாவானவர், அசுரேந்தரனுகிய விரோசனனை மோகிப்பிக்கும் பொருட்டு, தேகமே ஆத்மாவென்றும். இந்திரியங்களே ஆத்மாவென்றும். பிராணன் ஆத்துமாவென்றும், புத்தி ஆத்மாவென்றும் உபதேசித்ததை சில அசுரசுபாவ முடையவர்கள் நம்பி பூர்வபக்ஷம் செய்கிருர்கள். (இதற்கு சமாதானம்)

தேஹேந்திரியமந: ப்ராண-த்தீப்ய: அந்ய: அநந்ய: சாதன:- நித்யோவ்யாபிப்ரதி க்ஷேத்ரம். ஆத்மா பின்னச்சுதசுகி = என்று ஆத்ம சித்தியில் ஆளவந்தார் அருளிச்செய்தார். இதன் தாத்பர்யமாவது, ஆத்மா, தேகம், இந்திரியங்கள், மனது, பிராணவாயு, புத்தி இவைகளுக்கு வேறுபட்டவன் என்றும் தனக்குத்தானே தோன்றுபவன், நித்யன் அழியாதவன் தேகமுழுதும் வியாபரிக்கத் தக்கவன். ஒவ்வொரு சரீரத்திலும் தனித்தனியே வசிக்கக் கூடியவன். எப்பொழுதும் சுதாவாகவே சுகியாயிருப்பவன் என்பது. இவன் (மாறி மாறி பல பிறப்பு பிறந்தாலும்.) ஸ்வரூபத்தில் நாமாந்தரங்கள் வருவதில்லை. எந்த உலகத்திலும் ப்ரவேசிக்கத்தக்கவன். ஆனதால் தேகமே ஆத்மா வென்ருல், தேகம் பஞ்சபூதங்களினுடைய சமுதாயத்தாலுண்டாயது. அது பெருத்தல், சுருங்குதல் முதலிய விகாரங்களும். கை, கால் முதலிய கர்மேந்திரிய ஞானேந்திரியங்கள் தனித்தனியாயிருத்தலாலும், ஒரு தேகத்தில் பல ஆத்மாக்கள் இருக்கவேண்டிவரும்; அப்படியிருக்கக்காரணமில்லை. அப்படியிருந்தால் அகம், ஆத்மா

என்றபடி சரீரத்தில் நான் என்று சப்திக்கிறவன், ஒரு வனாகையாலும் ஒருவனுக்கு சிரசில் வெய்யலும், காலில் ஜலமும் பட்டால் சிரசில் உஷ்ணமும், காலில் குளிர்ச்சியும் தோன்றுகிறது. இரண்டையும், அறிகிறவன் ஒருவனாகக் காண்கையால், பல ஆத்மாக்கள் இருக்கக்காரணமில்லை

இந்திரியங்கள் ஆத்மாவென்றால் ஒருவனுக்குக் கண் கெட்டும் காது முதலிய இந்திரியங்கள் கெட்டும் சரீரத்தில் ஆத்மாயிருக்கக் காண்கிறோம் ஆனதால் இந்திரியங்கள் ஆத்மாவல்ல. பிராணன் ஆத்மா வென்றால் இவன் தூங்கும் போது இந்திரியங்கள்செயலற்று,சரீரத்தைப் பிரேதம் போலக் காண்கிறோம். அப்பொழுது பிராணவாயு, ஓடிக் கொண்டிருக்கிறது பிராணவாயுவே ஆத்மாவானால், பிராணவாயு ஓடிக்கொண்டிருக்கும் போது மற்ற இந்திரியங்கள் தங்கள் தங்கள் செய்கைகளை சாக்ரதசையில் செய்வது போலச் செய்துகொண்டிருக்க வேண்டும். தூங்கும் போது அப்படிக் காணப்படவில்லை. ஆனதால் பிராண வாயுவைக்காட்டிலும், ஆத்மா வேறு' பஞ்சபூதங்கள் சடமாயிருந்தாலும் அது ஒன்று சேர்ந்தால் சைதன்யமுண்டாகிறது. எதைப்போலவெனில், சுண்ணாம்பு, வெற்றிலை பாக்கு, மூன்றுஞ் சேர்ந்தால் மூன்றிலுமில்லாத சிகப்பு நிறம் எப்படி யுண்டாகிறதோ அதைப்போல பூதங்கள் ஒன்று சேர்ந்தால் சைதன்யமுண்டாகிறது என்று சார்வாகாதி மதத்தை யனுசரித்தவர்கள் பிடிவாதமாக சாதிக்கிறார்கள். ஆனால் காரணமில்லாமல் காரியமில்லை. காரணத்திலில்லாத சிகப்பு நிறம் காரியத்தில் வந்ததென்றால், காரியமாகிய சிகப்பு நிறத்தைப் பிரித்துப் பார்த்தால், நிகப்புறம் இல்லாமலிருக்கவேண்டும்.

பிரித்தாலும் காரியமாகிய சிகப்பு நிறம் காண்கிறது. ஆனதால் இந்த உதாரணம் சரியல்ல. சரீரம் அழிந்த உடனே, சைதந்யமாகிய ஆத்மா பிரிந்துவிடுகிறான். மறு பிறவியில்லையென்றும், கர்மங்களில்லையென்றும் சில குதர்க்கவாதிகள் பிதற்றுகிறார்கள்.

(சமாதானம்) இவ்வாத்மா பூர்வானு பூதப்ரதி சந்தானம் பண்ணுகையால், அதாவது ஜென்மாந்தர வாசனை யுண்டாகிறது. பிரதமத்தில் மாதாவின், ஸ்தன்யாபிலாஷையுண்டாகிறது. இதனால் ஜென்மாந்தரம் உண்டென்று தோன்றுகிறது. இது அனுமான ப்ரமாணம். ஒரு தாயின் வயிற்றில் நாலு புத்ரர்கள் பிறந்தால், ஒருவனுக்கு ஆரம்பத்திலேயே, கல்விக்ஞானம் அடைய விரும்புகிறான். மற்றொருவனுக்குக் குட்டுப்போட்டாலும் வருகிறதில்லை. ஒருவன் பகவத்பக்தியிலீடுபடுகிறான். மற்றொருவன் சூதாடுதல், திருடுதல், முதலிய துஷ்டனாகவிருக்கிறான். இதற்கு காரணமென்ன வெனில், அவனவன் ஜெந்மாந்தரத்தில் செய்த கர்மங்களுக்கீடாக, மறுபிறவியில் அந்தந்தக் கர்மத்துக்குத் தக்கபடி பிறந்து அனுபவிக்கிறான். இது, ப்ரத்யக்ஷத்தில் காண்கிறோம். இது ப்ரத்யக்ஷப்ரமாணம்.

## இனி சப்தப்ரமாணத்தை யாராய்வோம்.

* (வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநிக்ரஹ்ணாதி நரோவராணி 1 ததா சரீராணி விஹாய ஜீர்ணாந் அந்யாநி ஸம்யாதி நவானிதேகி 11) இதன் தாத்பர்யம்—மனிதன் எப்படி பழைய வஸ்திரங்களை நீக்கி வேறு புதிய வஸ்திரங்களை க்ரஹிக்கிறானோ, அப்படியே தேகமுடையவ

ஞகிய ஆத்மா பழய தேகத்தை விட்டு வேறு புதிய தேகங் களை யடைகிறுன். என்று கீதாசார்யன் அருளிஞன். (ஒருமைக்கட்டாங்கற்ற கல்வி. எழுமைக்கண் ஏ மா ப் புடைத்து) என்று குறள் வாக்யம். ஆனதால் ஆத்மா வுக்குக் கர்மமும், அதனல் ஜென்மமும் உண்டென்று நிச்சயிக்கப்பட்டது. இந்த ஆத்மா நித்யமாகத் தனக்குத் தான் சுயம் பிரகாசமாயிருக்கும். தேவ, மனுஷ்ய, திர்யக் ஸ்தாவரங்களைக் காட்டிலும் வேறுபட்டவன்.

* இவன் நைமித்திகப்ரளையத்திலும், ப்ராகிருத் ஆத்யந் தப்ரளையாதிகளிலும் அழியான் என்னுமிடம். சுருதி சித் தம். இவனை ௦ வியாபி என்றது. (தாருண்யக்நி) என்கிற படி அதாவது மரத்தில், அக்நி, எப்படி நிறைந்திருக்கிறதோ எள்ளில் எண்ணை எப்படி நிறைந்திருக்கிறதோ, பாலில் நெய் எப்படி நிறைந்திருக்கிறதோ அப்படி சர்வ அசேதன வஸ்துக்களிலும், இவன் அணுவாய் சூட்ம ரூபியாயிருக் கிறபடியால், எந்த வஸ்துக்களாலும் தடுக்க முடியாதவ ஞய் எந்த யிடத்திலும் பிரவேசிக்கக் கூடிய சக்தியை யுடையவன் என்பது. வியாபி என்பதற்கு எங்கும் வியா பிக்கக் கூடியவன் என்பது அர்த்தமல்ல.

* நைமித்திகப்ரளையமாவது பிரமனுடைய ராத்திரியி லுண்டாவது. அப்பொழுது பிரமலோகபரியந்த முள்ள லோகங்கள் நசித்துவிடும் ப்ராகிருதபிரளையமாவது மூலப்ரகிருதி வரையிலுள்ள எல்லா உலகங்களும் வஸ்துக் களும் நசித்து விடும். இது பிர்மாவின் ஆயுள் முடிவிலுண் டாகிறது. அப்பொழுது மூலப்ரகிருதி பிர்மத்தில் லயிக்

---

* கீதையில் இரண்டாவது அத்தியாயத்தில் 22-வது சுலோகம்.

கிறது. ஆத்யந்திகப்ரளயமாவது முதலும் முடிவும் இல்லாதது மோக்ஷம். ௦ வியாபியென்றதின் விபரம் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இவ்விடத்தில் அதனை விரித்துக் கூரவேண்டிய அவசியம் நேர்ந்தபடியால் கூறப்பட்டது. ஆனதால் இது கூறியது கூறல் என்னும் குற்றம் சம்பவிக்காது.

ஒரு வீட்டிலுள்ள தீபத்தின் சுடர் சிறியதாயிருந்தாலும், அதன் பிரபை பெரியதாய் அந்த வீடு முழுவதும் பிரகாசிப்பதைப் போல, ஜீவன் அணுவாயிருந்த போதிலும் தர்மபூதஜ்ஞானத்தால் சரீர முழுதும் வியாபரித்திருப்பவன். இவன் பத்ததசையில் யோகபலத்தால், சௌபரி முதலானவர்களைப் போல, அநேக சரீரங்களையெடுக்கவும் ஒரு சரீரத்தை விட்டு வேறொரு சரீரத்தில் பிரவேசிக்கவும் வல்லவன், முக்த தசையில் நினைவாலும் ஈஸ்வரநியமித்தாலும் அநேக சரீரங்களை யெடுக்கவும் சக்தியுடையவன்.

## ஜீவவர்க்கத்தின் பிரிவுகள்.

இஜ்ஜீவர்கள், பத்தர், முக்தர், நித்யர், என மூன்று வகைப்படும்.

### (பக்த ஜீவநிரூபணம்)

பத்தராவார் பந்தத்திலே கட்டுப்பட்டவர்கள். இவர்கள், பீஜாங்குர நியாயத்தாலே அவித்தை, கர்மா, வாசனை, ருசியாலே பல செய்வினை வன்கயிற்றால், திண்ணமழுந்தக்கட்டுண்டு, பெருந்துயரிடும்பையிலே மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து, மண்ணைய் நீரெரிகால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம். புண்ணாராக்கையின் வழியுழன்று நானாவித நரகம்புகும் பாவம் செய்து, சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடி

வில் பெரும்பாழிலே பொய்நின்ற ஞானமும், பொல்லா வொழுக்கமும், அழுக்குடம்பும் இன்னின்ற நீர்மையென் னும்படி தன்னுருக்கொடுத்து வேற்றுருக் கொண்டு, ஆவாரார் துணையென்று அலைநீர்கடலுளழுந்தும் நாவாய் போலப் பிறவிக்கடலுள் கிடந்து, அக்ஞான ஸ்வரூபத்திலே மூழ்கி, கர்ப்ப, ஜன்ம, பால்ய, யௌவன ஜரா, ஜாக்ரத், ஸ்வப்பன, சுஷுப்தி, மூர்ச்சா, மரண, சுவர்க்க, நரக, சிருஷ்டி, பிரளயாதி, விசித்ராவஸ்த்தைகளை யடைந்து, எண்ணிறந்த பிரிவுகளை யுடையராய், தாபத்திரயங்களிலடி பட்டு, ஸ்வதப்ராப்த பகவதனுபவங்களை, யிழந்தவர்கள், பத்தசேதனர். (பீஜாங்குர நியாயமாவது) விதைக்குக் கார ணம் மரமா, மரத்திற்குக் காரணம் விதையா, என்று எதற்கு எது முதற்காரணம் என்று சொல்லமுடியாதென் பது பீஜாங்குர நியாயம்.

(அவித்தையாவது) சரீரமே, ஆத்மா யென்கிற பிர மும், தன்னுடைய தல்லாதவற்றை தன்னுடையதாக பிர மிப்பதும்.

(கர்மமாவது) அந்த பிரமத்தினல் செய்யப்பட்ட செய் கைகள். இது ப்ராரப்தம், ஆகாமியம், சஞ்சிதம், என கர்மங்கள் மூன்று வகைப்படும். ப்ராரப்தமாவது ஆத்மா ஒரு சரீரத்தை யெடுத்துக்கொண்டு, அனுபவிப்பதற்கு, பிராரப்தமென்று பெயர். அப்படி அனுபவிக்குங்காலத்தில் செய்யக்கூடிய கர்மங்களுக்கு ஆகாமிய மென்று பெயர். இப்படிச் ஜென்மந்தோறும் செய்த அநேக கர்மங்களின் கும்பலுக்கு சஞ்சிதமென்று பெயர்.

(வாசனையாவது) நெடுநாளாய்ச் செய்த கர்மங்களை மென்மேலும் செய்ய வேண்டுமென்ற எண்ணம். (ருசியா வது) அப்படிச் செய்ததை அனுபவிக்க வேண்டுமென்ற

ஆசை. (தாபத்ரையமாவது) ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் என மூன்று வகை. ஆதியாத்மிகமாவது, காமக்ரோ தாதிகளால் வரும் தாபம். ஆதிபௌதிகமாவது, ஜலம், அக்னி, காற்று, இடி, மின்னல், முதலியவைகளால் வரும் தாபம். ஆதிதைவிகமாவது, ஆகாயத்திலிருந்து, எரி கொள்ளி வீழ்தல், மழை முதலியவைகளால் வரும் தாபம்.

ஆத்மாவைப்பற்றிய சில பூர்வபக்ஷமும், சமாதான மும்--இஜ்ஜீவாத்மாவிற்கு ஞானுநந்த ஸ்வரூபம் இயற்கையா யிருக்க மாயையாகிற அந்தகாரத்திற்கு எப்படிவசப்படும். அப்படிமாயைக்கு வசப்பட்டால், அது சுயம் பரகாச மாகுமோ என்றஆக்ஷேபத்திற்குச்சமாதானம். ஜலமானது குளிர்ந்த சுபாவத்தால் நெருப்பை அணைக்கும் சுபாவ முடையது அப்படியிருந்தும் ஜலம் குறைந்து நெருப்பு அதிகமானுல், நெருப்பு ஜலத்தை அடக்கி விடுகிறது. இதை போல பகவன் மாயையாகிற ப்ரகிருதி விபுவானபடியால் அணுவாகிய ஜீவன் மாயையின் சேர்க்கையால் வந்தேறி யான குணத்தில் கட்டுப்படுகிறுன்.(இதற்கு திர்ஷ்டாந்தம்)

சில மகரிஷிகள் ஒரு மார்க்கத்தில் செல்லும் பொழுது ஒரு விருக்ஷத்தின் மீதிருந்த ஒரு கிளி இவர்களைப் பார்த்த உடனே, பிடி, அடி வெட்டு, குத்து இவர்களிடத்திலுள்ள திரவியங்களைப் பிடுங்குங்கள் என்று பயமுறுத்திற்று. இதைக்கேட்ட மகரிஷிகள் திகைத்து நின்று மனிதசஞ்சார மில்லாத இந்த வனத்தில் இப்படிச் சொல்வது.யாரென்று பார்க்கையில், மரத்தினின்றும் கிளி பேசியதாக அறிந்தார் கள்.

இதைக்கண்டு ஆச்சர்யமுற்று கொஞ்சதூரம் செல்கை யில் அடுத்த மரத்திலிருந்த ஒரு கிளியானது இவர்களைப் பார்த்து வருக! தங்கள் வரவு நல்வரவாகுக!! அர்க்யங்

கொடுங்கள், ஆசனத்தின் அமருங்கள் என்று சொல்லிற்று. இதைக்கேட்ட மகரிஷிகள் அதிசயித்து அந்தக்கிளி அப்படி சொன்னதென்ன. இந்தக்கிளி இப்படி உபசார வார்த்தைகள் சொன்னதென்னவென்று, ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்கையில் கிளியானது மரத்தினின்றும் கீழிரங்கி வந்து, ரிஷிகளைப்பார்த்து சுவாமிகாள் ஒருவசனம் சொல்லுகிறேன், கேளுங்கள் என்றது. அது வருமாறு.

மாதாப்யேகர பிதாப்யேகோ மமதஸ் யசபக்ஷிண: அஹம்முநிபி: ஆநீத ஸசாநீதக வாசனை:! அஹம்முநி நாம் வசநம் சுருணோமி கவாச நாநா ம்ஸ வசநம் சுணோதி! ப்ரத்யக்ஷ மேதத்பவதா பிதிர்ஷ்டம், ஸம் ஸர்க்க ஜாதோஷ குணபவந்தி:!!

## (இதின் தாத்பர்யம்)

எனக்கும் அந்தக்கிளிக்கும், மாதா பிதாக்கள் ஒன்றுதான். என்னை மகரிஷிகள் எடுத்து வளர்த்தார்கள் அந்தக் கிளியை வேடர்கள் எடுத்து வளர்த்தார்கள். நான் மகரிஷிகளின் நல்வார்த்தைகளையே பழகினேன். அந்தக் கிளியோ வேடர்களின் துஷ்ட வார்த்தைகளையே பழகிற்று இதை நீங்கள் ப்ரத்யக்ஷத்திலேயே பார்த்தீர்கள். இது செயறகையினுலே வந்த குணமே தவிர இயற்கை குணமன்று என்று சொல்லிற்று.

இதனுல் நாம் தெரிந்துகொண்டது என்னவெனில் செயற்கையினுல் இயற்கை குணம் மாறும் என்பது நிச்சயிக்கப்பட்டது.

இதினுடைய விஸ்தாரங்களை ஸ்ரீமத் ரகஸ்யத்ரயசாரம் உபோத்காததிகாரத்தில் ராஜகுமார திர்ஷ்டாந்தத்தில் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதில் காண்க.

பத்த ஜீவநிரூபணம், முற்றிற்று.

---

# முக்த்த ஜீவநிரூபணம்.

முக்தராவார் இந்த பத்த ஜீவர்களிலே சிலர் தற்செயலாக நேர்ந்த சுகிர்தத்தாலே சர்வேஸ்வரன் எல்லா ஜீவர்களிடத்தும் சமமான கிருபையுடையவனாய், அவசர ப்ரதீக்ஷையுடையவனாய், அதாவது ரக்ஷிக்கவேண்டுமென்று சமயத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கிற சகஜகாருண்யத்தாலே, ஜாயமான கடாக்ஷம் பெற்று கருவிலே திருவுடையராய் அத்தாலே பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து, பாதவிலச்சினை வைத்து ஞானக்கைதர என்னும்படி, சதாசார்யனையடைந்து, மந்தர மந்தரார்த்தங்களைப்பெற்று, யானே யெனதே என்கிற அஹங்கார மமகாரங்களாகிற படுகுழியினின்றும் ஏறி, ஒண்டொடியாள் திருமகள் சேர்மார்பனு நிலாநிற்பக்கண்ட சதிர்கண்டு, ஐங்கருவிகண்ட வின்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்து. (களைவாய் துன்பங்களையாதொழிகின்களை கண்மற்றிலேன்) நாகணை மிசைநம்பிரான் சரணேசரண் நமக்கென்று திரு நாராணன் தாள்காலம் பெறச் சிந்தித்து நித்யதரித்திரன் பெருநிதியைப் பெற்றாப்போலே சேஷத்துவமாகிற மகாநிதியைப் பெற்று தன்னுடைய அதிகாரானுகுணமான பக்தி பிரபத்திகளில் இழிந்து சர்வேஸ்வரனை அபிமுகனுக்கி இருள்தருமா ஞாலத்துளினிப் பிறவியான் வேண்டேன் என்றும் மாயஞ்செய்யேலென்னை, என்றுஞ் செல்லுகிறபடியே யிவனுக்

கிசைவை யுண்டாக்கி உன் திருமார்பத்துமாலை நங்கை வாசஞ்செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை யென்று இவன் த்வரித்து விளக்கும்படி பண்ணி சரணமாகுந்தன தாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தங் கொடுக்கும் பிரான், என்கிறபடியே இவன் கோருதலுக்கீடாக, ப்ராரப்த சரீர முடிவிலே, பரமபதப் ராத்தியுண்டாக்குவதாகக்கோலி, பொன்னும் இரும்புமான விலங்குகள் போலே பந்தகங்களான பூர்வோத்தர புண்ய பாபங்களையும் ப்ரபத்தி காலத்தில் அனுபவிக்ரதாக ஒப்புக் கொண்ட ப்ராரப்த கர்மங்களைத் தவிர மற்ற பாபங்களையும் போக்கி, போய பிழையும் புகுதருவா நின்கிறனவும் தீயி னிற்றூசாகும் என்கிறபடியே முன்பே யிவனோடு துவக் கருத்துவைக்கையால் சரீர முடிவில் ப்ராரப்தத்தை அனுப வித்து ஈஸ்வரசங்கல்பத்தால் ० ப்ரியேசுஸ்வேசு சுகர்தம் அப்ரியேஷு சதுஷ்க்ருதம் — விஸ்ரஜ்ய த்யானயோகே நப்ராப்யேதிசநாதந.

(இதன் தாத்பர்யம்) தன்னை பஸ்த்தோத்திரம் செய்ப வர்களிடத்தில் புண்ணியத்தையும் தன்னை நிந்தித்தவர் களிடத்தில் பாபத்தையும் விட்டு விட்டு பக்தியோகத்தினால் அநாதியான பிர்மத்தையடைகிறான் (என்று மனுசொல்லி யிருக்கிறார்) ० மனுஸ்மிருதி 6-79 ० நம்மன் போலே வீழ்த்த முக்கும் நட்டிலுள்ள பாவமெல்லாம், சும்மெனாதே கை விட்டோடி தூறுகள் பாய்ந்தனவே, என்றும் இவனுக்கு அனுகூல ப்ரதிகூலராயிருந்துள்ள இரண்டு பேர்களிடத் தும், அநுகூல ப்ரதிகூலங்களான புண்ய பாபங்களைச் சேர்த்தும் தான் சங்கல்பித்த படியே இவனுக்கு பூர்வ மனோரதமாகிய மோக்ஷத்திலாசையும் கைங்கர்ய மனோரத மும் குறையாமல் பண்ணி, சிறைகிடந்த ராஜகுமாரன் திறத்தில் ப்ரஸன்னனான ராஜா விலங்கை வெட்டிச்

சிறைக் கூடத்தினின்றுங்கொண்டு புறப்படுமாப் போலே, இவனுக்குக் காலோசிதமான யேதேனு மொருவியாதி வியாஜத்தை யுண்டாக்கி வாக்முதலிய ஞானேந்திரிய கர்மேந்திரியங்களாகிய பத்தையும் மனசில்சேர்த்து கர்ம ஞானேந்திரியங்களோடு கூடின மனசை, ப்ராணவாயு வோடே சேர்த்து இப்படி பதினொரு இந்திரியங்களோடு கூடின ப்ராணவாயுவை ஜீவனோடே சேர்த்து ப்ராணேந் திரியத்தோடு சேர்ந்த ஜீவனை * திரிஸ்தூணம் முதலிய ஸ்தூல தேகத்தினின்றும் கடைந்தெடுத்த ஜீவனை சூட்சம பஞ்ச பூதங்களோடு சேர்த்து இப்படி இந்திரிய ப்ராணபூத சம்புக்த்தனான ஜீவனை * நிர்த்தோஷ சுகிர்தமுடைய ஆர்த் தனான, அதாவது அந்தர்யாமியான தன் பக்கலிலே யிளைப் பாற்றி, இப்படி ஸ்தூல சரீரத்தினின்றும், பிரித்து சூட்ம சரீரத்தோடே இந்த ஜீவனுக்கு சரீரத்தில் எண்ணிறந்த நாடிகள் உளது. அதில் ஊர்த்துவமுகமாகச் செல்லும் நாடிகள் நூறு. அது கருப்பு, வெளுப்பு, மஞ்சள், நீலம் சிகப்பு வர்ணங்களோடு கலந்திருக்கும் சில நாடிகள் கீழ் நோக்கிச் செல்லும். இதில் புண்ணியஞ் செய்தவர்கள் கண், காது, மூக்கு, வாய் முதலியவைகளோடு சேர்ந்த நாடி வளியாய்ச் சென்று தங்கள் தங்கள் உத்தேசித்த லோகங்களை யடைவார்கள். பாபிகளோ வெனில், கள் ளர் போகும் வழிகள் போல கீழ்நோக்கிச் செல்லும் நாடி யின் வழியாய் ஆத்மாபகாரிகள் நரகாதிகளுக்குச் செல்

---

* முதுகெலும்பு

* அந்தர்யாமி ஜீவனோடு சேர்ந்திருந்த போதிலும் ஜீவனுக்குரிய தோஷங்கள் அந்தர்யாமியாகிய பரமாத்மாவுக்கு ஒட்டுவதில்லை.

வார்கள். இப்படி போகாமல், பிரபன்னனுகிய ஜீவனை அர்ச்சராதி மார்க்கத்து முகமான, ஊர்த்துமுகமான நூறு நாடிகளுக்கு அதிபதியான பிர்ம நாடியிலே ப்ரவேசிப்பித்து, அதன் கிரணங்களைக் கொண்டு புறப்படும்படி பண்ணும். இப்படிப் புறப்படும் ப்ரபன்னனுக்கு அந்திமஸ்ருதி. அதாவது மரண காலத்தில் பகவத்யானம் வேண்டும் என்று கீதாசாரியன் (1- யம், யம், வாபி, ஸ்மரன்பாவம்) என்று அருளிச்செய்தான் இதன் தாத்ப்ர்யம் எவனெவன் சரீரத்தை விடும் பொழுது எந்தெந்த ரூபத்தை த்யானிக்கின்றனே அந்தந்த ரூபத்தை யடைகின்றன் என்பது இதற்கு திர்ஷ்டாந்தம். சடபர தோபாக்யானத்தையறிக. இந்த திர்ஷ்டாந்தம், பக்தியோக நிஷ்டனுக்குச் சொன்னதே யொழிய, ப்ரபத்தி நிஷ்டனுக்கன்று. ஏனெனில், இவன் ப்ரபத்தி காலத்திலேயே தன்னுத்மாவை பகவானிடத்தில் ஒப்புவித்து விட்டபடியால், அதற்குமேல் இவனை ரக்ஷிக்க வேண்டிய கடமை அவன் பொருப்பாய் விடுகிறது. * இதற்கு திர்ஷ்டாந்தம், பெரியாழ்வார் 0-2. எய்ப்பென்னை வந்து நலியும்போது அங்கேது நானுன்னை நினைக்கமாட்டேன். அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன். அரங்கத்தரவணைப்பள்ளியானே, என்று நிஷ்கரித்தார். ஆனதால் ப்ரபன்னனுக்கு, அந்திமஸ்மிருதி ஆவஸ்யமன்று. ஆனல் தேசிகன் திருவுள்ளம் இவனுக்கு அந்திமஸ்மிருதி யுண்டாகாமற் போகாதென்பது. இது மோக்ஷம் பெருகிறவனுக்கும் மோக்ஷம் கொடுக்கிறவனுக்குமே தெரியுமேயன்றி, மற்றவர்கள் அறியார்கள் என்பது திருவுள்ளம்.

---

1- கீதை 8-6. 2- பெரிய திருமொழி 4-10-1

இதற்குமேல் ஸர்வஜ்ஞனை பகவான் வழிகாட்டத்தப்ரகாசகனுய்க்கொண்டு, பிர்மநாடியிலே பிரவேசித்தால் காலதத்துவமுள்ள வரையில் ஒரே பகலாயிருக்கும்.

1 நன்னிலமாமது நற்பகலாமது நன்னிமித்தம்
என்னனுமாமதி யாதாமரங்கரடியவர்க்கு
மின்னிலேமேனி விடும் பயணத்து விலக்கிலதோர்
நன்னிலேயா நடுநாடி வழிக்கு நடைபெறவே.

இப்படி * 2 ஊர்த்வநாடியிலே ப்ரவேசித்த முமூட்சுவை ஸ்தூலசரீரமாகிற ப்ரம்ம புரத்தினின்றும், பிர்மநாடியாகிற தலேவாசலாலே, வாத்ஸல்லியனை ஆர்த்தன். வார்த்தை சொல்லக்கற்கிற முகவஸ்யனை ராஜகுமாரனே ராஜா எடுத்துக்கொண்டுலாவுமாப்போலே கொண்டு புறப்பட்டு, (இருளகற்றும் எரிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி) என்றுஞ் சொல்லுகிறதேவயான மார்க்கத்திலே வழிப்படுத்தி, அர்ச்சிஸ், என்றும், அகஸ்ஸென்றும், பூர்வபக்ஷமென்றும், உத்தராயணமென்றும், சம்மஸ்தரமென்றும், வாயுவென்றும், ஆதித்யனென்றும் சந்தரனென்றும், சொல்லப்படுகிற இவர்களின் லோகங்களின் வழியாய் இவனுக்கு சககாரிகளான வருண இந்திர பரஜாபதிகளென்றுஞ் சொல்லப்படுகிற வழி நடத்தும், முக்யமான தேவதையை முன்னிட்டு, தான்ப்ரதானனுய் நடத்தி அவ்வோ எல்லேகளில் பகவத் சாஸ்தரத்திலே சொல்லப்பட்ட போகங்களேயும் அனுபவிப்பித்து, நெடுங்காலங்காண வாசைப்பட்டதொரு தேசவிஷேத்திலே சென்றவாறே, அர்ச்சராதி மார்க்கத்தைக்

1- அதிகார சங்கரகம் பா-27

கடப்பதற்கும், மார்க்கத்திலுள்ள தேவதைகளால் பூஜிப்பதை யடைவதற்கும் யோக்யமான, சூட்சம சரீரத்தை ஆறு கடக்கைக்குப்பற்றின தெப்பத்தைப் போகவிடுமாப் போலே போகவிடுத்து, விரஜையிலே நீராட்டி விரஜைக் கக்கரைப்படுத்தி, அப்ராகிருத சரீரத்தைக் கொடுத்து 1 ஐரம், மதீயம், என்கிற தடாகத்தினளவுஞ் சேர்த்து சோமஸவன மென்கிற அஸ்வத்த விருக்ஷத்தைக் கிட்டு வித்து, மாலை அஞ்ஜன, சூர்ண, வஸ்திர, பூஷணாதிகளை, ஐந்நூறு திவ்ய *2 அப்ரஸ்ஸுக்களைக்கொண்டு எதிர் கொள்ளவித்து, ப்ரம்மலங்காரத்தாலே யலங்கரிப்பித்து; ப்ரம்மதேஜஸை யுண்டாக்கி, குடியடியாரிவர் கோவிந்தன் றனக்கென்று முடியுடைவானவர் முறை முறை யெதிர் கொள்ள கொடியணி நெடுமதிள் கோபுரங்குறுகுவித்து. இந்தரப்ரஜாபதிகளென்று பேறுடைய துவாரபாலகரைக் கிட்டுவித்து வைகுந்தம் புகுதலும் மண்ணவர் விதியே, என்று மூன்று பாட்டிலும் சொல்லுகிறபடியே, அப்ராகிருதங்களான ராஜோபசாரங்களைப் பண்ணுவித்து, ஆனந்தமயமான மண்டபரத்தினத்தின் அழகோலக்கத்திலே புகிரவிட்டு இவன் மனோரதித்தபடியே இழந்த இழவெல்லாந்தீர நிரதிசய போக்யனான தன்னைக் காட்டித் தன்மைபெருத்தித் தன் தாளிணைக் கீழ்க்கொண்டு தன்னோடு சமான போகத்வ லக்ஷணமான சாயுஜ்யத்தாலே யிவனுக்கு சஜாதியரான அந்தமில்பேரின்பத் தடியாரோடிருத்தி,

---

1 ஐரம் மதியம் என்பது, சாந்தோக்யத்தில் எட்டாவது பிரபாடகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2 அப்ரஸுக்களைப்பற்றி உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி சமஸ்த ப்ரதிபந்தக நிவிர்த்தியுண்டாகும்படிப் பண்ணி, தன்னுடைய ஸ்வரூப ஆவிர்பாவத்துக்குத் தக்க படி தேசகாலாவஸ்தை சங்கோச மில்லாதபடியாகவும் தன் மநோரதத்துக்கனுரூபமாக இவன் மனோரதித்த கைங் கர்யங்களை யெல்லாம் இவன் ஆத்மஸ்வரூப முள்ளவரை யில்ச்செய்து, (நித்ய நிர்தோஷகந்த:) என்கிறபடியே தனக்கு மந்யோந்யமும் ஓரோவயசில் தோழன்மாரைப் போலயிருக்கிற நித்யசூரிகளோடு, இன்று வந்தவனென்று இவனைதாள நினையாமல் புரையறப்பரிமாறி ஸ்தோத்ரத்தி லும், ஸ்ரீ வைகுண்டகத்யத்திலும் அருளிச்செய்த மனோரதத்தின்படியே ஏகாந்திக அத்யந்த நித்யகிங்கானன இவனுகப்பாலேதான் அதாவது எம்பெருமான் நிரதிசயா நந்தனுயிருப்பன் இவர்கள் முக்த்தர்கள்.

**பாசுரம்.**

0 நடைபெறவங்கிப் பகலொளி நாளுத்தராயணமாண்
டிடைவருகாற்றிரவின் பதிமின்வருணன்
குடைவானவர் கோமான் பிரசாபதி யென்றிவரால்
இடையிடை போகங்களெய்தி யெழிற்பதமேறுவரே.

முக்த்த நிரூபணம் முற்றிற்று

---

## நித்யர் நிரூபணம்.

நித்யராவர் ஒருக்காலத்திலும், பிரகிருதியாகிய மாயாசம்பந்தத்தில் கட்டுப்படாதவர்கள் இவர்கள் பகவா னுடைய மனோரதத்திற்கு விரோதமில்லாமல் நடந்தபடி

---

0 அதிகாரசங்கரகம், 28 பா.

யால் ப்ரகிருதி சம்மந்தத்திலீடுபடாமல், ஞானசங்கோச மில்லாது சதா பகவத்ஸ்வரூபத்திலீடுபட்டு புராண புருஷனை பரிபூர்ண ஸ்ரீ வைகுண்டநாதனை வானிள வரசாகப் பெற்று வழுவிலா வடிமைசெய்து வாழ்கிற வடிவுடை வானவர்கள். இவர்களாகிருர் அனந்த கெருட விஸ்வக்ச் சேனுதிகளாகிய அயர்வருமமரர்கள்-இவர்களில், அதிகார விசேஷங்களும் கைங்கர்யாதிகளும், ஈஸ்வரனுடைய நித்ய இச்சையாலே நியமிக்கப்பட்ட விவஸ்த்தைகள். ஆனதால் இவர்வளுடைய அதிகார கைங்கர்யாதிகளில் வைஷம்யங் கள்ஏற்படுவதில்லை முத்தர்க்கும் நித்யர்க்கும் ஈஸ்வரனுக்கும் வியாபாரங்களில் வேறுபட்டிருக்கும். அப்படி வேறு பட்டிருந்தாலும், சேதன சேதன எல்லா வஸ்த்துக்களோடும் கூடினவனை ஈஸ்வரன் போக்யனைபடியால் போக மாத்ரம் சமானமாக அநுபவிக்கப்படுவார்கள். இந்த போக சாம்யத்தை மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாததால் கடல் காண்பவனுக்குக் கடலை கையிட்டுக் காட்டுமாப்போலே இவர்களுடைய ஆனந்தானுபவங்களை எட்டிலடங்காததால் இத்துடன் பூர்த்தி செய்யப்பட்டது.

இது நித்யர் நிரூபணம் முற்றிற்று.

**ஜீவப்ரகரண நிரூபணுதிகாரம் சம்பூர்ணம்**

---

## ஈஸ்வர நிரூபணுதிகாரம்

ஈஸ்வரனுவான் சேதனுசேதன வஸ்துக்களெல்லாத் துக்கும் நித்யமாக தாரகனுமாய், நியந்தாவுமாய், நிருபாதிக சேஷியாய், சர்வசரீரியாய், சர்வகாரணபூதனுய், சமஸ் தயேயகுணங்களில்லாதவனுய், சர்வசக்தித் வாதிமங்கள

குணங்களையுடையவனாய், சர்வசப்தவாச்சியனாய், எல்லா வஸ்துக்களுக்கும் வேறுபட்டவனாய், சர்வ சாஸ்த்ரீய கர்மங்களாலும் ஆராதிக்கப்பட்டவனாய், சர்வாத்மாக்களிடத்திலும் சுபாவத்தில் சுகுர்தமான எண்ணத்தையுடையவனாய், முமூக்ஷுக்களுக்கு ஆசரணீயனாய், நித்ய முக்தர்களால் அனுபவிக்கக்கூடியவனாய், இப்படி சர்வப்ரகார நிரதிசய போக்யனாய், சுடர்மிகு சுருதியுளனான ஸ்ரீயப்பதி புருஷோத்தமன் (ஈஸ்வரன் ஜெகத்காரணத்வம்)

ஜெகத்ச் சிருஷ்டியாதிகளுக்கு அவசியம் மூன்று காரணங்களுண்டு. மூன்று காரணங்களாவன: உபாதானகாரணம், நிமித்தகாரணம், சககாரிகாரணம், இந்த மூன்று காரணங்களும் பிர்மமென்று சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவன் சூக்ஷ்ம சிதசித்விஷ்ட வேஷத்தாலே அதாவது நாமரூபமில்லாத சித் அசித்துக்களோடு கூடியிருப்பதால் ஜகத்துக்கு உபாதன காரணமாயும், தன்னுடைய சங்கல்பத்தால் சிர்ஷ்டியாதிகள் நடத்துகிறபடியால், நிமித்தகாரணமாயும், சககாரி பூதகாலாதிகளுக்கு அந்தர்யாமியுமாயிருப்பதால் சககாரி காரணமாயும் இருப்பதால், ஈஸ்வரன் இந்த மூன்றுவித காரணங்களைக்கொண்டு சிருஷ்டியாதிகளை நடத்துகிறான். (உதாரணம்)

ஒரு குடம் செய்யவேண்டுமானால் முதற்காரணம் மண்ணும் ஜலமும் வேண்டும். இது உபாதானகாரணம். இரண்டாவது காரணம், தண்டசக்ரமும் காலமும். இது சககாரி காரணம். மூன்றாவது காரணம், குயவன்.

இது நிமித்தகாரணம் இந்த மூன்று காரணங்களிலிருந்தே காரியமாகிய குடம் உண்டாக்கப்படவேண்டும். இதைப் போலவே ஈஸ்வரன் தானே உபாதான, நிமித்த, சககாரி காரணங்களாயிருந்து, காரியமாகிய உலக சிருஷ்டியாதிகளைப் பண்ணுகிருன்.

## ஈஸ்வர லக்ஷணங்கள்.

ஈஸ்வரனுடைய லக்ஷணமாவது: விபுத் வேஷதி சேதனத்வம், அநந்யாதீனத்வம், நிராதாரத்வம், ஜகத் காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், சர்வாதாரத்வம், சர்வ நியந்தரத்வம், சர்வசேஷித்வம், சர்வசரீரத்வம், சர்வசப்த வாச்யத்வம்,சர்வவேதாந்த வேத்யத்வம்,சர்வலோக சரண்யத்வம், சர்வமுமூக்ஷு உபாஸ்யத்வம், சர்வபலப்ரதத்வம், சர்வவியாப்தக்ஞானந்த ஸ்வரூபத்வம், லக்ஷிமி சகாயத்வம் இத்யாதிகளும் இவனுக்கு லக்ஷணங்கள்.

லக்ஷணமாவது, லக்ஷியமாகிய வஸ்துவைத்தவிர இதர வஸ்துக்களில் இல்லாதிருக்கை, அது லக்ஷணம். அப்படியிதரவஸ்துகளிலிருந்தால், அதற்கு அவ்யாப்தி, அதிவ்யாப்தி, அசம்பவம், முதலிய தோஷங்கள் வரும்.

அவ்யாப்தியாவது, லக்ஷியத்தில், ஏகதேசமாயிருக்கை, அதாவது பசுவுக்கு கருப்பு நிறம் லக்ஷணமென்முல், வெளுப்பு சிகப்பு நிறமுள்ள பசுக்களிருக்கிற படியால் இது ஏகதேச லக்ஷணமாகும் முழுலக்ஷணமுமில்லாததால் இதற்கு அவ்யாப்திதோஷமென்று பெயர். அதிவ்யாப்தியாவது, அலக்ஷியத்தில் லக்ஷணமிருக்கை, அதாவது பசுவுக்கும் கொம்பு லக்ஷணமென்முல் அலக்ஷியவாகிய

எருமையில் கொம்பிருக்கை, ஆகையால், பசுவுக்குக் கொம்பு லக்ஷணமன்று இது அதிவ்யாப்திதோஷம், பசுவுக்கு லக்ஷணம் ஏதுவென்றால் கழுத்தில் தொங்குகிற (ஸாஸ்நை) அதாவது தாடியென்று சொல்வது, இது மற்ற எருமை, குதிரை முதலிய மிருகங்களுக்கில்லை. இது லக்ஷணசமன்வயம். அசம்பவமாவது, லக்ஷியத்தில் முழுமையும் இல்லாதிருத்தல். முயலுக்கு கொம்பு லக்ஷணமென்று சொல்வது, இது அசம்பவமென்று பெயர்.

கீழ்ச்சொன்ன தோஷங்களில்லாதிருப்பதே லக்ஷண சமன்வயமென்று பெயர்-ஆனதால் கீழ்ச்சொன்ன ஈஸ்வர லக்ஷணங்களில் மற்ற ஜீவாத்ம, திரிகுண, காலாதிகளிலும் கிடையாது என்று நிவாரணம்.

அணுத்வேசதி சேதனத்வமும், பரதந்த்ர சேதனத்வமும் ஜீவனுக்கு லக்ஷணம் அசேனத்வேசதி அவரதத்துவம் திரிகுண, காலசுத்தசத்துவ, தர்மபூதக் ஞானங்களுக்கு லக்ஷண மென்று லக்ஷண சமன்வயம். (ஈஸ்வரனுடைய ஸ்வரூப நிரூபக தர்மங்கள்.) ஈஸ்வரனுடைய ஸ்வரூபமாவது சத்யத்வ, ஞானத்வ அநந்தத்வ, ஆனந்தத்வ, அமலத்வங்கள், சத்யத்வமாவது எப்பொழுதும் விகாரமில்லாமல் ஒரே தன்மையாய், அழிவில்லாமலிருக்கை. ஞானத்துவமாவது எப்பொழுதும் சங்கோச மில்லாமல் விபுவான ஞானத்தையுடையவனாயிருக்கை. அநந்தத்வம் எங்கும் நிறைந்தவனாயிருக்கை. ஆநந்தத்வம் துக்கமில்லாமல் எப்பொழுதும் ஆநந்தமயமாயிருக்கை, அமலத்துவம், தோஷங்களில்லாத பரிசுத்தனாயிருக்கை, இந்த ஸ்வரூப நிரூபக தர்மங்களைக் கொண்டே ஈஸ்வரனை யறியவேண்டும். ஆனதால் இது ஈஸ்வரனுடைய ஸ்வரூப நிரூபகங்கள்.

ஜீவனுக்கும் அநந்தத்வம் தவிர மற்றவைகள், ஸ்வரூப நிரூபகதர்மங்கள்.

(ஸ்ரூபமாவது) ஒரு வஸ்துவினிடத்தில் விட்டுப் பிரியாமலிருக்கை. இது ஸ்வரூப நிரூபக தர்மங்கள் அதாவது ஒரு பசுவின் ஸ்வரூபத்தை யறியவேண்டுமானல், அதன் கால், வால், கொம்பு உருண்டையான நீளவடிவம். இதுகளை யறியாமல் பசுவின் ஸ்வரூபத்தை யறிய முடியாது. ஆனதால் கீழ்ச்சொன்ன தர்மங்களைக் கொண்டே ஈஸ்வரனுடைய ஸ்வரூபத்தை யறியவேண்டும்.

ஈஸ்வரனுடைய நிரூபித ஸ்வரூப விசேஷண குணங்கள்) அதாவது இப்படி ஸ்வரூபத்தை யறிந்து அதன் பிறகு அதின் குணங்களை யறிவது ஸ்வரூபவிசேஷணங்கள்.

(உதாரணம்) ஒரு மாம்பழத்தின் உருவத்தையறிவது, ஸ்வரூபம், அதன் மதுரத்தையறிவது ஸ்வரூப விசேஷண குணங்கள். முன்னம் பழத்தின் உருவம் நிறம் இதுகளை யறிந்த பிறகே, பழத்தின் மதுரமாகிய குணத்தையறிய வேண்டும் பழத்தையறியாது குணத்தையறிய முடியாது, என்பது விவரணம்,—ஈஸ்வரனுடைய நிரூபிதஸ்வரூப விசேஷண குணங்களாவது, க்ஞான, பல ஐஸ்வர்ய, வீரிய சக்தி, தேஜஸ் இந்த ஆறு குணங்களும், நிரூபிதஸ்வரூப விசேஷண குணங்கள். சௌசீல்ய, சௌலப்ய, வாச்சல்ய கருணை, முதலிய குணங்களும் இதினுடைய உட்பிரிவுகள்—இவன் அநந்த கல்யாண குணங்களையுடையவனென்று சொல்வது இதில் இவனுடைய அநந்த கல்யாண குணங்களில் ப்ரதானம்—கருணை, இந்த கருணையின் ஏற்றவமாவது ஸர்வவஸ்துக்களினும் உடல்மிசையுயிரெனக்கரந்து நந்தா விளக்கேயளத்தற்கரியாய் என்றும், உணர் முழு நலமென்றும், அளப்பரிய வாரமுதேயென்றும் அத்யத்புத குணங்களுக்கும் அதிசயாவகமாய் நிருபாதிக மங்கள குணங்களையுடையவனய், உயர்வற உயர்நலமுடையவனெவனவன், என்னும்படி அநவதிகாதிசயா நந்தம் முதலான

அனந்த கல்யாண குணங்களையுடையவனாய், ஆசிர்தர் பல பிறப்பும் பிறவாதபடி தானென்னயோநியுமாய்ப் பிறக்கக் கடவனாய் அவர்கள் நாட்டில் பிறந்து படுமவை படாமைக் காகத்தான்பிறந்து படாதன படக்கடவனாய் தான் சொல் விற்றுச்செய்யும் தேவ ப்ரகிருதிகளுக்குத்தானும் சொல்விற் றுச் செய்யக்கடவனாய், விபரீதாசரணம் பண்ணும், ஆசுர ப்ரகிருதிகளுக்குத்தானும் விபரீதாசரணம் பண்ணக்கட வனாய், தன்னை அந்தராத்மா என்று நினைந்திருப்பாரைத் தானும் தனக்கு அந்தராத்மா வென்று நினைத்திருக்கும வனாய், தனக்கு ஆத்மாத்மீய ஸமர்ப்பணம் பண்ணினார்க்கு தானும் ஆத்மாத்மீய சமர்ப்பணம் பண்ணக்கடவனாகிய அவனுடைய கல்யாண குணங்களை (வர்ஷாயுதைர்யஸ்ய குணாநசஹ்க்யா, வக்தும் சமேதைரபிஸர்வ தேவை 1 சதுர் முகாயுர் யதிகோடிவக்த்ரோ பவேநரஹ்க்வாபி விசுத்த சேதாஹ் சதேகுணாநாம் அயுதைகயம்சம் வதேந்நவா தேவரப்ரஸீத 11) இதன் தாத்பர்யம் —எந்தப்பகவானுடைய குணங்கள் ஒன்று சேர்ந்திருக்கிற எல்லாத் தேவர்களாலும் பதினாயிரம் வருஷங்களிலும் சொல்லுவதற்கு முடியாதவைகளோ அவைகளை ஒரு மனிதன் ப்ரம்மாவினுடைய ஆயுசுக்கு சமமான வயதை யுடையனாயும், கோடிமுகங்களையுடையவனாயும், பரிசுத்த மான மனதையுடையவனாயும் இருந்தானேயாகில், அவன், உம்முடைய குணங்களின் பதினாயிரத்தில் ஒரு பாகத்தை சொல்லுவனோ மாட்டானோ என்றும் (இஷுக்ஷயா நிவர்த்தந்தே நாந்தரிக்ஷ க்ஷிதிக்ஷயாத், மதிக்ஷயா நிவர்த் தந்தே நகோவிந்த குணக்ஷயாத் 11) இதின் தாத்பர்யம் ஒருவன் சில பாணங்களை யெடுத்துக் கொண்டு ஆகாயத் தில் விடப்போக இவன் கையிலிருந்த பாணங்கள் செல வழிந்து திரும்புகிறானே யொழிய ஆகாயத்திலிடமில்லா

மல்ல (அதைப்போலே) கோவிந்தனுடைய குணங்களைச் சொல்லுவதற்கு இவனுக்கு புத்திக் குறைவினால் சக்தி யற்றவனாகி விட்டுவிடுகிறானே தவிர அவனுடைய குணங்கள் அசங்கேயமாகும், ஆனதால் அவனுடைய குணங்களைச்சொல்வது, கடலைக்காண்பார்க்கு கடலைக்கையிட்டு காண்பிப்பது போலாகும் இதினுடைய விரிவுகளை ஸ்ரீமத் தேசிகன் பணித்த ரகஸ்யத்ரயசாரம் அர்த்த பஞ்சகாதிகாரத்தில் காண்க,

## ஈஸ்வரனுடைய வியாபாரங்கள்.

வியாபாரமாவது:—தொழில் ஈஸ்வரனுக்குத் தொழிலாவது, ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்மாரம் என்று முத்தொழில். இத்துடன், நியமனம், நிக்ரகம், அனுக்ரகம், என்று சேர்த்து ஆக ஆறு தொழில் என்று சொல்வதுண்டு. இது இவனுக்கு லீலையாக லீலாவிபூதியில் நடத்துகிறான். இதின் விவரங்கள், வியூகரூபத்தில் சொல்லுவோம். இவன் ஞானசக்தியாதி குணவிஸிஷ்ட ரூபத்தாலே ஸர்வாந்தர்யாமியாயிருக்கும். ஈஸ்வரனுடைய பஞ்சப்ரகாரம்.

பஞ்சப்ரகாரமாவது:—பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை ஆக (5) பரரூபமாவது. சுருதிப்ரமாணங்களில் சொல்லுகிறபடியே இவன் பரமபதத்தில் அனந்த கருடவிஸ்வக் சேனாதிபதிகளாகிய, நித்ய சூரிகளுக்கும் முக்தர்களுக்கும், சேவியனாய் வானுயர் வின்பம் மன்னி வீற்றிருக்கிற திவ்யமங்கள விக்ரக விசிஷ்டனாயிருக்கும்.

(வியூகரூபம்) வியூகரூபமாவது:—பரரூபத்திலே, வாசுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அனுருத்த, ரூபங்களாக வரும் வகுப்பு. இந்த வியூகம், நாலென்றும் மூன்றென்றும், சொல்வதுண்டு. வியூக வாசுதேவரூபம். பரவாசுதேவரூபத்தோடு ஞானசக்தியாதி ப்ரகாசம் ஒத்துவருகிறபடியால் மூன்று வியூகமென்றும் சொல்வது. இந்த வியூ

கம் நாலுக்கும் யுகந்தோறும், வெளுப்பு, சிகப்பு, மஞ்சள். கருப்பு வர்ணங்கள் மாறி மாறிவரும். அதாவது, வியூக வாசுதேவரூபத்திற்கு கிருதயுகத்தில், வெளுப்புநிறமும், திரேதாயுகத்தில் சிகப்பு வர்ணமும், .துவாபரயுகத்தில் மஞ்சள் வர்ணமும், கலியுகத்தில் கருப்புவர்ண மும் வரும். இப்படியே வியூகத்திற்கும் யுகந்தோறும் வர்ணங்கள் மாறி மாறி வருவதைக்கண்டு கொள்க 1 (பாலின் நீர்மை, செம்பொனீர்மை பாசியின் பசும்புரம் போலு நீர்மைபொற்புடத்தடத்து) என்றும், இவன் மூன்று ஸ்தானத்தில் நித்யவாசமுடையவனுய், மூன்று ஸ்தானமாவது பரமபதம், க்ஷீராப்பதி, சூரியமண்டலம். இவன் சங்கர்ஷண ப்ரத்யும்ன. அநிருத்த ரூபங்களாலே மூவிரண்டு குணங்களைக்கொண்டு, சிருஷ்டி, ஸ்திதி சம்மா ரங்களை நடத்துகிறுன். பிரத்யும் மனனுயிருந்து, ஐஸ்வர்ய வீர்யமாகிய இரண்டு குணங்களைக்கொண்டு சிருஷ்டியும் தர்மப்ரவசனமும் அநிருத்தனுயிருந்து. ஸக்தி, தேஜஸ், என் கிற இரண்டு குணங்களைக்கொண்டு ஸ்திதியும் (அதாவது.) ரக்ஷித்தல் தத்துவப்ரவசனமும் சங்கர்ஷணு யிருந்து ஞான பலமும் என்கிற இரண்டு குணங்களைக் கொண்டு சம்மாரமும், சாஸ்தாப்ரவர்தனமும் செய்கிறுன்.

இப்படிஈஸ்வரன், சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரங்களாகிய முத்தொழிலையும் ஞானபலாதி குணங்களைக்கொண்டு தானேநடத்துபவன். ஜீவர்களுடையநாலு அவஸ்த்தைக்குத் தக்கபடி ஈஸ்வரன் நன்கு ப்ரகாசிக்கிறுன் (ஜீவர்களுடைய நாலு அவஸ்த்தைகளாவன) ஜாக்ரத, ஸ்வப்பன, சுஷப்தி, துரீயம், என்பவை. (இதன் விபரம்) உபாசனே செய்கிற வனுக்கு பஞ்சேந்திரியங்களும் வ்யாபரித்துக் கொண்டி

1 திருச்சந்த விருத்தம் 44 வது பாசுரம்.

ருப்பது ஜாக்ரததசை, இந்திரியங்களடங்கி மனோவியாபார மட்டுமிருப்பது சொற்பனதிசை, மனோவியாபாரமின்றி தன்னிடத்தில் தான் லகிப்பது சுஷப்திதசை, தன்தே காதிகளையும் தன்னையும்மறந்து நிற்கும் தசை துரீயதசை (அதாவது) மூர்ச்சைதசை இப்படி, உபாசகர்களுடைய தசைக்குத்தகுந்தபடி உபாசியனான பகவான் தன்னுடைய ரூபங்களைத்தரிக்கிருன். என்று தாத்பர்யம்.

1 பகவானுடைய ஜாக்ரதாதி ரூபங்களை ஸ்ரீவைகுண்டத்தில், விசாகஸ்தம்பமென்று சொல்லப்படுகிற ஒரு பெரிய அப்ராகிருத மானஸ்தம்பமிருக்கிறது. அது நாலு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாகத்திலும் நான்கு ரூபங்கள் நான்கு பக்கங்களிலும் வாசுதேவாதி ரூபங்களுடன் பகவான் எழுந்தருளியிருக்கிருன். முதலில் ஜாக்ரத ஸ்தானமென்றும், அதற்குமேல் சொற்பனஸ்தானமென்றும், அதற்கு மேல் சுஷுப்தி ஸ்தானமென்றும், சொல்லப்படுகிறது. ஜாக்ரதஸ்தானத்திலிருக்கிற நாலு வியூக ரூபங்களில், ஜகத்சிருஷ்டியாதி வியாபாரங்கள், ஆயுதங்கள் வாகனங்கள் சின்னங்கள் முதலியவை. ஸ்பஷ்டமாகத் தோன்றுகின்றன. ஸ்வப்பனஸ்தானங்களிலிருக்கும், ரூபங்களில், சிருஷ்டி முதலியவைகளில் இச்சைமாத்திரமுண்டு. மிகவும் மலினங்களான வர்ணம் சின்னங்கள் முதலியவைகள் ஸ்பஷ்டமாகப்ரகாசிப்பதில்லை. ஸுஷுப்தி ஸ்த்தானத்திலிருக்கும், ரூபங்களுக்கு வியாபார விஷயத்தில் இச்சையுமில்லை. ஸ்வாத்மானந்தத்தை மாத்திரம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு வர்ணங்களுமில்லை. சின்னங்கள் கோடுகளாக

---

1 இது ரகஸ்யத்தரயசாரம். தத்வத்ரயசிந்தனதிகாரத்தில் சொல்லப்பது.

விருக்கின்றன. ஆயுதங்களுமில்லை. துரீயஸ்தானத்தில் ரூபங்களுக்குச் சரீரம்ச்சேஷ்டாதிகள் ஒன்றுமில்லை. இது உபாசனஞ் செய்கிறவர்களுக்கு புத்தியை ஸ்வரூபத்தில் லயஞ்செய்யவேண்டியதற்காக பகவானால் இந்தவரிசையை யனுசரித்து ப்ரகாசம் செய்யப்பட்டிருக்கிற தென்று சாஸ்த்திரங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (வியூகத்தின் உட்பிரிவுகள்) அதாவது வாசுதேவ வியூகத்திலிருந்து கேசவ, நாராயண, மாதவ, என்கிற ரூபங்களும், சங்கர்ஷண வியூகத்திலிருந்து, கோவிந்த, விஷ்ணு, மதுசூதனன், என்கிற ரூபங்களும் ப்ரத்யும்ன, ரூபத்திலிருந்து, திருவிக்ரம வாமன ஸ்ரீதரர் என்கிற ரூபங்களும், அநிருத்தர் என்கிற வியூகத்திலிருந்து, ருஷிகேச, பத்பனுப, தாமோதரர், என்கிற ரூபங்களும், கிரமமாகவுண்டாயின வென்றும், இப்பனிரெண்டு ரூபங்களும், மார்கழிமாதம் முதல் பனிரெண்டு மாதங்களுக்கும், பனிரெண்டு சூரியர்களுக்கும், அதிஷ்டான தேவதைகள், ஊர்த்து புண்டரங்களுக்கும் நெற்றி முதலிய விடங்களில் இடப்படும், திருமண்காப்பிற்கு முறையே கேசவாதி நாமங்களாகப்ரகாசிக்கும் இந்த வியூகத்தில் 36 வகை என்றும் சொல்லப்படுகிறது. (விபவ அவதாரங்கள்) விபவாவதாரமாவது. கீழ்ச்சொன்ன வியூகாவதாரங்களில் நின்றும் வெளிப்பட்ட ரூபங்களுக்கே விபவங்களென்றுபெயர். இப்படிப்பட்ட விபவாவதாரங்களில் சிலவிசேஷ உபகாரதிசயங்களை முன்னிட்டு, மச்சிய, கூர்ம, வராக, நரஸிம்ம, வாமன, பரசுராம, ஸ்ரீராம, பலராம, கிருஷ்ண, கல்கி, என்கிற, அவதாரங்களைத் தசாவதாரங்கள் என்று தனித்துச் சொல்வதுண்டு, இவற்றில் ஸ்ரீவாமன ரூபத்தினின்றும் திருவிக்ரம ரூபம்போல விபவத்தின் உட்பிரிவுகள் அநந்தம் என்று சொல்லப்படும். (கிருஷ் ரூபாணி, அஸங்கேயானி) அதாவது கிருஷ்ணனுடைய ரூபங்கள் கணக்கற்றவைகள்.

என்று பகவந்சாஸ்தரத்தில் சொல்லப்படுகின்றன— அந்தர் யாமித்வம். அந்தர்யாமியாவது யோகிகளுக்கு யோக தசையில் காணலாவதொரு சூக்ஷ்ம விசேஷரூபம், இது சர்வாந்தர்யாமியான திவ்யாத்மஸ்வரூபத்தை யநுசந்திக்க இழிவார்க்குத் துறையாக, (1 அஷ்டாங்கயோகசித்தாநாம் ஹிரத்யாக நிரதாத்மா நாம்। யோகிநாமதிகாரஸ்யா தெகஸ் மின்ஹிரதயேஸு-யே: 11) இத்யாதிகளாலே, அந்தர்யாமி யாகும் என்று சொல்லப்பட்டது. இது மனிதர்களுடைய சூட்சமமாகிய இருதய ப்ரதேசத்திற்குள்ளே சாந்நித்ய மாய் எழுந்தருளியிருக்கும், விலக்ஷண ரூபம், இதற்கு சூட்ம சிதசித்விசிஷ்ட ப்ரம்மம் என்று பெயர்.

## அர்ச்சாவதாரம்.

அர்ச்சாவதாரமாவது, பரவியூகாதி லக்ஷணங்க ளோடே கூட (தமருகந்தெவ்வுருவம் மவ்வுருவந்தானே, தமருகந்ததெப்பேர் மற்றப்பேர் தமருகந்த தெவ்வண்ணம் சிந்தித்திருப்பரேல் அவ்வண்ணம் ஆழியானும்) என்னும் படி பகவானுக்கு அநேக ஆயிர முகங்கள் அநேகாயிரங் கைகள், என்று கீதையில் விஸ்வரூபாத்தியாயத்தில் சொல் லப்பட்டிருக்க, அர்ச்சாரூபத்தில் ஒரு திருமுக மண்டலம் நான்கு திருக்கரங்கள் என்று நிரூபித்திருப்பது, அடியார் கள் திருவுள்ளம் உகக்கும்படி அடியார்கள் உவந்த திரு வுருவமும், அடியார்களிட்ட திருநாமமும், தனக்குப் பேரும் ஊருமாகக்கொண்டு அடியார்கள் உகந்த திவ்ய தேசங்கள் தோறும் கோயில்கொண்டெழுந்தருளி, மாம்ஸ சக்ஷுஸ்களுக்குக் காணலாவதொரு திவ்ய மங்களவிக்ரக ரூபம். இது ஸ்வயம், வியக்தம், ஆர்ஷம், மானுஷம்,

1 சாத்வஸம்ஹிதை 2-7-8 ல் பார்க்க.

என்று நான்கு வகையாக யெழுந்தருளியிருப்பது. ஸ்வயமாவது பகவான்தானே, உகந்து சாந்நித்யம் செய்யும், ஸ்ரீரங்கமுதலிய திவ்ய தேசங்கள். வியக்தமாவது தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டு அவர்களுக்கு ப்ரத்தியக்ஷமாய் அவர்களாலாராதிக்கப்படும் திருவேங்கட முதலிய திவ்ய தேசங்கள். ஆர்ஷமாவது, ரிஷிகளால் தபசு செய்யப்பட்டு அவர்கள் தபசுக்குவுவந்து ப்ரத்தியக்ஷமாகி, அவர்கள் பிரார்த்தனையின்படி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்கள். மானுஷமாவது, மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதிக்கப்படும் திவ்ய தேசங்கள். இன்னும் சாளக்ராமசிலை, துவாரகாசிலை முதலியவைகளிலும் சாஸ்திரப்படி ஸாந்நித்யங் கொண்டிருக்கும் ரூபம் ஒருவகை. சித்திரம் முதலியவகைளில் ஏறி யருளப்பண்ணி பாகவதர்களுடைய பிரார்த்தனையின்படி ஸாந்நித்யங் கொண்டிருக்கும் ரூபம் ஒருவகை. திவ்யம், ஆர்ஷம், மானுஷம், என மூன்று வகையாக நிரூபிப்பதுமுண்டு. இதின் விரிவுகளைப் பகவத் சாஸ்திரத்தில் கண்டுகொள்வது.

## லக்ஷ்மி விசிஷ்டத்வம்

இப்பரவியூகாதி சர்வாவஸ்த்தையிலும் சர்வசரண்யனை சர்வேஸ்வரன், லக்ஷ்மிவிசிஷ்டனுய் (நித்யாநபாயிநி) என்றும் அதாவது, எந்த அவசரத்திலும் எந்த அவதாரத்திலும் லக்ஷ்மியை விட்டுப் பிரியாதவனுய் சுபாஸ்ரயதிவ்ய மங்கள விக்ரக விசிஷ்டனுயிருக்கும்.

ஈஸ்வர நிரூபணம் முற்றுப்பெற்றது.

## (நிகமனம்) முடிவுரை

சாக்ஷாத் பகவதவதாரங்களில், அசுரமோகனார்த்த மாகவும், சிஷ்டபரிபாலனம், துஷ்ட நிக்ரகஞ் செய்யும் பொருட்டும், ஆசிருதர் பலபிறப்பும் பிறவார்தபடி (பொய் நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும், அழுக்குடம் பும், இன்னின்ற நீர்மை யினியாமுருமை, என்னின்ற யோநியுமாய்ப் பிறந்தாய் யிமையோர்தலைவா) என்றபடி ஆசிருத ரக்ஷணார்த்தமாக பல அவதாரங்களை யெடுத்து அவர்கள் நாட்டில் பிறந்து படுமவை படாமைக்காகத் தான் பிறந்து படாதனபட்டு, அதெங்ஙனே யெனில் அயோத்தி, மதுரா முதலிய விடங்களில் ராம கிருஷ்ணாதி மானுஷ்யவதாரங்களைச் செய்தும், ஆரண்யங் களில் சஞ்சரித்தும், தேவர்களுக்காகத் தன் பத்தினியைப் பறிகொடுத்தும், யுத்தத்தில் அம்புகளையேற்றும், மரண மூர்ச்சையடைந்தும், தூதுசென்றும், தேரூர்ந்தும், துஷ் டர்களுடைய வசைச்சொற்களை யேற்றும், இப்படி ஆசிருதர்கள் நிமித்தம் கர்மவைஸர்களாகிய, மனிதர்களின் சஜாதீயனாய்க் கலந்து பரிமாறினாலும் தனக்குக் கர்மவை ஸத்யமில்லாமல், தன்னுடைய யிச்சையினாலேயே தன் னைத்தானே சிருஷ்டித்துக்கொள்கிறானென்றறியவும். (பிர மாணம்) (யதாயதாஹி தர்மஸ்ய, க்லானிர்ப்பவதி பாரத 1 அப்யுத்தானம் அதர்மஸ்ய, ததாத்மானம் சிரஜாம்யஹம் 11) அதாவது எந்தெந்தக் காலத்தில், தர்மத்திற்கு ஆனியுண் டாகி, அதர்மத்திற்கு விர்த்தியுண்டாகிறதோ அந்தந்தக் காலத்தில், நான் என்னைச் சிருஷ்டித்துக்கொள்கிறேன். என்று கீதாசாரியன் தானே யருளிச் செய்தான். இத னால் பகவானுடைய அவதாரவிசேஷங்கள் தர்மபரிபால

R
N49



னத்தின் பொருட்டுத் தன்னைத்தானே சிருஷ்டித்துக்கொள்கிறன். இப்படி அவனுடைய மானுஷ்ய பரிக்ரங்களெல்லாம் அப்ராகிருதத்திருமேனியேயாகும். இந்த அவதார ரகஸ்யங்களை யறிவதற்கு ஆசார்யானுக்ரகமும், பகவத் ப்ரசாதமும் பெற்றவனுக்கல்லது மற்றவனுக்கு அறிதற்கு எளிதன்று. இவன் மனச்சாந்தியும் புருஷார்த்தமும் பெறுன். இவன் பிரகிருதியாத்ம பிரமமும், சுதந்தராத்தும பிரமமும், கழிந்து, புருஷார்த்தத்தைப் பெறுவதற்கு, கீழ்ச்சொன்ன முக்திக்கு மூலகாரணமான, திரிகுண காலசுத்த சத்துவாதிகளையும், ஜீவாத்ம பரமாத்ம நிரூபணங்களையும், இதம் புருஷார்த்தங்களையும், சதாசாரிய ப்ரசாதத்தாலே தெளிந்து நிஷித்த நிவிர்த்தியும், விஷயவிரக்த்தியும், பிறந்து பதிவிரதானுராகதுல்யமான, சத்சம்பரதாயத்திலீடுபட்டு, பகவத் ஆசார்ய ப்ரேமமுடையவனுய், பகவத்பாகவ தாசார்ய கைங்கர்ய நிஷ்டனுய்ப் போருமவனுக்கு நித்ய, முக்த்தர்களாலனுபவிக்கப்பட்ட பரவாசுதேவனுகிய, ஸ்ரீயப்பதியையடைந்து அவனேடும் நித்ய முக்த்தர்களோடும் சமமாக ஆனந்தானுபவத்தை யடைகிறுன் என்பது சுருதிப்ரமாணம்.

இதத்துவத்திரயங்களின் விபாகம் உபநிஷத்துக்களில் அநேகவிதங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுகளையெல்லாம் ஆராய்வதானுல் (சாஸ்தரக் ஞானம் பகுக்லேசம் புத்தேசலனகாரணம் 1 உபதேசாத்த்ரிம் புத்வா விரமேத் ஸர்வ்கர்ம ஸு) என்கிறபடி சாஸ்தரங்களை யாராய்வதானுல் பகுக்லேசமுண்டாகும் புத்தியோசலனமுண்டாகும், இவனுக்கு ஆயுளோ, (மின்னின்னிலேயில் மன்னுயிராக்கை

105979

ஆனதால் ஆசாரியனுடைய உபதேசத்தால் இவ்வளவு தத்துவக்ஞானம் தெளிந்தாலே போதுமென்றபடி (முத்திக் கருள்சூட மூன்றைத்தெளி முன்னம்) என்றபடி இத் தத்துவக்யானத்தாலே ஸர்வேஸ்வரன் திருவடிகளை உபாய உபேயமுமாய்ப்பற்றி உஜ்ஜீவிக்கவேண்டுமென்பது இதின் திரண்டபொருள்.

**நிகமனம் முற்றுப் பெற்றது.**

ஸ்ரீ மத் வேதாந்ததேசிகன் திருவாய் மலர்ந்தருளிய (௳) ரகஸ்யங்களில் (தத்துவ பதவி.) சம்பூர்ணம்.

---

ஸ்ரீ

ஸ்ரீமதே வேதாந்த மஹாதேசிகாய நம:

## ரகஸ்ய ரத்னவலி,

" ஒன்றே புகலென்றுணர்ந்தவர் காட்டத்திருவருளால்
அன்றே யடைக்கலங்கொண்ட நம்மத்திகிரித்திருமால்
இன்றே யிசையிலிணையடி சேர்ப்பரினிப்பிறவோம்
நன்றே வருவதெல்லா நமக்குப் பரமொன்றிலதே."

(1) ஒரு ஜீவனுக்கொரு ஜீவன் தஞ்சமல்லன். (2) ஸ்ரீமானான நாராயணனொருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம். (3) இஜ்ஜீவன் அநாதிகாலம் அநுபவிக்கப் பெறாத ஸ்ரீய:பதியைப் பெறுகைக்கு ஹேதுவான வுபாயத்தை ரகஸ்யத்ரய முகத்தாலே உபதேசித்து அவ்வழியாலே ஆசார்யனிவனுக்குத் தஞ்சமாகிறான். (4) ஸர்வ ஸ்வாமினியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய், ஸஹதர்ம சாரிணியான பெரியபிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதி

சயத்தாலும், அத்தலேயில் வாலப்யாதி சயத்தாலும், புருஷகாரமாய்கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிருள். (5) இவளை புருஷாரமாக்க வேண்டுகிறது ஈஸ்வரன் தண்டதாரணைகையாலே, (6) இத்தண்டகாரண மநாதியான ஆஜ்ஞாதி லங்கனம். (7) இப்படி அபாரதாநு ரூபமாக தண்டதாரனுய்போருகிற சரண்யனுடைய வசீகரணங்களில் ப்ரதானம் சர்வாகிஞ்சநாதிகாரமான ஆத்மரக்ஷாபர சமர்ப் பணம். (8) இது சபரிகரமாக ஸக்ருத்கர்த்தவ்யம் (9) இஸ் ஸமர்ப்பணத்தைத் தானனுஷ்ட்டிக்கவுமாம் தனக்காக ஆசார்யாதிகளனுஷ்டிக்கவுமாம், (10) இதற்குக் கோலின பலத்தைப் பற்றபுன:ப்ரமத்தி முதலான கர்த்தவ்ய சேஷ மில்லே, (11) இப்படி ருக் தக்ருத்யனுன ப்ரபன்னனுக்கு வர்ணாச்ரமாதி தர்மங்கள் ஸ்வதந்த்ராஜ்ஞாசித்தங்களான கைங்கய்ய விசேஷங்கள். (12) இவனுக்கு ஆஜ்ஞா அநுக்ஜ் ஞா சித்தங்களான கைங்கர்யங்களெல்லாம் ஸ்வயம் ப்ர யோஜனங்கள். (13) காணுகரண ரூபங்களான அபசாரங் கள் புகுந்தாலும் ப்ரபன்னனுக்கு நரகாதிகளில்லே. (14) ராஜகுமாரனுக்கு அவதானம் பண்ணி நடக்கவேண்டுமாப் போலே லகுப்ரத்யவாயமும் வாராமைக்காக அபசாரங்கள் தூர பரிஹரணீயங்கள் (15 ப்ரபத்திக்கு கோலின பலத் திற்கு ஒன்றுமும் ப்ரதிபந்தகமில்லே. (16) புத்தி பூர்வாப சாரங்கள் புகுந்தாலும், ப்ராயச்சித்த விசேஷமதிகாரி விசேஷநியதம். (17) இப்படி ப்ராயச்சித்தத்திலே மூட்டு கிறதும் கடினப்ரக்ருதிகளுக் கசை காட்டுவாரைப்போலே அவள் பண்ணுகிற சிக்ஷைகளுமெல்லாம் சரண்ய ப்ரஸாத பலம். (18) இங்கிருந்த காலம் தர்மாநுபந்தியான போகத் திலும் போகபுத்தியாலே ப்ராவண்யம் பிறந்ததாகில் இது

தன்னதிகாரானு ரூபமான கைங்கரயர்மிருத ரசத்திற்கு தண்ணீர் துரும்பு. (19) இப்படி நிஷித்த போக ப்ராவண்யம் கைங்கர்யாம்ருத ரஸ விருத்தமாகையாலே விஷம் போலே தூரபரிஹரணீயம், (20) கைங்கர்யமாவது ஸ்வாமி யுகந்த யேவற்றொழில் செய்கையாலே இது யதா சாஸ்த்ரம் பண்ணினுகப்பாம், (21) பகவத் கைங்கர்யமும் பாகவத கைங்கர்யமும் சேரவநுஷ்டிக்க வரிதானபோது பரம புருஷார்த்த காஷ்டையான பாகவத கைங்கர்யமே உபாதேய தமம், (22) இவை யிரண்டிலும் ப்ரதானம் ஆசார்ய கைங்கர்யம். (23) இக்கைங்கர்யபரனுக்கு பரமேகாந்திகளுகந்தவிடமே உசிதஸ்தானம். (24) இப்படி துல்ய சீலரைக் கிடையாதபோது விபரீத சம்ஸர்க்கம்—ஏகாந்த வாச பரிஹார்யம். (25) இவனுக்கு கதிசிந்தனாதிகள் சித்தசந்தோஷ ஹேதுவான காலயாபனம். (26) சாதக விருத்தியான இவனுக்கு அந்திமப்ரத்யயம் ஸ்வய யத்ந ஸாத்யமன்று. (27) இப்படி க்ஷண கிருத்யமான ஆத்ம ஸமர்ப்பணயாகத்திற்கு பகவத் ஸங்கல்ப்ப சாத்யமான தேஹாவசானமவப்ருதம் (28) சதாசார்ய பரிக்ரஹத்திற்கு முன்புள்ள அனாதி காலமெல்லாம் ஒரு காள ராத்ரி. (29) பின்பு தேகாவசானத்தளவும் நல் விடிவு. (30) மேல் முழுக்க ஸ்வச்சந்த கைங்கர்ய மஹோத்ஸவதிவஸ, (31) இது ஸாத்விக ஹ்ருதயங்கமையான ரஹஸ்ய ரத்னாவலீ.

“சிறு பயனிற்படியாத தகவோ ரெம்மைச் சேர்க்க வடைக்கலம் கொண்ட திருமால் தானே,

மறு பிறவி யறுத்தழியா வானில் வைக்கு மனமே நீ மகிழாதே யிருப்பதென்கொல்,

உறுவதுனக்குரைத்தே னிங்கிருந்த காலமொரு பிழையும் புகுதாத வுணர்ச்சி வேண்டிப்,

பெறுவதெல்லா மிங்கே நாம் பெற்றுவாழப் பேரடிமையாலே தென்றிகழேனீயே."

ரக்ஷந்த்வ அளன்ய ரக்ஷ்யாம் லகீய ஸீமபிகரீயஸீம் ஸந்த:, லக்ஷ்மீ ஸஹாய ஹ்ருத்யாம் ரஹஸ்ய ரத்நாவலீம் ரம்யாம். இதிகவிதார்கிக ஸிம்மஸ்ய வேதாந்தாசார்ய ஸ்யக்ருதி ஷு ரஹஸ்ய ரத்னவலி ஸம்பூர்ணு.

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

---

ஸ்ரீ

ஸ்ரீமந்நிக மாந்தமஹாதேசிகாயநம:

## ஸ்ரீ மத் தேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரகஸ்ய பதவி.

## மூலமந்திராதிகார சங்கரகம்.

அனாதி காலம் சம்சரித்து வந்த ஜீவாத்மாக்களுடைய உஜ்ஜீவனார்த்தமாக, வேதாந்த சாஸ்த்ரங்கள், தத்வ, இத, புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கும் (சொல்லும்) அவற்றில் சுருக்கமாக: ரகஸ்யத்ரயம் பிரகாசிப்பிக்கும். ரகஸ்யத்ரயமாவது, திருமந்தரம், த்வயம், சரமசுலோகம். இவற்றில் திருமந்தரம், மிகவும் சுருக்கம்.

இது மூன்றுபதமாய் எட்டுத்திருவக்ஷரமாயிருக்கும், மூன்றுபதமாவது, ப்ரணவம், நம:, நாராயணாய: ஆக

மூன்றுபதம், எட்டுத்திருவக்ஷரமாவது, ப்ரணவம் (1) நம: (2) நாராயணுய, (5) ஆக எட்டுத்திருவக்ஷரம் இதில் முதல் பதமான ப்ரணவம் மிகவும் சுருக்கம் 1 இது மூன்றுபதமாய் மூன்றக்ஷரமாயிருக்கும்.

மூன்றக்ஷரமாவது (அ-உ-ம்) என்று மூன்றக்ஷரமாயிருக்கும் இதில் முதலெழுத்தாகிய அகாரம் சர்வகாரணபூத்னுய் சர்வரக்ஷகனுகிய பரமாத்மாவைச் சொல்லுகிறது. இந்த அகாரத்தில் உள்ளடக்கிக் கொண்டிருக்கிற சதுர்த்தியென்கிற நான்காம் வேற்றுமைக்கு அர்த்தம். இது தாஸத்துவமாகிற சம்மந்தத்தைக் காட்டுகிறது இரண்டாவதக்ஷரமாகிய, உகாரம் ஏவகாரத்தால் முதலெழுத்திற்குரியவனுகிய பரமாத்மாவிற்கே தாஸபூதனென்பதைக் காட்டுகிறது இந்த உகாரத்திற்கு லக்ஷிமி அர்த்தம் என்றும் சொல்லும். மூன்ருவதக்ஷரமாகிய (ம்) ஜீவாத்மாவைச் சொல்லுகிறது.

இரண்டாவது பதமாகிய (நமஸ்ஸு) இரண்டக்ஷரமாய் இரண்டு பதமாய் ஜீவாத்மாவாகிய நான் எனக்குரியனல்லேன். என் காரியத்திற்கு சுதந்தரனுமல்லேன் என்பதைச் சொல்லுகிறது. இந்த நமஸ்ஸுக்குச் சரணுகதியிலும் தாத்பர்யம்.

மூன்ருவது பதமாகிய (நாராயண) சப்தம் நாரங்களாகிய, ஜீவர்களுக்கு அயநமென்றும் (இருப்பிடமென்றும்) நாரங்களைத் தனக்கு அயநமாக உடையவனென்றும்

---

1 பதமாவது ஒரு அர்த்தத்தை உள்ளடக்கிக்கொண்டிருப்பது இது ஒரெழுத்துப்பதம் இரண்டெழுத்து பதம், நான்கெழுத்துப்பதமாயிருக்கும்.

சர்வாதாரத்வாதிகளையுடையவனாய் லக்ஷ்மிபதியாகிய பரமாத்மாவைச் சொல்லுகிறது.

இந்நாராயண சப்தத்தின் ஈற்றிலுள்ள (ய) என்கிற எழுத்து, நான்காம் வேற்றுமையாய் முதலெழுத்தாகிய அகாரத்தில் மறைந்திருக்கிற சதுர்த்தி தாஸத்துவமாகிற சம்மந்தத்தைக் காட்டிற்று. இது அதன் பலமாகிய கைங்கர்யத்தைக் காட்டுகிறது. இத்தால் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம் என்றதாயிற்று.

## இதனுடைய விசேஷார்த்தங்கள்.

## ப்ரணவ சப்தார்த்தம்.

இதை மூலமந்தரமென்றும் அஷ்டாக்ஷரமென்றும் திருமந்தரமென்றும் சொல்வதுண்டு மூல மந்தரமாவது எல்லா வேதங்களுக்கும் எல்லா மந்தரங்களுக்கும் முதற்காரணமாயிருப்பதால், இதை மூல மந்தரமெனப்படும் எட்டெழுத்துக்களையுடையதால் அஷ்டாக்ஷரமெனப்படும் லக்ஷ்மி சம்மந்தத்தோடு கூடியிருப்பதால் திருமந்தரமெனப்படும்.

இதில் முதல் பதமான ப்ரணவம், நிர்வசனபலத்தாலே அதாவது நேர் பதமில்லாமல் பிரித்து பார்க்குமிடத்து மூன்றக்ஷரமாய் மூன்றுபதமாய் ஒருவாக்யமாயிருக்கும்.

இவற்றில் ப்ரதமாக்ஷரம் இடுகுறிப் பெயராலும் காரணப் பெயராலும் விஷ்ணுவாசகமாயிருக்கும். இது சுருதிஸ்மிருதி, நிகண்டு இதிகாச புராணங்களாலும்,சித்தம் (அகாரம்) வாய்ச்சியங்களுக்கெல்லாம் மூலகாரணமாயிருப்பது போல, அகாரவாய்ச்சியனான விஷ்ணு, எல்லா

வஸ்த்துக்களுக்கும் மூலகாரணனாய் சர்வஜகத்ரக்ஷகனாய் சர்வசேஷியாய், லக்ஷ்மிபதியாயிருப்பாதால், இவனை சர்வேஸ்வரனென்றும், பரமாத்மா வென்றும், பரபிர்ம மென்றும் ஏற்படுகிறது.

அகர முதலவெழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றேயுலகு

என்னும் நீதிவாக்யத்தையும் அறிக.

1 "ஒன்றுந்தேவு முலகு முயிரும் மற்றும் யாது மில்லா அன்று நான்முகன் தன்னொடு தேவருலகோடுயிர் படைத்தான்" இத்யாதிகளின்படியே திரிமூர்த்திசாம்யமும் கழியும் இத்தால், அகாரசப்தத்திற்குரியவன் விஷ்ணு வென்றேற்படுகிறது. இவ்வகாரத்தில் மறைந்திருக்கிற, (ய) என்கிற நான்காம் வேற்றுமை வியாகரணரீதியால் ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உள்ள சேஷி சேஷத்துவ சம்மந்தத்தைக்காட்டுகிறது.

ஜீவ சப்தம் தோற்றுவதற்கு முன்பே சம்பந்தத்தைச் சொல்லலாமோவென்னில் இச்சம்பந்தம் விதிபலமாகையாலே ஈஸ்வர ஸ்வரூபத்தை நிரூபிக்கும்பொழுது ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் உள்ள சம்மந்தத்தை நிரூபித்தாக வேண்டும் என்பது.

## நடுவெழுத்தாகிய (உ) காரசப்தார்த்தம்

நடுவெழுத்தாகிய, உகாரம் சுருதிகளில் பிரயோகித்திருக்கிறபடி, அவதாரணார்த்தமாய், (அதாவது, அவனுக்கே உரியவனென்கிறதைப் பிரித்துக் காட்டுவது)

---

1 திரு. 4 ப. 10 தி. பா.

உகாரத்திற்கு நேரான அர்த்தம் அயோகவிவச் சேதத்தால் அவனுக்குச் சேஷபூதன் என்பதை காட்டும். அப்படிக் காட்டினல் மற்றவர்க்கும் சேஷபூதன் என்றேற்படும். அதற்காக, அந்யோகவிவச் சேதத்தால், அ வ னு க் கே சேஷபூதன் என்கிற அர்த்தத்தைக் காட்டுகிறது. ஏகாரம் பிரிநிலை, இதனல் மற்றவர்க்குச் சேஷபூதன் அல்லவென் றேற்படுகிறது.

இ த் தா ல் அகாரவாய்ச்சியனுன ஸ்ரீயப்பதிக்கே, மகார சப்தத்திற்குரியவனுகிய ஜீவாத்மா ஒரு காரணமில் லாமலே சேஷபூதனென்ருயிற்று. இத்தால், தேவதாந் தரப் பற்றுக்களும் விடப்பட்டது. ஈஸ்வரனுக்குச் சேஷ பூதனென்றதால் இந்தச் சேஷத்துவம் அவனடியார்கள் பரியந்தம் அநுஷ்டேயம்.

மற்றுமோர் தெய்வம் உளதென்
றிருப்பாரோடொத்திலேன், உற்றதும்
உன்னடியார்க்கடிமை

என்கிறபடி, அநங்யார்க சேஷபூதனென்ற தாயிற்று, இந்த உகாரம் லக்ஷ்மிவாசகம் என்னுமிடம் கடசுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது இது பூர்வாக்ஷரத்தோடு சேர்ந்து ஸ்ரீய: ப்பதித்துவம் உண்டாகிறது. இப்படி ஒரு பதத்திற்கு இரண்டர்த்தம் சொல்லுவது வியாகரண ரீதி யாகும்.

(அக்ரத ப்ரயயௌராம: சீதாமத்யே) என்கிற சுலோ கப்படி பூர்வர்கள் நிரூபித்தார்கள் என்பதை யறிக.

## மூன்ருவதாகிய (ம) காரசப்தார்த்தம்.

இது கீழ்ச்சொன்ன ஜீவாத்மாவைகாட்டுகிறது. இது தாஸத்துவத்தினுடைய ஆசிரியத்தைச் சொல்லுகிறது. இது ஜீவவாசகமென்னுமிடம் (க) காரம் முதலாய் (ம)

காரம் வரையிலான (பஞ்சவிம் சதி) அதாவது இருபத்தைந் தாவதெழுத்தாகிய மகாரம் ஜீவதத்துவ வாசகங்களாக, தத்துசாகரஸம் ஹிதாதிகளில் விசேஷித்துச் சொல்லுகை யாலும் சித்தம். இஜ்ஜீவாத்மாஞ்ஞானஸ்வரூபனாய் சுயம் பாகாசனாய் தேகாதிவிலக்ஷணனாய், குணத்ரயரகிதனாய் அணுவாய் நிருபாதிகஸர்வ சேஷியாகிய பர மாத்மாவைக் காட்டிலும், மிகவும் வேறுபட்டவனாகிய ஜீவாத்மாவைச் சொல்லுகிறது.

இவ்வக்ஷரம், பத்தர், முத்தர், நித்தியராகிய மூன்று வித சேதனரையுங்குரிக்கும்.

மகாரார்த்தம் முற்றிற்று

காரணமுங் காவலனு மாகி யென்றுங்
கமலை யுடன் பிரியாத நாதனை
நாரணனுக் கடியேனு னடிமைபூண்ட
நல்லடியார்க் கல்லால் மற்றொருவர்க்கல்லேன்
ஆரணங்கள் கொண்டகமும் புறமும் கண்டா
லறிவாகி யறிவதுமா யறுநான்கன்றிச்
சீரணிந்த சுடர்போலத் திகழ்ந்து நின்றேன்
சிலை விஜயன்றேரனையச் சிறுவேதத்தே.

## நமப்பத சப்தார்த்தம்

நம: என்கிற பதத்திற்கு ஸ்தூல சூக்ஷமம் என்று, இரண்டு யோஜனையாயிருக்கும்.

தூலார்த்தமாவது, நம: என்கிற முழுப் பதத்தாலே சரணாகதியை விதிக்கிறது.

(சரணம் ப்ரதி தேவாநாம், ப்ராப்தகாலமம அந்யத் :) என்றும்,

இது அனுஷ்டாநம் எங்ஙனே என்னில் தமயந்தி, நமசை அனுஷ்டித்தாள். த்ரௌபதி முதலானவர்கள் ஆபத்காலத்தில், நமசை அனுஷ்டித்தார்கள் என்பது புராணங்களில் காண்க. இது மந்த்ர ராஜபத ஸ்தோத்ரத்தில் ஆத்ம சமர்ப்பண பரம், என்கையாலும், இந்த நமசப்தம் பரந்நியாஸத்தைச் சொல்லுகிறதாகவுமாம்.

இந்நம சப்தம் ஸூக்ஷ்ம யோஜனையில் (ந) என்றும் (ம) என்றும் இரண்டு பதமாய் ஒரு வாக்கியமாயிருக்கும். (ம:) என்கிற இது கீழ்ச் சொன்ன ப்ரணவத்திலுள்ள மகார சப்தத்திற்குரிய ஜீவனைச் சொல்லுகிறது. இந்த மகாரம் லக்ஷண ரீதியால் எனக்கு என்று தோன்றி, (ந) என்கிற பதம், நீக்கற் பொருள்களில் வருகிறபடியால் வேண்டாம் என்கிற அர்த்தத்தைக்காட்டுகிறது. எது வேண்டாம், அநிஷ்டங்கள் வேண்டாம். அநிஷ்டமாவது சாஸ்த்திரங் கொண்டறியவேண்டும். இதில் முக்கியமானது நான், எனது, என்கிற அஹங்கார, ம மகாரங்கள். இது, எல்லாப் பாபவர்க்கத்துக்கும் உபலக்ஷணம். இங்கு இஷ்டங்களை ப்ரார்த்திக்க வேண்டியிருக்க, அநிஷ்டங்களைச் சொல்லுவானென்னில், தனக்குள்ள அநிஷ்டங்களை, எடுத்துக்காட்டி, அநிஷ்ட நிவர்த்தியைச் சொல்லி, இஷ்ட ப்ராப்திக்கு, ப்ரார்த்திப்பது மிகவும் உசிதம்.

அநிஷ்டங்களாவது, அஹம்மே என்று அநாதி காலம், ப்ரம்மித்து, ஆத்மாபகாரமாகிய சோரத்திலகப்பட்டு, (யானே என்றனதே யென்றிருந்தேன்) என்கிறபடியே ப்ராந்தியால் இவன் சம்சார பந்தத்தில் மூழ்குவது. இவனுக்கு தற்செயலாய்நேர்ந்த சுகிர்த விஷேஷத்தால் ஆசார்ய ப்ராப்தியை யடைந்து மந்த்ரார்த்தங்களை யறிந்து. அதில் நிஷ்டையையுடையவனாய் (ஆத்மாபிசாய: ந. மம) என்று தெளிந்து சரணாகதி நிஷ்டைக்குரியவனாகிறான்.

இவனுக்கு நமசப்த்தார்த்தம், நெஞ்சிற் பட்டதில்லை யாகில், அஹங்காரம மகாரங்களில் நிவிர்த்தியடையான். அஹங்கார மமகாரங்களில் நிவிர்த்தியில்லாவிடில், ஸ்வரூப ஞானம் அடையான் ஸ்வரூப ஞானமடையாவிடில், முமுக்ஷுவாகான், முமுக்ஷுவாகாவிடில் ப்ரபத்திநிஷ்ட னுகான். ப்ரபத்தி நிஷ்டை யடையாவிடில், மோக்ஷம் பெருன் என்பது நிச்சயம்.

## நாராயண சப்தார்த்தம்.

இந்நாராயண சப்தம், நரன்பக்கலிலே பிறந்தவை, இது. (ந) (ர:) என்று பிரித்து, (ர:) என்பது அழியும் வஸ்துவைச் சொல்லி, (ந) என்பது அழியாத வஸ்துவைக் காட்டுகிறது இதனுல் (நர:) என்கிறபதம், அழியாத வஸ்து என்று ஏற்படுகிறது. இது, நாரம், அயனம், எஸ்ய, நாராயண: என்று சேர்த்தியாகிறது. நாரம் என்கிற பதம், ஜீவராசிகளுடைய கும்பலைச் சொல்லுகிறது. அய னம், என்கிற பதம், தத்புருஷ சமாஜத்தால், ஜீவர்களுக் கிருப்பிடமாயும். பஹுவ்ரிகிசமாஜத்தால் ஜீவராசிகள், தனக்கிருப்பிடமாயும் சொல்லுகிறது,

இத்தால், ப்ரணவத்தில் பரதமாக்ஷரத்தில் தோற்றின. ஜகத்காரணத்வ, ஜகத்ரக்ஷகத்வ, சேஷித்வாதிகளும் இங்கே, விசதமாகத் தோன்றுகின்றன. இவன் சர்வவஸ்துக்களி லும் உள்ளும் புறம்பும், வியாபரித்திருப்பதால், இவன் இல்லாதவிடமில்லை யென்கை.

இந்நாராயண சப்தம், நாரங்களாகிய ஜீவர்களின் சேர்க்கையால் வந்ததால், நாராயண என்றேற்பட்டது. ஜீவர்களில்லாவிடில் நாராயண, என்றபெயர் ஏற் படாது, எதுபோல வெனில், லக்ஷ்மணனுக்கு, ராமனில்லா

விடில், ராமானுஜன் என்ற பெயர் ஏற்படாதுபோல, இவனுக்கு இந்நாராயண சப்தம் காரணப்பெயராயிற்று.

நானுன்னை யன்றி யிலேன்கண்டாய்
நாரணனே நீயென்னையன்றியிலே

இத்யாதிகளும் இங்கே யனுசந்திப்பது

இங்கு அவனொருவனுக்கே சர்வாதாரத்வாதிகள், தோற்றுகையாலும், விகாரியான அசித்துக்கும், விகாரமில்லாத ஜீவனுக்கும், பிரிவு தோற்றுகையாலும் தத்வத்ரய விவேகமும் பிறக்கிறது. உபநிஷத்துக்களில் சொன்னபடி ஜீவேஸ்வரர்களுடைய சேதனத்வமும், சுபாவமான பேதமும், ஜீவர்களுடைய அந்யோபேதமும், சர்வருக்கும் ஈஸ்வரனொருவனுமே சகல அபிமத ஏதுவானபடியும் உபாய பூதனுகியதானே ப்ராப்யனுனபடியும் இதற்குச் சேர்ந்த உபயலிங்கத்துவமும், அதாவது ஒருவித தோஷமற்றவனும், எல்லா கல்யாண குணங்களையுடையவனும் என்பது. உபய விபூதியோகமும் அதாவது நித்யவிபூதி, லீலாவிபூதி, யென்கிற இரண்டும் சர்வ விதபந்துத்வமும், இத்திருநாமத்திற்குக் காரணமாக விருக்கின்றன.

1 இந்நாராயண சப்தத்திலுள்ள (ய)என்கிற சதுர்த்தி (நான்காம் வேற்றுமை)

ஸ்வரூப பரயோஜனையில் சேஷத்துவத்தைக் காட்டுகிறது. இச்சதுர்த்தி, ப்ரதமாக்ஷரத்தில் சேஷத்துவத்தைச் சொல்லுகையாலும் சேஷத்துவத்திற்கனுகுணமாக, பிரதானமான கைங்கர்யத்தை இங்கே காட்டுகிறது. இக்கைங்கர்யம் பரிபூர்ண பிர்மானுபவம் அனுபவித்து, ஆநந்தானுபவம் உள்ளடங்காமல் வருகிற ப்ரவாக கைங்கர்யம்.

இத்திருமந்தரத்தில் நிஷ்டையுடையவன் அஹங்கார மமகாரங்களை வேரோடுகளைந்து தன் ரக்ஷணத்திற்கு இதர தேவதாந்தரங்களை ப்ரார்த்திக்காமலும், கேவலதேகார்த்த வியாபாரம், நிரபேக்ஷகர்த்துத்வாபிமானம், பாகவதா பசாரம். ஆத்மநாசாதிபயம்,ப்ரயோஜநாந்தரருசி, முதலான அநர்த்தயேதுக்களில் ஆழங்கால்படடான்.

உறவையிசைந்திறையில்லா வொருவர்க்கன்றி ஒண்சுடராயொரெழுத்திலோங்கி நின்றேம், துறவறமுந்தூய்யதியும் துயரந்தீர்ப்பும் துய்யவர்கட் கானமையுமிரண்டிலுற்றேம், அறமுயலு மனைத்துறவா யனைத்து மேந்தும் அம்புயத்தாள் கணவனைநா மணுகப்பெற்றேம்,

பிறவியறுத்தடி சூடியடிமை யெல்லாம்
பிரியாதவமரருடன் பெற்றேம் நாமே
மூலமந்திராதி காரம் சம்பூர்ணம்.

---

## த்வயாதிகாரம்.

### சுலோகம்.

ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்தியே
ஸ்ரீமதே நாராயணாய நம.

இத்வயம் பூர்வோத்தர கண்டங்களாலே உபாயோபேயங்களைத் தெளிவிப்பிக்கையால் இதற்குத்வயமென்று பெயராயிற்று.

இத்வயம் பூர்வகண்டம், உத்தரகண்டம், என்று இரண்டு கண்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் பூர்வ கண்டம், ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்தியே என்பவை, இது உபாயபரம் உத்தர கண்டம் ஸ்ரீமதே

நாராயணாய நம: என்பவை உபேயபரம். உபாயமாவது சரணாகதியைச் சொல்லுகிறது. இதில் (ஸ்ரீமத்) சப்தம் லக்ஷிமியைச் சொல்லுகிறது. இல்லக்ஷிமி சப்தம் (அகல கில்லேனிரைமார்பா) என்கிறபடியே, நாராயணனோடு பிரிவற்ற சேர்த்தியைக் காட்டுகிறது (நாராயண) சப்த்தம், வாச்சல்யம், சௌலப்யம், சௌசீல்ய, சாமித்வாதி குணங்களுடைய, சர்வேஸ்வரனைச் சொல்லுகிறது. (சரணௌ) சப்தம், சரணாகதன், ப்ரபத்திபண்ணுவதற் கேதுவான திருவடிகளைக் காட்டுகிறது. இதிலுள்ள அவ் காரம், தேற்றம், அவன் திருவடிகளைத்தவிர, மற்றவர்களை சரணமாகப் பற்றுவதில்லையென்பது. (சரணம்) என்கிற பதம் சரணாகதியை உறுதிப்படுத்துகிறது. (ப்ரபத்யே) என்கிறபதம், தன்னை ரக்ஷித்துக்கொள்ள சக்தியற்றவனாகிய அகிஞ்சனன், சரண்யன் திருவடிகளை உபாயமாகக் கொண்டு மஹாவிஸ்வாசாதி அங்கங்களோடு கூடிய, பரந் நியாஸத்தைக் காட்டுகிறது.

உத்தர கண்டத்திலுள்ள (ஸ்ரீமதே) என்கிற பதம் உபாய பரனான நாராயணன், உபேயபரனாய்க்கொண்டு, அதாவது (அனுபவிக்க ஏதுவாய்க்கொண்டு) கைங்கர்யத்தை யேற்றுக்கொள்ளும் தசையிலும், லக்ஷிமியோடு பிரிவற்ற சேர்த்தியைக் காட்டுகிறது.

இக்குற்ற நாராயண சப்தம், சக்த்தித்துவ முதலிய சகல கல்யாண குணங்களோடு கூடிய பரமாத்மாவைச் சொல்லுகிறது. இதிலுள்ள நான்காம் வேற்றுமையாகிய (ய) என்பது திருமந்தரத்திலுள்ள, சதுர்த்தி, சம்மந்தத்தை காட்டுவதைப்போல, இதின் பலமான கைங்கர்யத்தைக்

காட்டுகிறது. இதிலுள்ள (நம)ப்பதம் கைங்கர்யத்தைச் சொல்லி சர்வ விரோதி நிவிர்த்தியைக் காட்டுகிறது.

ஸ்ரீமானன நாராயணன் திருவடிகளில் விரோதி நிவிர்த்தியற்ற நித்யகைங்கர்யம் பெறுகைக்கு, ஸ்ரீமானன நாராயணன் திருவடிகளிரண்டுமே சரணமாகப் பற்று கிறேன் என்பது இதில் திரண்ட பொருள்.

இப்படி இங்கும், அங்கும் திருமாலன்றி இன்மை கண்டவன் த்வயநிஷ்டன்.

என்னதுயான் செய்கின்றேன் என்னுதாருக்
கின்னடிமை தந்தளிப்பான் இமையோர்வாழும்
பொன்னுலகில் திருவுடனே யமர்ந்த நாதன்
புனலாரும் பொழிலரங்கம் திகழமன்னித்
தன் அதலம் அகலாத தகவால் ஓங்கும்
தகவுடனே தன்கருமம் தானே யெண்ணி
என்னைநய வடைக்கலங்கொண் டஞ்சல்தந்தேன்
அழலார நிழலார அளிக்கின்றானே.

(இதினுடைய விசேஷார்த்தங்கள் திருமந்தரத்திலும் சரமசுலோகத்திலும் விசதமாக நிரூபிக்கப்பட்டிருப்பதால் இங்கு விஸ்தரிக்கப்படவில்லை)

த்வயாதிகாரம் சம்பூர்ணம்.

## சரமசுலோக அதிகாரம்.

சுலோகம்.

சர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம்
சரணம் விரஜ அஹந்துவா ஸர்வ
பாபேப்யோ மோக்ஷஸ்யாமி மாசுசக:

### பத அர்த்தம்.

(சர்வதர்மாந் பரித்யஜ்ய) எல்லாதர்மங்களையும் விட்டு (மாம் ஏகம்) என்னை யொருவனையுமே (சரணம் விரஜ) சரணமாக அடை (அஹந்துவா) நான் உன்னை (ஸர்வபாபேப்யோ) எல்லா பாபங்களினின்றும் (மோக்ஷஸ்யாமி) விடுவிக்கக்கடவேன் (மாசுசக:) விசனப்படாதே.

### இதன் பொருள்.

எல்லா தர்யங்களையும் விட்டு என்னை யொருவனையுமே சரணமாக அடை, நான் உன்னை எல்லாபாபங்களினின்றும் விடுவிக்கக்கடவேன். நீ விசனப்படாதே என்பது.

## சரம சுலோக அவதாரிகை

சரமசுலோகம் என்பது, சரமம் என்பது முடிவை யுடைத்தானது. அதாவது கீதையில் முதல் அத்தியாய முதல், பதினெட்டாவது அத்தியாயம் வரையில் அர்ச்சுனனுக்கு உபதேசிக்க வேண்டிய விஷயங்களை யுபதேசித்து இதற்குமேல் உபதேசிக்கவேண்டியதில்லாத கடைசி சுலோகம் என்பதைச் சரம சுலோகம் எனப்படும்.

இச்சரம சுலோகம் ஸ்ரீயப்பதியான சர்வேஸ்வரன் சாது பரித்ராணாதி நிமித்தம், சர்வசுலபனாய், வசுதேவ புத்திரனாய் வந்தவதரித்தருளி சரணாகதரான பாண்டவர்களுக்கு இன்னார் தூதனென நின்று அர்ச்சுனனை ரதியாக்கித் தான் சாரதியாய்த் தட்டுமாரித்தாள நின்று அர்ச்சுனனை நிமித்தமாகக்கொண்டு சர்வேஸ்வரன் பூபார நிவிர்த்திக்காகக் காரணபூதனாய் நின்று; தான் சங்கல்பித்து

வந்த காரியங்களை நிறைவேற்றும் பொருட்டு, பாரதயுத்தத்தை மூட்டுவித்து நிற்கையில், அர்ச்சுனன், தன்னை நிமித்த காரணமாகக்கொண்டு சர்வேஸ்வரன் தன் ப்ரதி பக்ஷங்களை நிவர்த்திக்க நின்ற நிலையைக்கண்டு பந்துமித்ராதி விநாசத்தையறிந்து கலங்கிய மனதுடையவனாய்,

1. யச்ரேய ஸ்யாநிச்சிதம் ப்ரூஹி தந்மே, சிஷ்யதே ஹம்ஸாதிமாம், ஹித்வாம் பரபந்நம் என்று 2கார்ப்பண்ணியம் தோன்ற தர்மத்தில் சந்தேகித்து, தேவரீரை வினவுகின்றேன். எது எனக்கு நிச்சயிக்கப் பட்ட சுகமாகுமோ அதையருளும். தேவரீருக்கு நான் சிஷ்யன். தேவரீரரைச் சரணமாக அடைந்த என்னைத் தெளியச் செய்தருளும் என்பது.

என்று பிரார்த்திக்க இவனுடைய சோகநிவர்த்திக்காகவும், உலகோபகாரமாகவும், அர்ச்சுனனை வியாஜமாகக் கொண்டு உபதேசிக்கத் தொடங்கி, தேகாதிவிலக்ஷணமாய், பரஸேஷதைகரஸமான நித்யாத்ம ஸ்வரூபத்தையருளிச்செய்து, அதனால் ஸ்வரூபந் தெளிந்தவனுக்கு தர்மங்களை உபதேசிக்கத் திருவுளங்கொண்டு, பரமபுருஷார்த்தத்திற்கு பரம்பரையரன காரணங்களைக்கொண்டு கர்ம யோக ஞானயோகங்களையும், அதற்கு ஸாக்ஷாத் உபாயமான பக்த்தியோகத்தையும், அதற்குரிய இயமநியமாதி

---

1 கீதை அ. 2. சு. 7.

2 காப்ண்ணியமாவது இழகிய மனத்துடன் இதரர்களுக்குண்டாகும் துக்கத்தை சகியாமல் தான் துக்கிப்பது.

அங்கங்களோடு உபதேசித்து, நீ, பக்தியோக நிஷ்டனுய் மோக்ஷமடைவாயாக என்று நியமிக்க, அர்ச்சுனன் முன்னிலும் சோகமுடையவனுய் அஷ்டாங்க யோகங்களோடு கூடியதாயும், துஷ்கரமாயும் மத்தியில் அநேக யிடையூறுகளையுடைத்தாயும், காலவிளம்பமுடையதாயும், அந்திம ஸ்மிருதியோடு கூடின பக்தியோகம், அல்பஜ்ஞான அல்ப சக்தியாய் அல்ப காலவர்த்தியான தனக்கு கடுகத் தலைக்கட்டாதென்று கருதி, மிகவும் சோகாவிஷ்டனுய் நிற்கிற நிலையை கீதாசாரியன் கண்டு தன் பரமகிருபையாலே,

1 தைவீஸம்பத் விமோக்ஷாய நிபந்
தயாசுரீமதா । மாசுச சம்பதம்
தைவீமபிஜாதோஸி பாண்டவ ॥.

இதன் தாத்பர்யம். தைவசம்பத்து பந்த நிவிர்த்திக்கும், அசுரசம்பத்து பந்தமுண்டாக்குவதற்கும் காரணமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஏ, பாண்டவ! நீ தைவ சம்பத்தையடைய பிறந்தனையாகவிருக்கிருய், விசனப்படாதே, என்று. 2 ஆநுகூல்யாதி அங்கங்களோடு கூடினதாய், அனுஷ்டிப்பதற்கு சுகரமாய் ஒரே தடவையில் அனுஷ்டிக்கக்கூடியதாய், சர்வாதிகாரமாய் சகல பல சாதனமாய், உடனே பலம் கொடுக்கக்கூடியதாய், யாதொரு ப்ரதிபந்தகமில்லாததாய். 3 பிர்மாஸ்திர

---

1 கீதை. அ. 16. சு. 5

2 ஆநுகூல்ய சங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜனம் மஹாவிஸ்வாசம், கோப்த்ருத்வரணம், கார்ப்பண்ணியம், ஆக ஐந்து அங்கங்கள். இது ப்ரபத்திக்கு, முக்கிய அங்கம்.

துல்யமான, ரகஸ்யோபாயத்தை, சரம சுலோகத்தாலே, சகலலோக ரக்ஷார்த்தமாக அருளிச்செய்து இவ்வின துக்க மற்றவனுக்குகிறுன்.

அகிஞ்சனனும் கால விளம்பம் பொறுதவனுமே, ப்ரபத்திக்கதிகாரியாவான். மற்ற சக்தியுடையவனும், கால விளம்பம் பொறுத்தவனும், ப்ரபத்திக்கதிகாரியாகான் என்பது பெறப்பட்டது. (அவதாரிகை முற்றிற்று.)

சரம சுலோகத்தின் விசேஷார்த்தங்கள். (சர்வ தர்மாந் பரித்யஜ்ய) தர்மமாவது சாஸ்த்ர சித்தமான அபிமத சாதனம் சாஸ்த்ர சித்தமாவது கீதாசாரியன். கீழ்ச்சொன்ன, கர்மயோக, ஜ்ஞானயோக, பக்தியோகாதிகளில், ஒன்றிலும் நீ, அலேயவேண்டாம், என்கிறதைக் காட்டுகிறது. இங்கு (த்யஜ) என்கிற பதத்திற்கு, விடு, என்றர்த்தம் ஏற்பட்டிருக்க, (பரி) என்கிற உபசர்க்கம் எதற்காகவெனில், சர்வ காலத்திலும், சர்வ ப்ரகாரத்திலும்

---

3 பிர்மாஸ்திர துல்யமாவது, பிர்மாஸ்த்திரம். ஒரே தடைவையில் குறி தப்பாமல் லக்ஷியத்தையடிக்கும் என்பது, இதைப்போல ஒரே தடவை சரணுகதி செய்தவனுக்கு மோக்ஷம் சித்திக்கும் என்பது நிச்சயம். இதில் சந்தேகமுற்று மறு சரணுகதி அனுஷ்டித்தால் பிர்மாஸ்த்திரத்தில் கட்டுண்ட சிறிய திருவடியை, ராக்ஷதர்கள், பிர்மாஸ்த்திரத்தில் நம்பிக்கையில்லாது, கயிற்ருல் கட்ட, பிர்மாஸ்த்திரம் விட்டுப்போய்விட்டது. இச்சரணுகதியில் நம்பிக்கையில்லாது, மறுதடவை சரணுகதி செய்தால், முதலிற்செய்த சரணுகதி விட்டுப்போகும் என்பது. நம்பிக்கையில்லா சரணுகதனுக்கு மோக்ஷம் சித்தியாது.

ப்ரபத்திக்குரிய அங்கங்களைத் தவிர மற்ற தர்மங்களை யனுஷ்டிக்க, சக்தியற்றவனாகிய இவனுக்கு யோக்யதை யில்லை என்பதைக் காட்டுகிறது. சிலர் பரி என்கிற உப சர்க்கத்திற்கு ஸ்வரூபத்யாகத்தை விதிக்கிறது என்பர். ஸ்வரூபத்யாகத்தை விதித்தால், இவனுடைய தேக சம்ரக்ஷணாதிகளும் நடவாது. ஆகையால், பரி என்கிற உப சர்க்கத்திற்கு, தர்மங்களின் பலத் தியாகத்தைத் தெரிவிக்கிறது. முமுக்ஷுவுக்குப் பலத் தியாகம், ஸ்வரூபமாகையால், இங்கு பலத் தியாகத்தையே விதிக்கிறதென்பதை யறிக.

(மாமேகம்) என்கிறது இதில் மாம்; என்கிற பதம் சௌசீல்ய சௌலப்யாதி குணங்களோடு கூடிய என்னை, ஏகம்: என்கிற பதம்.

நான் உனக்குச் சாரதியாயிருப்பதை நினையாமல், சர்வ சுதந்திரனாயும், சர்வ சக்தித்வாதி குணங்களையுடையவனாயுமிருக்கிற என்னை, (சரணம் விரஜ) என்கிற பதம். தனக்கு வசப்படக்கூடிய 1 சாத்யோபாயத்தை விதிக்கிறான். மிகவும் விஸ்வாச பூர்வமாக, ஒரே தடவையில் செய்யக்கூடிய, ஆனுகூல்யாதி அங்கங்களோடு கூடிய பரந்யாசத்தைக் காட்டுகிறது. இது விதியென்னுமிடம், ஸ்வாரஸ்ய விசேஷத்தாலும், இத்தை விசேஷித்துக் காட்டுகிற சாஸ்த்ரங்களாலும், ப்ரசித்தம், சிலர் சம்மந்த ஜ்ஞான மாத்ரமே போதும் 2 சித்தோபாய ப்ரதிபத்தியே போதும்

1 சாத்யோபாயமாவது, ப்ரபத்தி செய்கிறவனுக்கு உபாயதசையிலிருக்கிற சரண்யனைச் சொல்லுகிறது.

என்று சொல்வதும், தன்னுடைய ப்ரயோஜநார்த்தமாக ஸ்வயத்தனம்ஒன்றும் ஆகாதென்னில், ஸ்வ வசனத்திற்கும்.

ஸ்வயயத்தனத்திற்கும், ஸ்வயயத்தநிவர்த்திக்கும், ப்ரபத்யாதிவிதிக்கும், ஈஸ்வர முகோல்லாசமே தனக்கு ப்ரதிப்ரயோஜனமாகக் கொண்டு தான் பண்ணும் கைங்கர்யத்திற்கும், தேக சம்ரக்ஷணாதி வியாபாரத்திற்கும், விரோதம் வரும். ஆகையால் ப்ரபத்தி, விதிபல ப்ராப்தம், அநுவாதமன்று இங்ஙனல்லாதபோது தற்செயலாக நேரும் சுகிர்தாதிகளும், த்வயானுசந்தான சிக்ஷாதிகளும், முமுக்ஷுக்களுக்கு அபேக்ஷிதங்கள் என்று நடத்துகிற உபதேசாதிகளுக்கும் விருத்தமாம். ஆகையால் இப்பிரபத்யாதி பரம்பரையெல்லாத்துக்கும், சுதந்தர சேஷியினுடைய சகஜ காருண்யமே, சாதாரணமான ப்ரதான காரணம் என்று இவ்வளவே அனுசந்தேயம்; அல்லாதபோது அதிப்ரசங்கம் வரும் என்பதையறிக. இப்படியால் ஆநுகூல்யாதி பரந்நியாசத்திலும், பராதீன கர்த்துத்வாதிகளை அனுசந்திப்பது.

துய்ய மனத்தர் துறை யனுகாத துணை
யிலியேன்
ஐய்ய மறுத்துன தாணை கடத்தல் அகற்றினை நீ
கையமர் சக்கரக் காவல காக்கும் திருவருளால்
வையமளந்த வடிக்கீழ் அடைக்கலம்
வைத்தருளே.

---

2 சித்தோபாயமாவது ப்ரபத்தி செய்தவன் அனுபவிக்கக்கூடிய தசையில் ஏற்கனவே சித்தமாயிருக்கிற பரமாத்மாவைச் சொல்கிறது.

இப்படி ஓர் அதிகாரி விசேஷத்திற்கு, க்ருத்யமாகத் தன் பரம கிருபையாலே நியமித்து வைத்த உபாய விசேஷத்தை உபதேசித்து.

(அஹந்துவா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்கிற வாக்யத்தாலே பரஸ்வீகர்த்தாவானவன், தன் கிருத்தியத்தை அருளிச் செய்கிறுன். 1 திரு நாராயணுஸ்த்திர விருத்தாந்தத்தை இங்கே யனுசந்திப்பது.

இதில் அஹம் என்கிற பதம், "களைவாய்துன்பம் களையாதொழியின், களைகண்மற்றிலேன்," என்ஞன் செய்கேன், இத்தியாதிகளிற்படியே தாங்களே, இதாஹி தங்களை அறிகைக்குயோக்யரன்றிக்கே பராதீனராய் தன்னுடைய ரக்ஷணத்திற்கு அசக்த்தரான நியஸ்தபரனை ஸர்வஜ்ஞத்தாலறிந்து, பரஸ்வீகாரம் பண்ணினவர்களை நினைத்த போதே, நித்ய ஸூரிகளுடைய வரிசையில் வைக்கவல்ல சுதந்தரத்தையுடையவனுய் (2. இங்கு ஜடாயுவின் விருத்தாந்தத்தை அறிக.

---

1 பாரதயுத்தத்தில், பகதத்தனேடு அர்ச்சுனன் போர் புரியும்பொழுது, பகதத்தன் நாராயணுஸ்த்ரத்தைவிட அப்பொழுது பகவான் அர்ச்சுனனுல் எதிர்க்கமுடியாததை யறிந்து யுத்த ஆரம்பத்திலேயே தன்னிடம் சரணமடைந்த அர்ச்சுனனை அதிலிருந்து, ரக்ஷிக்க விரும்பி, அலர்மேல்மங்கை யுறைகின்ற தன் மார்பில் அதையேற்று, தன்னை யாசிரியத்த அர்ச்சுனனுடைய ஆபத்தை போக்கிஞன். இதனுல் ஆசிரிதர்களின் பாபங்களுக்குத் தன்னைக் கொடுத்து நிவர்த்திப்பான் என்பது ப்ரசித்தம்.

சர்வஸ்வாமினியாய், என்றுநாம் இவர்களை அழுக்குக் கழற்றின ஆபரணத்தைப் போல அங்கீகரிப்பது என்ற அபிப்பிராயத்தையுடையவனான தன்னைக் காட்டுகிறான்.

இத்தால் சர்வ சக்த்தித்துவமுடையவனான ஈஸ்வரன் ஒருவனுக்கு விலங்கிட்டு வைத்தால், ஒரு வியாஜத்தால் விண்ணுலகந்தர விரைந்தால், சம்சார பந்தத்திலகப்பட்டிருக்கிற சர்வ தேவதைகளும் விலக்க ஒண்ணாதென்பது திண்ணம்.

(த்வா) என்கிற பதம், பக்தி யோகாதிகளுடைய துஷ்கரத்வாதிகளைக் கண்டு அவற்றில் ப்ரவர்த்திப்பதை விட்டு அளவிட முடியாத சோகமுடையவனாகையாலே, நிருபாதிக சேஷியாய், நிரபேக்ஷ சுதந்தரனாய், சர்வரக்ஷண தீக்ஷிதனான என் பக்கல், சக்தியற்றவனாய் கோரின பலத்தைப் பற்ற வேறொரு உபாயாந்தரங்களையறியாத

---

2 சடாயுபிராட்டி நிமித்தம் ராவணனோடு போர் புரிந்து அவனால் அடிபட்டுக்கிடந்த சமயத்தில், ஸ்ரீ ராமபிரான் இளைய பெருமாளோடு அங்கு வந்து, சடாயுவின் நிலைமையைக் கண்டு துக்கித்து விசாரிக்கையில், நடந்த விருத்தாந்தங்களையறிந்து, அவருடைய பூர்வோத்ரங்களைத் தெரிந்துகொண்டு, அவருடைய சரீர நிலைமையை அறிந்து, உமக்கு வேண்டுவது கேளும் என்று நியமிக்க சடாயு உம்மைத் தரிசித்த பிறகு வேண்டுவ மோக்ஷமேயென்று பிரார்த்திக்க கொடுத்தேன் என்று நியமிக்க, திர்யக்காகிய எனக்கு கிடைக்குமோவென்று சந்தேகிக்க, நான் சொன்னதாகச் சொல்லும் என்று, தன்னுடைய சர்வ சக்த்தித்துவத்தை காட்டினான் என்பது.

சாதக விர்த்தியான உன்னை, என்றபடி, (சாதக விர்த்தியாவது, சாதகபக்ஷி தாகவிடாயானால், மேகத்தினின்று விழும் ஜலத்தைத் தவிர இதர ஜலங்களை குடிப்பதில்லை என்பது.) யஜ்ஞ, தான, தபஸ், சமம், தமம், முதலிய தர்மங்களுக்குரிய மற்றெல்லா அதிகாரிகளும், ந்யாஸசப்தத்தாலே சொல்லப்பட்ட ஆத்ம நிக்ஷேபமாகிய ஆத்மயாகத்துக்கு அதிகாரியினுடைய, கோடியில் ஒரு பாகத்திற்கு உரியவர்களாகமாட்டார்கள் என்று, வேதோபநிஷத்துக்கள் கூறுகின்றன.

(ஸர்வ பாபேப்ய:) என்கிற பதம் மேல் இவனுக்குக் கழிக்க வேண்டிய அநேக விரோதி வர்க்கத்தைக் காட்டுகிறது. இங்கு பாப சப்தமாவது, சாஸ்த்ரங்களில் சொல்லுகிறபடி அநிஷ்ட சாதனம். இதுபகுவசன பலத்தாலே பாபம் அநாதிகால சஞ்சிதமாய் அநேகவித விசித்ர ப்ரவாகமாய் நிற்கிற நிலை தோற்றுகிறது. பர்பங்களுக்குக் காரணமுமாய், காரியமுமாகிற அஞ்ஞானத்தையும் அதினாலுண்டாகிய விபரீத வாசனருசிகளையும், தூலசூக்ஷம ப்ரகிருதி சம்மந்தத்தையும், பாபராசியில் சேர்க்கிறது. இதுவல்லாமல், ப்ரபத்திநிஷ்டனுக்கு சொர்காதி பதங்களுக்குச் சாதனமானவையும், பந்தகங்களாகையாலே இதுவும் பாபராசியில் சேரும். கர்ம சம்மந்தத்தோடு கூடிய ஆத்மானுபவ ரஸத்தை மோக்ஷமென்பார்கள், அதுவும் பிர்ம்மானந்தத்திலீடுபட்டவர்களுக்கு அல்ப ஆநந்தத்தையுடையது. இது கைவல்ய மோக்ஷமென்பார்கள். இது நித்ய விபூதிக்குக் கீழ்ப்பட்டதென்றும், மகா கல்பத்திலிதுவும் அழியக் கூடியதென்றும் சொல்லுவார்கள். இது

தேசிகன் திருவுள்ளம். இவனுக்கு, ப்ரபத்திக்குப்பிறகு புத்தி பூர்வகமாய் உண்டாகும் பாபத்திற்கு, ப்ராயச்சித்த பூர்வகமான புந: ப்ரபத்தி செய்துக்கொள்ளவேண்டும்.

ஸர்வ பாபேப்ய: மாசுசக, என்கிற வாக்யத்தின், சாமர்த்தியத்தாலும் ப்ராரப்தத்தின் சில பாகங்களும் கழியும் என்பது நிச்சயம். ஆகையால், "சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானல் வைகுந்தம் கொடுக்கும்பிரான்: என்கிறபடியே, புனர் ஜென்ம மின்றிக்கே யொழிகிறது. (மாசுசக:) என்கிற பதம், இப்படி ப்ரபந்நனுக்கு சர்வ பாபங்களும் கழிகையாலே, நீ பாபத்திற்கஞ்சி தபிக்க வேண்டாயென்கிற 1 சுருதியின்படியாலும், துஷ்கரோபாயங்களிலலேய வேண்டாமையாலும் விலக்ஷணோபாயம் சித்திக்கையாலும், அகிஞ்சனனுக்கு அவ்விஷயத்தில் கிர்த்திய விசேஷம் ஒன்றுமில்லாமையாலும், பின்பு விவேகிக்கு புத்தி பூர்வாபராதம் வாராமையாலும், வந்தவற்றிற்கு உசித ப்ராயச்சித்தாதிகளாலே விரைவில் உபசாந்தி யுண்டாகையாலும், நான் உன்னே ரக்ஷியாதபோது இஷ்டர்களிடத்தில் அவிஸ்வாசமும், அகீர்த்தியும், குணஹானியும், சத்திய சங்கல்ப்பன் என்கிற விரத பங்கமும், எனக்கு வரும்படியாயிருக்கையாலும், உன்னுடைய பரத்தை யேற்றுக்கொண்ட நான், தனதிரக்ஷண ந்நியாயத்தாலே (சொத்துக்குரியவன், சொத்தை ரக்ஷிக்க வேண்டிய கடமை அவனது) ஸ்வப்ரயோஜனர்த்தமாக ரக்ஷிக்க நிற்கையாலும், நீ சோகிக்க வேண்டாவென்பது இதனல் பெறப்படுகிறது.

பரந்யாஸம் பண்ணின பிறகு சோகிக்கை. அநாதி காலம் அஹங்கார மமகாரங்களாகிய படுகுழியில் வீழ்ந்து,

1 தைத்திரியோப நிஷத்து.

பழுதே பல பகலும் போயினவே, என்று சோகிக்கை ஒக்கும். ப்ரபத்திக்கு முன்பு சோகித்தானுயில்லையாகில் அதிகாரியாகான். பின்பு சோகித்தானுகில் இவ்வுபாயத்தின் ப்ரபாவத்தையும் இவனுடைய மஹாவிஸ்வாதிகளையும், ஈஸ்வரனுடைய குணாதிகளையும், அழித்தவனுவான்.

இச்சுலோகத்தின் திரண்டபொருள், மோக்ஷோபாயாந்தரங்களில் அந்வயமற்ற நீ சரணாகத வத்சலத்வாதி குணவசிஷ்டனான என் பக்கலிலே பரந்யாசத்தைப் பண்ணு, சர்வ சக்தித்துவாதி குணவிசிஷ்டனான நான், ந்யஸ்தபரனான உன்னை சமஸ்த ப்ரதிபந்தக நிவிர்த்தி பூர்வகமாக கிருதார்த்தகனுக்குகிறேன். இனி நீ, சோகிக்க வேண்டாம், என்கை.

அறியாத விடைச்சியரும் அறியும் வண்ணம்
அம்புயத்தா ளுடனந்நாள் அவதரித்த
குறையாது மில்லாத கோவிந்தா நின்
குரைகழற் கீழ் அடைக்கலமாம் குறிப்புத் [தந்தாய்
வெறியாரு மலர்மகளும் நீயும் விண்ணில்
விண்ணவர்கள் அடி சூட விருக்கும் [மேன்மை
குறையாத வினையகற்றி யடிமை கொள்ளக்
குறுக வொரு நன்னுள் நீ குறித்திடாயே.

சரமசுலோகாதிகாரம் சம்பூர்ணம்

ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் திருவடிகளே சரணம்

(குறிப்பு)

மோக்ஷத்திலிச்சையுடைய முமுக்ஷுவுக்கு விசேஷித்தறியவேண்டிய ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களையறி

வதற்கு, திருமந்தரம் ஒன்றுமே போதாநிற்க, த்வயம், சரமசுலோகம் எதற்காக வேண்டும் என்கிற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம்.

திருமந்தரம் ஸ்வரூபந்தெளிந்தவனுக்கல்லது கூடாமையாலே முற்பட திருமந்தரம் அநுஷ்டேயம். இதில் ஜீவ பரமாத்மாக்களுடைய பரஸ்பர பேதத்தையும், ஆதார ஆதேயத்வ சம்மந்தத்தையும், சேஷசேஷி பாவத்தையும், இவனுக்கு சுபாவ சித்தமான கைங்கர்யத்தையும், சப்தத்தாலும் அர்த்த சுபாவத்தாலும், காட்டுகிறபடியாலும், இது ஜப, யக்ஞ, ஒமாதிகளுக்கும், ப்ரபந்நர்க்கும், மற்றவர்களுக்கும் அநிஷ்ட நிவர்த்தி இஷ்ட ப்ராப்திகளுக்கும், ப்ரதானமாயனுஷ்டிக்கையாலும், இது சுருதிகளிலுள்ள எல்லா மந்தரங்களிலும்ப்ரதானமாகையாலும், பூர்வாசாரியர்களும் மற்றுள்ளாரும் இதை மந்திரமாகக்கொண்டு, அஷட்கர்ணமாக உபதேசித்தார்கள். ஆனால் இதுவே முமூக்ஷுவுக்கு அநுஷ்டான ஏதுவாயிருக்க, த்வயம், எதற்காகவெனில், திருமந்தரம், எட்டெழுத்தோடுகூடியதாயும், விஷயங்களை அர்த்த சுபாவத்தாலேயறியவேண்டியிருப்பதாலும், சரணாகதி நிஷ்டையை கண்டோக்த்தமாகச் சொல்லப்படாமையாலும், ப்ரபத்தி நிஷ்டன் த்வயத்தையும் அநுஷ்டிக்க வேண்டும்.

த்வயத்தில், சரணாகதி நிஷ்டனுக்கு, உபாய உபேயமாக சரண்யன் திருவடிகளையே பற்றவேண்டுமென்றும், உபாயதசையில் சௌசீல்ய சௌலப்யாதிகுணங்களையும், உபேய தசையில் சர்வ சக்தித்வாதி குணங்களையும், விசதமாகக் காட்டுகிறபடியாலும், த்வயம், ஒருக்கா லுச்சரித்தவனை சகல பாபங்களின்றும் விடுபடுவான் என்றும், கட சுருதியாதிகளில் சொல்லப்பட்டிருப்பதாலும்.

இது திருமந்த்ரம் போல கால நியதமில்லாமல், எல்லாக் காலங்களிலும் அநுசந்தானம் செய்யலாமென்று ப்ரமாணமிருப்பதாலும் அநுபவிப்பதற்கு கற்பூர நிகரம் போல போக்யமாயிருப்பதாலும், இது திருமந்த்ரத்திற்கு அடுத்தபடியாக ஆசார்யர்களால் அநுஷ்டிக்கப்பட்டு உபதேச பரம்பரையில் வருகிறது ஆகையால் இதுவும் முமுக்ஷுவுக்கு ஆவஸ்யகம்.

இது இரண்டும் நிற்க, சரம சுலோகம் எதற்காகவெனில், கீழ் இரண்டு மந்த்ரங்களிலும் சரணாகதிக்குரிய அதிகாரியை வெளிப்படையாக சொல்லப்படவில்லை சரம சுலோகத்தில்தான் கீதாசாரியன் நீ சோகிக்க வேண்டாம் என்று கண்டோக்தமாக திருவாய் மலர்ந்தருளினான். இதனால், ஆகிஞ்சின்யமுடையவன் (கைமுதலற்றவன்) ப்ரபத்திக் கதிகாரி யென்பதேற்படுகிறது.

திருமந்த்ரத்தில், ஆத்ம பரமாத்ம விபாகமும் ஆதாராதேயத்வங்களும், சேஷ சேஷித்வங்களும், த்வயத்தில் சரணாகதி நிஷ்டையும், அவனே உபாய உபேயமாயிருப்பதையும், சரம சுலோகத்தில் அதிகாரி விசேஷத்தைக் காட்டுகிறபடியாலும், இம்மூன்று மந்த்ரங்களும் முமுக்ஷுவுக்கு விசேஷித்தறியவேண்டும் என்பது. திருமந்த்ரம், பதரியாச்ச்ரமத்தில் நாராயணனால் நரனுக்குபதேசிக்கப்பட்டதென்றும் த்வயம் க்ஷீராப்தியில், க்ஷீராப்திநாதனால் பெரிய பிராட்டியாருக் குபதேசிக்கப்பட்ட தென்றும், சரம சுலோகம், அர்ச்சுனனுக்கு தேர்த்தட்டில் நின்றும் உபதேசிக்கப்பட்டதென்பதும் புராணசித்தம்.

வாழியணி தூப்புல் வருநிகமாந் தாசிரியன்
வாழியவன் பாதார விந்தமலர்—வாழியவன்
கோதிலாத் தாள்மலரைக் கொண்டாடிக்
[கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்.

R
N49

ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன் திருவடிகளே சரணம்.

சில்லரை ரகஸ்யங்களின் சாரசங்கரகம்

முற்றுப்பெற்றது.

---

PRINTED AT THE SRI NATARAJA PRESS, TURAIYUR.